# தமிழரசு

மலர். 21 இதழ்: 17, 18.

1.3.91 - 16.3.91.

JL
V211m N46
N91.21.17-18
15.3.91





மேதகு ஆளுநர் அவர்களின் தலைமையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை உயர் அதிகாரிகள் மாநாடு, சென்னை தலைமைச் செயலகத்திலுள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை மாநாட்டு அரங்கத்தில் நடைபெற்றது (16.2.'91).

# இந்த இதழில்...


| | | |
|---|---|---|
| தமிழக ஆளுநர் பதவியேற்பு | ... | 2 |
| அமைதி நிலவிட அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திடுவீர்! —மேதகு ஆளுநர் உரை | ... | 4 |
| குடிநீர் வழங்கலும் | | |
| கழிவுநீர் அகற்றலும் | ... | 6 |
| பட்டுப் பரிமாற்றகம் | ... | 9 |
| மரம் வளர்ப்போம் வளம் பெறுவோம் (கவிதை) | ... | 11 |
| அரிக்கமேட்டில் மீண்டும் அகழ்வாய்வு | ... | 12 |
| ஆடற்கலை விளம்பும் ஆலயங்கள் | ... | 16 |
| விடுவிக்கப்பட்ட தொழிலாளர்க்கு விடிவு காலம் | ... | 20 |
| ஆதிதிராவிடர் நலம் பெற அரிய திட்டங்கள் | ... | 21 |
| வளரும் வேளாண்மை | ... | 22 |
| பாவாணரும் பாவேந்தரும் | ... | 25 |
| நிறம் மாறாமல் பற்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள் | ... | 28 |



ஆணையர்
காப்பகம் மற்றும்
-600 008





தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

மாசித் திங்கள் - 17

மலர்:21 இதழ்:17

1-3-1991

# தமிழக ஆளுநர் பதவியேற்பு

159891



தமிழக ஆளுநராக திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் பதவி ஏற்றார். அவருக்கு சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி திரு. ஆனந்த் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். (15.2.1991)

*1957-72:* ராஞ்சி பல்கலைக் கழக செனட் உறுப்பினர்.

*1967:* பீகார் மாநிலக் கூட்டுறவு விற்பனைச் சங்க இயக்குநர்.

*1974-75:* பீகார் மாநிலக் கூட்டுறவு வீடுகட்ட நிதி வழங்கும் சங்கத்தின் தலைவர்.

*1974:* பீகார் மாநிலக் கடன் மற்றும் முதலீட்டு நிறுவனத் தலைவர்.

*1969:* பீகார் சட்டமன்றக் குடகு அணை நிர்மன் சமிதித் தலைவர்.
பீகார் சட்டமன்ற மதிப்பீட்டுக் குழு உறுப்பினர்.

*1967-69, 1969-72, 1972-76:* பீகார் சட்டமன்ற உறுப்பினர்.

மார்ச்-ஜுன் *1971:* பீகார் மாநிலக் கல்வி இணை அமைச்சர்.

*1972* மார்ச்-*1973:* பீகார் மாநிலப் புவியியல் சுரங்கத் துறை இணையமைச்சர்.

நவம்பர் *1973* - ஏப்ரல் *1974:* பீகார் மாநில உணவு மற்றும் வாணிபத் துறையின் அமைச்சர்.

*1967* பிப்ரவரி - *1984:* அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்.

## மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங்

### (வாழ்க்கைக் குறிப்பு)

தந்தை பெயர்: திரு ராதா பிரசாத், பிறந்த நாள்: 13.7.1933 ஊர்: பலாமு (பீகார்)

கல்வி: பி.ஏ., (பனாரஸ் பல்கலைக் கழகம்)

*1953-54* பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்தில் இளைஞர் காங்கிரஸ் அமைப்பாளர், செயலர், பாரத சேவக் சமாஜ் (பனாரஸ் இந்து பல்கலைக் கழகக் கிளை), பஞ்சாயத்து ராஜ் அமைப்புகள் பலாமு மாவட்டத்தில் ஏற்படப் பெரிதும் பாடு பட்டார்.

*1958-59:* பலாமு மாவட்டக் காங்கிரஸ் பொதுச்செயலர், மற்றும் பிரதேஷ் (மாநில) காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர்.

தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் அணி வகுப்பு மரியாதையைப் பார்வையிடுகிறார். (15.2.1991)





*1978* பிப்ரவரி - *1984:* காங்கிரஸ் செயற் குழு, மற்றும் பாராளுமன்றக் கமிட்டியின் சிறப்பு அழைப்பினர்.

*1976-1984:* ராஜ்ய சபை உறுப்பினர்.

*1977:* ராஜ்ய சபைக் காங்கிரஸ் பாராளு மன்றக் கட்சியின் துணைக் கொறடா, கொறடா.

*1980-82:* பாராளுமன்ற விவகார அமைச்சர்.

*1980:* தொலைத் தொடர்புத்துறை அமைச்ச ராகக்கூடுதல் பொறுப்பு.

அக்டோபர் *1980:* தொழிலாளர் நல அமைச்சர்.

*20* அக்டோபர் *1980* முதல்: வீட்டுவசதித் துறை அமைச்சர். 9-வது ஆசிய விளையாட்டுக் காகக் கட்டடங்கள் கட்டி சாதனை புரிந்தார்.

ஜனவரி, பிப்ரவரி *1983:* உணவு மற்றும் பொது விநியோகத்துறை அமைச்சர்.

*1984:* அசாம் மற்றும் மேகாலயா மாநில ஆளுநர் - அசாமில் நடைபெற்ற போராட்டக் காலத்தில் அசாம் ஒப்பந்தம் ஏற்பட்டதில் முக்கியப் பங்கு வகித்தார்.

*31.5.1985 - 17.7.86:* இருமுறை சிக்கிம் மாநில ஆளுநராக இருந்தார்.

*1987:* அருணாச்சலப் பிரதேச மாநில ஆளுநர்.

பயணம் செய்த வெளிநாடுகள்: நேபாளம் ஹாங்காங், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா, சிங்கப்பூர், ஜப்பான், ஆஸ்திரேலியா, குவைத், கிரீஸ், பிரான்ஸ், பெல்ஜியம், ஹாலந்து, இங்கிலாந்து, ஸ்காட்லேண்ட், அமெரிக்கா.

பொழுதுபோக்கு: குதிரைச் சவாரி, இசை, நாட்டியம் மற்றும் நாடகம் குறிப்பாக மலைவாழ் மக்களின் கிராமிய நடனங்கள்.

## சென்னை மாநகரில் குடிநீர் இணைப்பு விரிவாக்கும் திட்டம்

சென்னைக் குடிநீர் வாரியம் உலக வங்கி உதவியுடன் ரூபாய் 150.80 கோடி மதிப்பீட்டில் குடிநீர் மேம்பாட்டுப் பணிகளையும், கழிவு நீர கற்றுப் பணிகளையும் நிறைவேற்றி வருகின்றது. இத்திட்டம் 1993-94-ஆம் ஆண்டில் நிறைவு பெறும். இத்திட்டத்தின் கீழ் இதுவரை சுமார் ரூபாய் 50 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.


சென்னைக் குடிநீர் வாரியம் எடுத்துள்ள கணக்கின்படி குடிநீர்க் குழாய் இணைப்புகள்



இல்லாத 350 தெருக்களுக்கு, சென்னை நகரில் குழாய்கள் மூலமாகக் குடிநீர் அளிக்கப்பட வேண்டும் எனத் தெரிய வந்துள்ளது. இப்பகுதி களைச் சேர்ந்த பொதுமக்களிடமிருந்தும் குடிநீர் வசதி கேட்டுக் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன.

அரசு இதனைக் கருத்தில் கொண்டு, குடிநீர் இணைப்பு வசதி இல்லாத பகுதிகளுக்குக் குடிநீர் இணைப்பு வசதி அளிப்பதற்காக உலக வங்கித் திட்டத்தின் கீழ் ரூபாய் 4 கோடி மதிப்பீட்டிலான திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டம், சென்னைக் குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தினால் நடப்பு ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்படும்.



## ஆரணியாறு ஆற்றின் குறுக்கே நிரந்தர அணைக்கட்டு

கிருஷ்ணா நதி நீர்க் கால்வாய் குறுக்கிடும் ஆரணியாற்றின் மேல் பகுதியில் ஒரு நிரந்தர அணைக்கட்டு கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கி யுள்ளது.

ஆண்டுதோறும் வடகிழக்குப் பருவ மழை காலத்தில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு, ஊத்துக் கோட்டையில் அமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணா நதிநீர்க் கால்வாயின் தலைமதகிலிருந்து சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் நீர்த் தேக்கங்களுக்கு இந்த அணைக்கட்டு வழியாகத் திருப்பி விடப் படும்.

கிருஷ்ணா நதியிலிருந்து நீரைக் கொண்டு வரப்பயன்படுத்தாமல் இருக்கும் அக்டோபர்- நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களில் இந்த அணைக்கட்டிலிருந்து உபரி வெள்ளப் பெருக்கு நீர், கிருஷ்ணா நதி நீர்க் கால்வாய் வழியாகக் கொண்டு வரப்படும். சுமார் 400 மில்லியன் கன அடி வெள்ளப்பெருக்கு நீர் கடலில் கலந்து வீணாவதை இந்த அணைக்கட்டு தடுத்து நிறுத்தப் பயன்படும்.

150 மீட்டர் நீளமும், ஆற்றுப்படுகையிலிருந்து 1.5 மீட்டர் உயரமும் கொண்டதாக இந்த அணைக்கட்டு அமையும். இதன் மொத்த மதிப்பீடு ரூ.1 கோடி ஆகும்.

# அமைதி நிலவிட அனைவரும் ஒன்றுபட்டு உழைத்திடுவீர்!



மேதகு ஆளுநர்
## திரு பீஷ்ம நாராயண் சிங்

சட்டம் ஒழுங்கு பிரச்னை பெரிய அளவில் உருவாகாத வண்ணம் மாநிலத்தைத் திறமையாக நிர்வகிப்பதில் பெயர் பெற்றது தமிழ்நாடு.

தமிழ்த் தீவிரவாதிகள் குறிப்பாக விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் கவலை அளிப்பதாக உள்ளன. இலங்கையிலிருந்து வந்துள்ள ஒரு இலட்சம் அகதிகளுக்கு உணவு, தங்குமிடம் மற்றும் மருத்துவ வசதிகள் நாம் தொடர்ந்து வழங்க இருக்கிறோம். அதே நேரத்தில் அவர்களது தீவிர வாதத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும். இது நம் மாநிலத்தில் சட்டம், ஒழுங்கு மற்றும் உயிர்களுக்கும், சொத்துக்களுக்கும் பாதுகாப்பு அளிக்கும் பிரச்னை ஆகும்.

தீவிரவாதிகளின் நடவடிக்கைகளை ஒடுக்க சமீபகாலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. இந்தத் தீவிரவாத நடவடிக்கைகள் நம் மாநிலச் சட்டம் மற்றும் ஒழுங்கிற்குப் பங்கம் விளைவிப்ப

இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி

தாக இருக்காமல் கவனித்துக்கொள்ள வேண்டியது மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் காவல் துறைக் கண்காணிப்பாளர்களின் கடமையாகும்.

இந்தத் தீவிரவாதிகள் கடத்தல் ஆயுதங்களை விற்பனை செய்தல், சட்டவிரோதமான ஒயர்லஸ் மற்றும் தகவல் தொடர்புச் சாதனங்களைப் பயன்படுத்தித் தமிழ்நாட்டு மக்களின் பாதுகாப்புக்குக் குந்தகம் விளைவிக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

மதங்களின் மற்றும் இனங்களின் பெயரால் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மதச்சார்பற்ற மாநிலங்களின் முன்னோடியாகத் திகழும் தமிழ்நாட்டின் பெருமை காப்பாற்றப்பட வேண்டும்.

அடுத்து முக்கியமான பணி, தமிழ்நாடு சட்ட மன்றத் தேர்தலுக்குத் தயாராவது ஆகும். குறுகிய காலத்தில், தேர்தல் அறிவிக்கப்படலாம். இதற்கான தேவையான நடவடிக்கைகளை எடுப்பது நிர்வாகத்தின் கடமையாகும்.

வாக்காளர் பட்டியலைத் தயார் செய்வதிலிருந்து தேர்தல் நடைபெறத் தேவையான அலுவலர்கள் மற்றும் பொருட்களை ஏற்பாடு செய்தல், தேர்தலை அமைதியாக நடத்துதல் முடிய பல நடவடிக்கைகளை நிர்வாகம் எடுக்க வேண்டும்.

வளைகுடா போரினால் நாட்டின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பு கவலை அளிப்பதாக உள்ளது. எரிபொருள் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். தேசிய நலன் கருதி மதிப்புமிக்க அந்நியச் செலாவணியைப் பாதுகாக்க, பெட்ரோல் பொருட்களை சிக்கனமாகப் பயன்படுத்த அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

கடந்த சில நாட்களாக, பொது விநியோக முறை நிர்வாகத்தைச் சீர்திருத்தி, அத்தியாவசியப் பொருட்களைத் தேவையான அளவு இருப்பில் வைத்துக்கொள்ள எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் நல்ல பலனைத் தந்துள்ளன. பதுக்கலைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். இப்பொழுது நடைபெறும் அறுவடைகளைக் கொண்டு ஆண்டு முழுவதும் நியாயவிலைக் கடைகள் மூலம் திறமையாக விநியோகிக்க போதுமான அரிசி கொள்முதல் செய்யப்படும். பொது விநியோக முறையைத் திறமையாக நிர்வகிப்பதை அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ள வேண்டும். பதுக்கலை ஒழிக்கவும், விலைவாசி ஏற்றத்தைத் தடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

வடகிழக்குப் பருவமழை தவறியதன் காரணமாகச் சில மாவட்டங்களில் தண்ணீர் பற்றாக் குறை ஏற்பட்டுள்ளது. குடிநீர்ப் பற்றாக்குறையைச் சமாளிக்கத் தேவையான நிதி உடனடியாக ஒதுக்கப்படும். குடிநீர்க் குழாய்களைச் சரிசெய்யும் பணியையும் உடனடியாக நிறைவேற்ற வேண்டும். ரூ.1,450 கோடி கொண்ட இவ்வாண்டு தமிழ்நாடு திட்டங்களை விரைவாக அமல்படுத்த வேண்டும்.

வேளாண்மைக் கிராம வளர்ச்சி மற்றும் சமூகச்சேவைப் பணிகளில் தனிக்கவனம் செலுத்த வேண்டும். தீவிர அரிசி உற்பத்தித் திட்டம் மற்றும் தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் போன்ற தேசிய திட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனம் செலுத்த வேண்டும்.

மாதநதோறும் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் நடத்தப்பட வேண்டும். கிராமப்புற வேலை வாய்ப்புக்கென ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம் ரூ.172.33 கோடியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ரூ.6.64 கோடி செலவில் 455 குளங்கள் வெட்டும் திட்டமும் உள்ளது. பழங்குடியினர் மற்றும் மலை வாழ் மக்களுக்காக 2,000 விவசாயக் கிணறுகள் உடனடியாக வெட்டப்பட வேண்டும். இந்தத் திட்டங்களுக்கு ஒவ்வொரு ரூபாயும் ஏழைகளுக்குச் சென்றடைவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

68,000 மையங்களில் 84.8 இலட்சம் குழந்தைகளுக்குச் சத்துணவு வழங்கும் திட்டத்தில் அதிகக் கவனம் செலுத்தப்பட வேண்டும். புதிய சமையல் பாத்திரங்களை வாங்க நிதி ஒதுக்கப்படும். இங்கு வழங்கப்படும் உணவு சுத்தமானதாகவும், சுவையானதாகவும் இருக்க வேண்டும்.

குடிநீர்த் திட்டங்களிலும் தாழ்த்தப்பட்ட மற்றும் மலைவாழ் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர தீட்டப்பட்ட பல்வேறு திட்டங்களை அமல் படுத்துவதிலும், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தீவிரம் காட்ட வேண்டும்.

தமிழகப் பொருளாதார முன்னேற்றத்தின் விரைவான முன்னேற்றத்திற்குத் தீட்டப்பட்டுள்ள பல்வேறு திட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும். மாநிலத்தில் அமைதி நிலவினால்தான், பொருளாதார முன்னேற்றம் காண முடியும். எனவே, நல்ல அமைதியான சூழ்நிலை மாநிலமெங்கும் நிலவிட, நாம் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இந்தச் சில சிந்தனைகளுடன், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டைத் தொடங்கி வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

(16.2.'91 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில் மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

## குடிநீர்த் திட்டங்களுக்கு நிர்வாக ஒப்புதல்

**1990-91**-ஆம் ஆண்டிற்கு ரூ.13.52 கோடி திட்ட மதிப்பீட்டில் 13 நகர்ப்புறப் பேரூராட்சிகள் மற்றும் 2 நகராட்சிகளுக்குக் குடிநீர்த் திட்டங்களைச் செயல்படுத்தவும், அவற்றின் ஆண்டு பராமரிப்புச் செலவுக்காக ரூ.5.3 கோடிக்கும் அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.

குன்னத்தூர், கோட்டையூர், விக்கிரமசிங்கபுரம், திருக்காட்டுப்பள்ளி, கங்கைகொண்டான், திருக்கழுக்குன்றம், பேரையூர், சிங்கம்புணரி, வலங்கைமான், ஏரல், பாளையம், வீரப்பன் சத்திரம், ஜலகண்டபுரம் ஆகிய 13 பேரூராட்சிகளுக்கும், குழித்துறை, சத்தியமங்கலம் ஆகிய இரண்டு நகராட்சிகளுக்கும் நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன.

இத்திட்டங்களை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் முன்னுரிமை அடிப்படையில் நிறைவேற்றும்.



## இராணுவ வீரர்களுக்கு வழங்கும் ரொக்கத் தொகை உயர்வு

பிரதேச இராணுவப்படை வீரர்களில் தமிழ்நாட்டைச் சார்ந்த, பாராட்டுச் சிறப்பிதழ் பெற்ற வீரர்களுக்கு ரூ.2,500 ரொக்கத் தொகையாகவும். பாராட்டுப் பதக்கம் பெற்ற வீரர்களுக்கு ரூ.1,500 ரொக்கத் தொகையாகவும் தமிழ்நாடு அரசால் தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

மேற்குறிப்பிட்டுள்ள ரொக்கத் தொகையை அதிகரித்து வழங்குவதெனத் தமிழக அரசு தற்போது முடிவு செய்துள்ளது. இந்த முடிவின்படி, பாராட்டுச் சிறப்பிதழ் பெற்றவர்களுக்கு ரொக்கத் தொகை ரூ.3,000 ஆகவும், பாராட்டுப் பதக்கம் பெற்றவர்களுக்கு ரொக்கத் தொகை ரூ.2,000 ஆகவும் உயர்த்தி இனி வழங்கப்படும்.

# குடிநீர் வழங்குதலும் கழிவுநீர் அகற்றுதலும்

தமிழ்நாட்டில் குடிநீர் வழங்கல் நிலவரம் 1.4.1990-ன் படி கீழ்க் கண்டவாறு இருந்தது:

முழுதும் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகள் 26,847. ஓரளவுக்குக் குடிநீர் வழங்கப்படும் குடியிருப்புகள் 44,431. குடிநீர் வழங்கப் படாத குடியிருப்புகள் 5,885. மொத்தக் குடியிருப்புகள் 77,163.

1990-91-ஆம் ஆண்டுக்கான இலக்கு ரூ.52.26 கோடி பட்ஜெட் ஒதுக்கீடு பெற்றவை 5,200 குடியிருப்புகளாகும். 1990-டிசம்பர் இறுதிவரை இதில் 3,110 குடியிருப்புகள் குடிநீர் வசதி பெற்றுள்ளன. எஞ்சியவை 1991-மார்ச் மாதத்திற்குள் குடிநீர் வசதி பெறும். 20 அம்சத் திட்டத்தின் கீழ், ஆண்டு இலக்கான 2,500 மக்கள் தொகைக் கணக்கெடுப்புக் குடியிருப்புகளில் 2,125 குடியிருப்புகள் குடிநீர் வசதி அளிக்கப்பட்டுள்ளன.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதி:**

1990-91-ஆம் ஆண்டில் 3,000 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வசதியளிக்கத் திட்டமிடப்பட்டது. இதில் 1990-ஆம் ஆண்டு டிசம்பர் வரை அடைந்துள்ள முன்னேற்றம் யாதெனில், 934 ஆதிதிராவிடர் குடியிருப்புகள் ஓரளவுக்குக் குடிநீர் வசதியளிக்கப்பட்டுள்ளன; எஞ்சிய 2,066 இன்னும் அளிக்கப்பட வில்லை.

எந்த வகையிலும் குடிநீர் வசதி பெற்றிராத 5,885 குடியிருப்புகளுக்கு 1991-92-ஆம் ஆண்டில், ஏதாவது ஒரு வகையில் குடிநீர் வசதி ஏற்படுத்தித்தர திட்டமிடப் பட்டுள்ளது. கூடுதலாக, ரூ.5 கோடி செலவில் ஒரு சிறப்பு முயற்சியாக 1,500 தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்கள் குடியிருப்புகள் பணிக்கு எடுத்துக் கொள்ளப்படும்.



**வறட்சி நிவாரணத் திட்டம்:**

1990-91-ஆம் ஆண்டில், ரூ.7.5 கோடி செலவில் 3,000 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப் பட்டன. நகராட்சிகளிலும், பேரூராட்சிகளிலும் ரூ.3 கோடி செலவில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் 10 நகராட்சிகளும், 13 பேரூராட்சிகளும் பயன் பெற்றுள்ளன. சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களிலும் தற்போதுள்ள வறட்சி நிலையைக் கருத்திற்கொண்டு, 180 ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கவும், ஏனைய நிவாரணப் பணிகளுக்காகவும் அரசு ஒரு கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

**நகர்ப்புறக் குடிநீர் விநியோகம்:**

4 நகராட்சிகள், 3 நகரியங்கள் மற்றும் 171 பேரூராட்சிகள் ஆக 178 நகரங்களுக்குக் குடிநீர் வழங்கும் திட்டங்கள் தற்போது செயல்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு, 18 புதிய குடிநீர் மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்தத் திட்டமிடப் பட்டுள்ளது. தற்போது ரூ.13.52 கோடி மொத்தச் செலவில் 15 நகர்ப் புறக் குடிநீர் வழங்கும் திட்டங்களுக்கு அரசு நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது.



**உலக வங்கித் திட்டம்**

இந்தத் திட்டம் ரூ.321.86 கோடி செலவில் மீண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதுவரை 29 சிறு நகரங்களில் குடிநீர் வழங்கு திட்டமும் 14 நகராட்சிகளில் குறைந்த செலவிலான சுகாதாரத் திட்டமும் நிறைவு பெற்றுள்ளன.

**சென்னைப் பெருநகர்க் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்:**

9.11.90-லிருந்து சென்னை மாநகரில் நாள் ஒன்றுக்கு 50 மில்லியன் காலன் வீதம் மீண்டும் நாள்தோறும் குடிநீர் வழங்கப்படுகிறது. கிருஷ்ணா நதியிலிருந்து, தண்ணீர் கொண்டுவரும் சென்னைக் குடிநீர் வழங்கும் திட்டத்தின் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன; 1991-92-ஆம் ஆண்டில் இப் பணிகள் போதுமான அளவை எட்டும். இத்திட்டம் நிறைவுபெற்ற பின், தற்போதுள்ள ஓர் ஆளுக்கு 70 லிட்டர் என்பது 100 லிட்டராக உயர்த்தப்படும். சென்னை மாநகர் முழுவதும் கழிவுநீர்க் கால்வாய் வசதிபெறும். 1991-92-ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு ரூ.47.83 கோடி ஆகும்.

நாள்தோறும் குடிநீர் வழங்கும் நிலை ஏற்பட்ட பின்னரும், ஒரு சில மேம்பாட்டுத் திட்டங்களை நிறைவேற்றிய பின்னரும், ஏற்கெனவே குடிநீர் வசதி ஒழுங்காகப்பெறாது குழாய்கள் பழுதடைந்த நிலையிருந்த 1,210 வீதிகள் தற்போது 88 ஆகக் குறைந்துள்ளன. இப்போது இவ்வாறு பழுதடைந்த நிலைபெற்ற பகுதிகளில் குடிநீர் வாரியம் 1,775 தண்ணீர் லாரிகளின் மூலம் குடிநீர் வழங்குகிறது.

**தனியார் வீதிகளில் கழிவுநீர்க் கால்வாய்கள் அமைத்தல்:**

658 தனியார் வீதிகளுக்கு ரூ.6.58 கோடி செலவில் கழிவுநீர் கால்வாய்கள் அமைக்கும் பணிகளுக்கு அரசு அண்மையில் நிர்வாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 1991-ஆம்,92-ஆம் ஆண்டில் முடிவுறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இது 3.5 இலட்சம் மக்களுக்குப் பயன் அளிக்கும்.

**ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்குக் கழிவுநீர்க் கால்வாய் வசதி:**

33 ஆதி-ஆந்திரர்கள் குடியிருப்புகளுக்குக் கழிவுநீர்க் கால்வாய் வசதியளிப்பதாக அரசு 1990-91-இல் ரூ.1 கோடி அனுமதித்துள்ளது. 1991 மார்ச் மாதத்தில் இப்பணிகள் முடிக்கப்படும்.

ரூ.234 இலட்சம் செலவில் எம்.ஜி.ஆர். நகரில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி துவங்கப்பட்டுள்ளது. இது 1991 ஜூலை மாதத்தில் முடிக்கப்படும். இத் திட்டம் 98 வீதிகளில் நிறைவேற்றப் பட்டு, 35,000 மக்கள் பயன் பெறுவர். ரூ.521 இலட்சம் செலவில் சாலிகிராமத்தில் கழிவுநீர்க் கால்வாய் அமைக்கும் பணி துவங்கப் புட்டுள்ளது. இது 1991 ஆகஸ்ட் மாதம் முடிக்கப்படும். இத்திட்டம் 231 வீதிகளில் நிறைவேற்றப்பட்டு, 83,000 மக்கள் பயனடைவர்.

**கழிவுநீர்க் கால்வாய் மேம்படுத்துதல்:**

ரூ.5.7 கோடி செலவில் கழிவு நீர்க் கால்வாய்களை மேம்படுத்தும் சிறப்புத் திட்டங்களுக்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இந்தத் தொகை பழுதடைந்த கால்வாய்களைச் சீரமைக்கவும், கழிவுநீர் அகற்று நிலையங்களுக்கும், கழிவுநீர்க் கால்வாய்களைத் தூய்மைப்படுத்தும் நிலையங்களுக்கும் செலவிடப்படும். 6 நவீன கழிவுநீர்க் கால்வாய்களைத் தூய்மைப் படுத்தும் இயந்திரங்கள் மிகவும் தூய்மைப்படுத்தும் இயந்திரங்கள், கால்வாய் முடிவின் கீழ் தூய்மைப் படுத்தும் இயந்திரங்கள் போன்றவற்றில் 10 செட்டுகள் வாங்கப் படும்.

**சேற்றை அகற்றும் முறை மேம்பாடு:**

14 முக்கியக் கழிவுநீரகற்று நிலையங்களும், 72 நிலையங்களில் தண்ணீரைச் செலுத்தும் இயந்திரங்களும் 30 நிலையங்களில் சேற்றினை அகற்றும் இயந்திரங்களும் சீரமைக்கும் பணி மேற்கொள்ளப் படும். கழிவுநீர்க் கால்வாய்கள் நிரம்பி வழிவதையும், கால்வாய்களில் அடைப்புகள் ஏற்படுவதையும் இது கட்டுப்படுத்தும்.


மீஞ்சூர் கிணற்றுப் பகுதியில், 8 கி.மீ. தூரத்திற்குக் கடல்நீர் உட்புகுந்து கிணற்றுகளை அசுத்தப் படுத்தியுள்ள. கிணறுகளுக்குள் நல்ல நீரைச் செலுத்துவதன் மூலம் மீண்டும் நல்ல நிலைக்குக் கொண்டு வரும் பணியைக் குடிநீர் வாரியம் மேற்கொண்டுள்ளது. இதன் மூலம் கடல் நீர் மேலும் உட்புகாமல் தடுப்பு ஒன்று உருவாக்கப்படுகிறது. இத்திட்டம் ரூ.2.8 கோடி செலவில் இன்னும் 10 மாதக் காலத்தில் முடிவு பெறும்.

## திருவண்ணாமலை நகராட்சியில் சலவைத் துறை

உள்ளாட்சிகளுக்குச் சலவைத்துறை கட்ட நிதியுதவி அளிக்கும் திட்டத்தின் கீழ், நடப் பாண்டு 1990-91-இல் திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திலுள்ள திருவண்ணாமலை நகராட்சியில் ஒரு சலவைத் துறையை ரூ.1,35,000 மதிப்பீட்டில் கட்டுவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது.

இதில் ரூ.1,01,250 அரசு மானியமாக வழங்க அரசு ஆணைப் பிறப்பித்துள்ளது. இதனால் 250 சலவையாளர் குடும்பங்கள் பயன்பெறுகின்றன.

# வளமான வாழ்வுக்கு மதராஸ் பெர்ட்டிலைசர்ஸ் அளிக்கும் விஜய் உரங்கள்





செங்கை-அண்ணா மாவட்டத்தில்

# பட்டுப் பரிமாற்றகம்

பட்டுத் தொழில் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பளிக்கும் ஒரு குடும்பத் தொழில். வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த இத்தொழில் மிக உகந்ததாக உள்ளது. ஓர் ஏக்கரில் மல்பரி நடவு செய்வதால் 3 நபர்களுக்குப்பல முனைகளில் வேலை வாய்ப்பளிக்க வாய்ப்புள்ளது.

பட்டுத் தொழிலில் பல்வேறு பிரிவுகள் அடங்கியுள்ளன. மல்பரி செடி நடவு செய்தல்; அதன்பின் பட்டுப்புழு வளர்த்து, பட்டுக்கூடு உற்பத்தி செய்தல், பட்டு நூற்பு செய்து பட்டுநூல் உற்பத்தி செய்தல். இறுதியாக, பட்டுநூலை நெசவு செய்து பட்டுத் துணி உற்பத்தி செய்தல் இத்தனை உட்பிரிவுகள் இத்தொழிலில் அடங்கியுள்ளதால், பல தரப்பட்ட பிரிவினர், அதாவது விவசாயி முதல் நெசவாளி வரை வேலை வாய்ப்புப்பெறுகின்றனர்.

ஏனெனில், பட்டாடை கிடைக்க, மல்பரிச் செடி பயிர் செய்தலில் ஆரம்பித்து, பட்டுத்துணி நெசவுசெய்தல் வரை பல பிரிவுகள் உள்ளன.

கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்பளித்து மறுமலர்ச்சி அளித்து வருவதால் பட்டுத்தொழில் வளர்ச்சிக்குத் தமிழ்நாடு அரசு பல திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது இத்தொழில் 4,700 கிராமங்களில் செய்யப்பட்டு சுமார் 2 இலட்சம் நபர்கள் வேலை வாய்ப்புப்பெற்று வருகின்றனர். உலக வங்கியின் உதவியுடன் தேசிய பட்டு வளர்ச்சித் திட்டம் ரூ.41.77 கோடி செலவில் செயல்படுத்தப்படுவதால், மேலும் ஒரு இலட்சம் நபர்கள் வேலை வாய்ப்புப்பெறுவர்.

தேசிய பட்டு வளர்ச்சித் திட்டத்தைத் தவிர மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், ஆதிதிராவிடர் சிறப்பு நலத்திட்டம், வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம் ஆகிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திட இவ்வாண்டுக்கு ரூ.255 இலட்சம் ஒதுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் வெளிநாட்டு உதவி நிறுவனங்களாகிய சுவிஸ் மேம்பாட்டுத் திட்டம், போர்டு நிறுவனம், வேளாண்மை வளர்ச்சிப் பன்னாட்டு நிறுவனம், பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு ஆகியவற்றின் மூலம் பல திட்டங்கள் ரூ.100 இலட்சம் மதிப்பில்செயல்படுத்தப்படுகின்றன மேற்குறிப்பிட்ட விவரங்கள் மூலம், பட்டுத் தொழிலின் நிலையான வளர்ச்சிக்கு இத்துறை எடுத்து வரும் முயற்சிகளைக் கண்கூடாய்க்காணலாம்.

பட்டுத் தொழில் செவ்வனே



வளர்ச்சி அடைந்திட, சிறந்த விற்பனை முறை பல முனைகளிலும் இருத்தல் அத்தியாவசியமானது. பட்டுப்புழு வளர்ப்பாளர், பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், நெசவாளர்கள் ஆகிய எல்லோருக்கும் பயனளிக்கும் பொருட்டு நியாயமான விலை கிடைக்கச் செய்யும் வகையில் பட்டுநூல் விற்பனை முறையை அமைப்பதன் மூலம் தான், இத்தொழிலைச்சிறப்புறவும் நிரந்தரமாகவும் செய்ய முடியும்.

இந்த நோக்கத்தினைச் செயல்படுத்திட **காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு அரசு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் துவக்கப்பட்டுள்ளது.** இது மாநிலத்தில் மாவட்டங்கள்தோறும் செயல்பட்டு வருகிறது. அரசு பட்டுக்கூடு அங்காடிகளின் மூலம், பட்டுக்கூடு விற்பனைக்கு வழிவகை செய்யப்பட்டு உள்ளது. குறிப்பாக சேலம், கோயம்புத்தூர், தர்மபுரி, ஒசூர், திண்டுக்கல் ஆகிய பெரிய அளவிலான பட்டுக்கூடு அங்காடிகளில் ஏல முறையில் விற்பனை செய்யப்படுவதால், பட்டுக்கூடுகளுக்கு நியாயமான விலையும் அதே நேரத்தில் போட்டி விலையும் விவசாயிகளுக்குக் கிடைக்கிறது.

மேற்குறிப்பிட்ட ஏல அங்காடிகளில் போட்டியின் மூலம் ஏலம் நடத்தப்படுவதால் கர்நாடக மாநிலத்தில் பட்டுக்கூடுகளுக்கு அளிக்கப்படும் விலைக்குச் சமமாகத் தமிழ்நாட்டில் உள்ள அங்காடிகளிலும் விற்பனை விலை கிடைக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் மனத்திருப்தியுடன் பட்டுக்கூடுகளை விற்பனை செய்கின்றனர். இதே போன்று பட்டுநூலைப் போட்டி விலையில் விற்பனை செய்திட காஞ்சிபுரத்தில் தமிழ்நாடு அண்ணா பட்டுப் பரிமாற்றகம் அமைக்கப்பட்டுள்ளது. பெங்களூரில் செயலாற்றி வரும் பட்டுப்பரிமாற்றகம் போன்று, தமிழ்நாட்டில் பட்டு நெசவு நெய்தலில் பாரம்பரியமும் உலகப் புகழும் பெற்ற காஞ்சி நகரில், பட்டுப்பரிமாற்றகம் நிறுவப்படுகிறது.





சுமார் 60,000 கைத்தறிகள் தனியார் துறை மூலமும் கூட்டுறவு நிறுவனங்கள் மூலமும் தமிழ்நாட்டில் இயங்கி வருகின்றன. காஞ்சிபுரத்திலுள்ள பட்டு பரிமாற்றகத்தை ஆரணி, கும்பகோணம், தர்மபுரி, சேலம் ஆகிய இடங்களில் உள்ள முறுக்காளர்களும், நெசவாளர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

பட்டு நூற்பாளர்கள், முறுக்காளர்கள், நெசவாளர்கள் ஆகிய விற்பவரும் வாங்குபவரும் பரிமாற்றகத்தில் ரூ.50 செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்த்துக் கௌ்ளப்படுவர். தனியாரும் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களும் ஆகிய இருதரப்பினரும் அங்கத்தினர்களாகச் சேரலாம். டான்சில்க், காதி மற்றும் கிராமத் தொழில் வாரியம், சர்வோதய சங்கம் ஆகிய நிறுவனங்களும் அங்கத்தினர்களாக இருப்பர்.

ஒவ்வொரு உறுப்பினருக்கும் பரிமாற்றகத்தில் விற்பனை' செய்யப்படும் விவரம் குறிப்பதற்கு ஒரு பாஸ் புத்தகம் வழங்கப்படும். பட்டுப் பரிமாற்றகத்தில் உறுப்பினர்களாகப் பதிவு செய்த அனைவரும் இங்கு நடைபெறும் ஏல விற்பனையில் பங்கேற்கலாம். எல்லா வகையான பட்டு நூலும் ஏல முறையில் தான் விற்பனை செய்யப்படும். ஏலத்தில் நிர்ணயிக்கப்பட்ட விலை, விற்பனை செய்பவர் சம்மதித்த பின்னர் தான் ஏலம் உறுதிப்படுத்தப்படும். இல்லையேல், மறு ஏலத்திற்கு விடப்படும். அப்படியும் ஒரே நாளில் விற்பனையாகாத பட்சத்தில் பட்டுப்பரிமாற்றகத்தில் ஓரிரு நாட்களுக்குப் பாதுகாப்பாக இருப்பில் வைத்து அதன்பின் ஏலம் விடுவதற்குச்சந்தர்ப்பம் அளிக்கப்படும். இவ்வாறு செயல்படுவதால் பட்டு நூற்பாளர்களின் பட்டு நூலுக்குப் போட்டி விலை கிடைப்பது உறுதி செய்யப்படுகிறது.

பட்டு முறுக்காளர்களும், நெசவாளர்களும், தங்கள் தேவைக்கேற்ப தரமான பட்டுநூலை, தேவையான அளவில் தங்கள் விருப்பப்படி வாங்குவதற்குத் தாராளமான சந்தர்ப்பங்கள் கிடைக்கும். பரிமாற்றகத்தில் கோரா பட்டு, முறுக்கேற்றப்பட்ட பாவு மற்றும் ஊடை ஆகிய நூல் வகைகளை ஏலத்தில் விற்பனை செய்யலாம். இதைத்த தவிர, டுபியான் பட்டு நூலையும் விற்பனை செய்யலாம். **பட்டுப் பரிமாற்றகம் அமைக்கப்படுவதால் பட்டுத்தொழில் வளர்ச்சிக்கு முதுகெலும்பான பட்டு நூற்புத் தொழில் புத்துயிர் பெற்று நிலையான வளர்ச்சி பெற வழிவகை செய்யும்,** 'பட்டு வர்த்தகம் பல இலட்சம் கிலோ அளவில் பெருகி பல கோடி ரூபாய் மதிப்பில் வியாபாரம் நடைபெறும். எனவே, பட்டு வளர்ச்சிப் பாதையில் பட்டுப் பரிமாற்றகம் அமைப்பது ஒரு மைல் கல் போன்ற முன்னேற்றமாகும்.

பட்டுப் பரிமாற்றகம் அமைப்பதால், பட்டுத் தொழில் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக அமைந்துள்ள மல்பரி விரிவாக்கத்திற்குப்புத்துயிர் அளிக்கப்பட்டு வேகமான வளர்ச்சிக்கு ஊன்றுகோலாக அமையும். இதனால் தமிழ்நாட்டில் பட்டுத் தொழில் வெற்றி கரமாக, சீரான, திடமான நிலையில் பரவி வளர்ச்சியடையும். காஞ்சிபுரத்தில் பட்டுப்பரிமாற்றகம் செயல்படுவதால், பெங்களூரிலேயே கிடைத்து வந்த பட்டுநூல், காஞ்சிபுரத்திலேயே கிடைக்கச் செய்யும் ஒரு அரிய சந்தர்ப்பம் உருவாகும். பட்டு விற்பனை முறை நிலைப்படுத்தப்பட்டு அதனால் தமிழ்நாட்டிற்குத் தேவையான பட்டுநூலைத் தமிழ்நாட்டிலேயே உற்பத்தி செய்து சுய தேவையைப் பூர்த்தி செய்யும் குறிக்கோளை அடைய வழிவகை செய்யும்.



# மரம் வளர்ப்போம்! வளம் பெறுவோம்!


செடிகொடிகள் மரங்களைநாம்
நட்டு வைக்க ணும்-தேச
சேவைக்கென நமது பங்காய்
எடுத்துக் கொள்ள ணும்!
கொடுமையிலும் கொடுமையிது
மரத்தை அழிப்பது-நம்
குழந்தைகளை வாட்டிவதைக்கும்
செயலை நிகர்ப்பது!

நாடுவாழ வேண்டுமென்றால்
மரத்தைக் காக்க ணும்-அதில்
நன்மையுண்டு என்னவென்றால்
மழையை ஆக்குமே!
வீடுசுற்றி மரம்வைத்தால்
அழகா யிருக்குமே-பறவை
வந்துதங்கி ஆடிப்பாடும்
அழகு கிடைக்குமே!

பூத்துக் கிடக்கும் மலர்களினால்
வாசம் சேருமே-அதன்
புன்னகையில் மகிழ்ந்து தேனீ
பாடல் கேட்குமே!
பாட்டி சொல்வாள்! 'ஒரு மரத்தால்
பலருக்கு நன்மை'-அவள்
பார்வைகூட நமக்கில்லை
உண்மை, உண்மையே!

காற்றில்எழும் தூசுவீட்டில்
வராது தடுக்க-மரம்
காக்கின்றது இதையறிந்து
கொள்வாயே தம்பி!
காய்கறிகள் பழங்களெல்லாம்
தருவது மரமே-அதனால்
காசுமிச்சம் பொருள்சுத்தம்
வாழ்வோம் நலமே!

—புலவர் முத்து. எத்திராசன்



# அரிக்கமேட்டில் மீண்டும் அகழ்வாய்வு

இன்று யூனியன் பிரதேசமாகத் திகழ்கின்ற புதுச்சேரியின் ஒரு பகுதியாக அமைந்திருப்பது அரிக்கமேடு என்னும் சிற்றூராகும். பாண்டிச்சேரி நகருக்குத் தெற்கில் 5 கி.மீட்டர் தொலைவில் அரியாங்குப்பம் ஆற்றின் கரையில், வங்கக் கடற்கரை ஓரமாக அரிக்கமேடு அமைந்துள்ளது. இன்று மக்கள் நடமாட்டம் அதிகமில்லாத மண்மேடாகக் காட்சியளிக்கும் அரிக்கமேடு, ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் பன்னாட்டுத் தொடர்புகளைக் கொண்ட வணிகக் கேந்திர மையமாகத் திகழ்ந்ததற்கான ஆதாரங்கள் பலவற்றைக் கடந்த ஐம்பது ஆண்டுகளாக அறிஞர்கள் பலர் கண்டுபிடித்துள்ளனர்.

இந்தியாவின் கிழக்குக் கடற்கரையில் 'பொதுகே' என்ற வணிக முக்கியத்துவம் வாய்ந்த நகரம் இருந்ததாக, கி.பி. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த கிரேக்க நாட்டுப் பயணியான தாலமி என்பவருடைய குறிப்புகளில் உள்ளது. இந்தப் 'பொதுகே' இன்றைய புதுச்சேரியின் பகுதியாக இருக்கலாம் என்று அறிஞர்கள் கருதுகின்றனர்.

பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதிவாக்கில் (1779-81)லிசென்டில் என்ற பிரான்சு நாட்டு அறிஞர் அரிக்கமேட்டில் வரலாற்று ஆதாரங்கள் பல இருப்பதாகக் குறித்துள்ளார். அதற்குப் பிறகு 1937-ஆம் ஆண்டில் துப்ரயேல் என்ற பிரான்சு நாட்டு அறிஞர் அரிக்கமேட்டில் கள ஆய்வு செய்து பல்வேறு அரும்பொருட்களைக் கண்டுபிடித்தார். அவற்றில் மிக முக்கியமானதாகக் கருதப்படுவது ரோமானியப் பெருமன்னன் அகஸ்டசின் உருவம் செதுக்கப்பட்ட மதிப்புமிக்க மணிக்கல்லாகும். இந்த அரும்பொருட்களில் சில சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள அரும்பொருட்கள் யாவும் பிரான்சு நாட்டுக்கு அனுப்பப்பட்டு விட்டன. 1941-42-ஆம் ஆண்டுகளில் பாசெக்ஸ் என்ற பிரஞ்சுப் பாதிரியாரின் வழிகாட்டுதலின் பேரில் முதன்முதலாக அரிக்கமேட்டில் அகழ்வாய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வில் அரிய அரும்பொருட்கள் பல கண்டுபிடிக்கப்பட்டன. ஆனால், இந்த அகழ்வாய்வு சரியான நெறிமுறைகளில் செய்யப்படாததால், அந்த அரும்பொருட்களைப் பற்றிய தகவல்களைச் சரியாகத் தெரிந்து கொள்ள இயலவில்லை.

டாக்டர் அரங்க. பொன்னுசாமி
அகழ்வாய்வுப் பொறுப்பாளர்,
தொல்லியல்துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்.

பண்டைய ரோமானியப் பேரரசின் தொடர்புகள் உலகின் எந்தெந்தப் பகுதிகளில் இருந்தது என்பதைக் காண வேண்டும் என்ற அடங்காத ஆர்வம் கொண்ட ஆங்கில நாட்டு அறிஞரான மார்ட்டிமர் வீலர் அவர்கள் இந்தியத் தொல்லியல் துறையின் இயக்குநராகப் பொறுப்பேற்றுக் கொண்டதும், அரிக்கமேட்டில் அகழ்வாய்வு செய்வதற்கு ஆர்வம் காட்டினார். அதற்காக முதன் முதலாக அரிக்கமேட்டைப் பார்வையிட்டதோடு இதற்கு முன்னால் அங்கே கண்டுபிடிக்கப்பட்ட அரும்பொருட்களையும் பார்வையிட்டார். அதன்பிறகு 1945-ஆம் ஆண்டில் முறையான அகழ்வாய்வை மேற்கொண்டார். ஒழுங்கான நெறிமுறைகளின்படி முதன்முதலாக இந்தியாவில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வு இதுதான் என்று சொல்லலாம். இந்த ஆய்வின் முழுமையான தொகுப்பு 1946-ஆம் ஆண்டே வெளியிடப்பட்டது வீலரின் திறமைக்கும் அறிவுக்கூர்மைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அமைந்தது. இப்பொழுது தமிழ் நாட்டில் செய்யப்படுகின்ற அகழ்வாய்வுகள் யாவும் வீலர் அரிக்கமேட்டில் செய்த ஆய்வை அடிப்படையாகக் கொண்டுதான் செய்யப்படுகின்றன.

இதற்குப்பிறகு 1947-50-ஆம் ஆண்டுகளில் பிரான்சு நாட்டு அறிஞர் கசால் அவர்களாலும் அரிக்கமேட்டில் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பல அரிய கண்டுபிடிப்புகள் நிகழ்த்தப்பட்டன. கசால் அவர்களுடைய ஆய்வும் தொகுப்பாக வெளியிடப்பட்டாலும் அது பிரஞ்சு மொழியில் இருப்பதனால் பெரும்பாலோர் படித்துப் புரிந்து கொள்ள முடியாமல் உள்ளது.

மார்ட்டிமர் வீலருடைய ஆய்வில், வாணிபத்திற்கான பொருட்களைச் சேமித்து வைக்கப் பயன்படுத்தப்பட்ட பண்டகசாலை, நன்கு சுட்ட செங்கற்களைக் கொண்டு கட்டப்பட்ட பல்வேறு அமைப்புகளைக் கொண்ட தொட்டிகள் போன்ற கட்டடங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதையல்லாமல் கி.பி.20 முதல் கி.பி.50 வரை இத்தாலி நாட்டின் சில இடங்களில் மட்டும் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்ற அரிட்டைன் மட்பாண்டங்கள், மேலை நாடுகளிலிருந்து எண்ணெய், மது போன்ற திரவப் பொருட்களைக் கொண்டு வருவதற்குப் பயன்படுத்தப்பட்ட அம்போரா என்றழைக்கப்படும் சாடிகள் ரௌலட்டட் மட்பாண்டங்கள், கருப்பு-சிவப்பு மட்பாண்டங்கள், சிவப்பு மட்பாண்டங்கள் போன்ற மட்பாண்ட வகைகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதன்னியில் பலவண்ணக் கற்கள், சுடுமண், கண்ணாடி, கடற்சங்கு போன்றவற்றைக் கொண்டு செய்யப்பட்ட மணிகள் பேரெண்ணிக்கையில் கிடைத்துள்ளன. சுடுமண் பொம்மைகள், சங்கு வளையல்கள், எலும்பால் செய்யப்பட்ட பொருட்கள் போன்ற பல்வேறுவிதமான அரும்பொருட்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

இதுபோன்ற பொருட்கள் கசால் அவர்களுடைய ஆய்விலும் கிடைத்தன. அதோடு செங்கற்களால் பெரிதாகக் கட்டப்பட்ட நீர்த்தேக்கம், புத்தமதச் சின்னம் பொறிக்கப்பட்ட மணி ஆகியன கசால் ஆய்வின் குறிப்பிடத்தக்க கண்டுபிடிப்புகளாகும்.

ரோம் நாட்டிற்கும், தமிழகத்திற்கும் இடையில் பண்டைநாளில் சிறப்பான முறையில் பல்வேறுவிதமான வாணிபத் தொடர்புகள் இருந்ததாகச் சங்க இலக்கியங்கள் கூறுவதை உறுதிப்படுத்தும் வகையில், ரோம்நாட்டில் தயாரான பல்வேறு பொருட்கள் அரிக்கமேட்டில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டதைக் கொண்டு, பண்டைநாளில் அரிக்கமேடு மேலை நாடுகளுடன் வாணிபம் செய்வதற்குத் துணையாக இருந்த வாணிபக் கேந்திர மையமாகத் திகழ்ந்திருக்க வேண்டும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள்.

இந்த ஆய்வுகளை ஆதாரமாகக் கொண்டு, அரிக்கமேட்டில் கி.மு. 250-லிருந்து கி.பி.200 வரை தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்ததாகவும், பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு கி.பி. 9-ஆம் நூற்றாண்டிலிருந்து மக்கள் வாழ்ந்துள்ளதாகவும் ஆய்வாளர்கள் முடிவு செய்துள்ளனர்.

மேற்கூறப்பட்ட மூன்று ஆய்வுகளிலும், அதற்குப் பிறகு நடைபெற்ற கள ஆய்வுகளிலும் கிடைத்த 23-க்கும் மேற்பட்ட பானை ஓடுகளில் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளன. இந்த எழுத்துக்கள் யாவும் வெளிப்படுத்தும் மொழி தமிழ் மொழியாகவுள்ளது. பண்டைத் தமிழ்நாட்டின் மிக முக்கியமான நகரங்களாகக் கருதப்பட்ட உறையூர், காஞ்சிபுரம் போன்ற இடங்களில் நடைபெற்ற அகழ்வாய்வுகளிலும் பிராமி எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட பானை ஓடுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் 1990-ஆம் ஆண்டு சனவரி-பிப்ரவரி மாதங்களில் சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினர் அமெரிக்க நாட்டுப் பல்கலைக்கழகப் (பென்சல்வேனியா பல்கலைக்கழகம்) பேராசிரியர் சிலருடன் இணைந்து அரிக்கமேட்டில் ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த ஆய்வின் நோக்கம் முன்பு கண்டுபிடிக்கப்பட்டதைப் போல மேலும் பல ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்பதாகும், அதிலும் கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளைச் சேர்ந்த ஆதாரங்களில்தான் அதிகக் கவனம் செலுத்தப்பட்டது.

முந்தைய ஆய்வுகளில் கிடைத்ததைப்போல் அரிடைன் ஓடுகள், அம்பரோ மதுச்சாடித் துண்டுகள், ரௌலட்டட் மட்பாண்டத் துண்டுகள்



★ கலை என்பது- நெறிமுறை, வீரம், ஒழுக்கம், கற்பு, காதல் என்னும் பண்புகளைத் தரக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

—அறிஞர் அண்ணா

ஆகியவற்றோடு பலவண்ணக்கற்கள், சுடுமண், சங்கு, கண்ணாடி போன்றவற்றைக் கொண்டு செய்யப்பட்ட பல்வேறு அமைப்புகளைக் கொண்ட மணிகள், வளையல் துண்டுகள் ஆகியனவும் இந்த ஆய்வில் கண்டு பிடிக்கப்பட்டன. பெண்கள் கண்களுக்கு மைதீட்டுதற்குப் பயன்பட்டதைப் போன்று தந்தத்தால் செய்யப்பட்ட ஒப்பனைக் கருவி இந்த ஆய்வின் குறிப்பிடத்தக்க கண்டு பிடிப்பாகும். ஒரு சிறிய சிவப்பு மட்பாண்டத் துண்டில் ஒரே ஒரு பிராமி எழுத்து (தி) பொறிக்கப் பட்டுள்ளதும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. முந்தைய ஆய்வுகளில் கிடைத்த பிராமி எழுத்துக்கள் யாவும் சாம்பல் நிற ஓடுகளில் பொறிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

நன்கு சுடப்பட்ட செங்கற்களைக் கொண்டு தொட்டி போன்ற அமைப்பில் கட்டப்பட்ட கட்டடங்கள் பல முந்தைய அகழ்வாய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டன. இந்த ஆய்விலும் அருகருகே கட்டப்பட்ட இரண்டு தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இப்படியான இரட்டைத் தொட்டி இந்த ஆய்வில் மட்டும் கிடைத்திருப்பது ஒரு சிறப்பம்சமாகும்.

இந்தத் தொட்டிகள் சுட்ட செங்கற்களைக் கொண்டு நீள்சதுர வடிவில் அருகருகே கட்டப்பட்டுள்ளன. அரியாங்குப்பம் ஆற்றின் கீழ்க்கரை ஓரமாக அகழ்வாய்வு செய்யும்போது இந்தத் தொட்டிகள் வெளிப்பட்டன. இரண்டு தொட்டிகளும் நீள்சதுர வடிவில் அமைந்திருந்தாலும் அவை ஒரே மாதிரியான அளவுகளில் இல்லை. ஒன்று பெரியதாகவும் மற்றொன்று சிறியதாகவும் உள்ளது. பெரிய தொட்டியின் நீளப்பகுதி கிழக்கு-மேற்காக 2.33 மீட்டரும் அகலப்பகுதி தெற்கு-வடக்காக 1.62 மீட்டரும் உள்ளது. இன்றைய மக்களால் அவ்வப்போது செங்கற்கள் அகற்றப்படுவதனால், இந்தத் தொட்டியிலுள்ள செங்கற்களில் பல அடுக்குகளைக் காணவில்லை. அதனால் இந்தப் பெரிய தொட்டியின் தெற்குச் சுவரில் 16 அடுக்குகளும், வடக்குச் சுவரில் 14 அடுக்குகளும் கிழக்குச் சுவரில் 15 அடுக்குகளும், மேற்குச் சுவரில் 10 அடுக்குகளும் செங்கற்கள் உள்ளன.

சிறிய அமைப்பிலுள்ள தொட்டி பெரிய தொட்டியை ஒட்டினாற்



அறிஞர்தம் இதய ஓடை
ஆழநீர் தன்னை மொண்டு
செறிதரும் மக்கள் வெள்ளம்
செழித்திட ஊற்றி ஊற்றிக்
குறுகிய செயல்கள் தீர்த்துக்
குவலயம் ஓங்கச் செய்வாய்!

போல் தெற்குப் புறத்தில் அமைந்துள்ளது. இச்சிறிய தொட்டியின் நீளம் தெற்கு-வடக்கில் 2.01 மீட்டரும், அகலம் கிழக்கு மேற்கில் 1.33 மீட்டரும் உள்ளது. பெரிய தொட்டியின் நீளப்பகுதி கிழக்கு-மேற்காகவும், சிறிய தொட்டியின் நீளப்பகுதி தெற்கு-வடக்காகவும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும். பெரிய தொட்டியைப் போலவே நான்கு சுவர்களிலும் செங்கல்லடுக்குகளின் எண்ணிக்கை வேறுபட்டுள்ளது. இச்சிறிய தொட்டியின் வடக்குப்புறச் சுவரில் 15 அடுக்குகளும், தெற்குப்புறச் சுவரில் 9 அடுக்குகளும் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள சுவர்களில் தலா 14 அடுக்குகளும் செங்கற்கள் உள்ளன.

இந்தத் தொட்டிகளில் உள்ள செங்கற்கள் நன்றாகச் சுடப்பட்டும், இரண்டு வகையான அளவுகளிலும் உள்ளன. பெரிய தொட்டியிலுள்ள செங்கற்களின் அதிகபட்ச அளவு 44×28×6 செ.மீட்டரும் சிறிய தொட்டியிலுள்ள செங்கற்களின் அதிகபட்க அளவு 35 x 24 x 5 செ. மீட்டருமாகவுள்ளது. இரண்டு கட்டுமானங்களுமே அடித்தளம் எதுவுமில்லாமல் மணற்பரப்பின்மீது கட்டப்பட்டுள்ளன. இரண்டு தொட்டிகளின் சுற்றுப்புறமும் எந்தவிதமான மண்ணடுக்குமில்லாமல் ஒரே மணற்பரப்பாக இருந்தது. அதே நேரத்தில் தொட்டிகளின் உட்புறத்தில், மேற்பரப்பிலிருந்தே, மக்கள் பயன்படுத்திய பல்வேறு மட்பாண்டத் துண்டுகள் கிடைத்துள்ளன. சிறிய தொட்டியின் நடுப்பகுதியில் கருப்பு-சிவப்பு மற்றும் சிவப்பு மட்பாண்ட வகைகளைச் சேர்ந்த சிறிய அழகான சின்னங்களும் சிறுசிறு எலும்புத் துண்டுகளும் கிடைத்துள்ளது வியப்பாகவுள்ளது.

செங்கற்களை ஒன்றோடொன்று இணைத்துத் தொட்டிகளைக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்ட சாந்தானது வெறும் களிமண்ணாகவே யிருந்தது. அதில் ஏதாவது கலவை கலந்துள்ளதா என்பதை இரசாயனப் பரிசோதனைக்குப் பிறகுதான் தெரிந்து கொள்ளவியலும். தொட்டிகளின் உட்புறச் சுவர்களில் நன்றாகப் பூச்சுவேலை செய்யப்பட்டதற்கான சுவடுகள் தெரிகின்றன. தண்ணீர் அல்லது வேறு வகையான திரவப்பொருள் தேங்கியிருந்தால் தொட்டிகளின் உட்புறச் சுவர்களில் பச்சைநிறப் பாசி படிந்திருந்த சுவடுகள் தெரிகின்றன. இந்தப் பூச்சுக்குப் பயன்படுத்தப்பட்ட கலவையும், செங்கற்களை இணைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சாந்துக் கலவையும் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது.

தொட்டிகளின் தளப்பகுதியானது செங்கல் துண்டுகளும் மட்பாண்ட ஓடுகளும் கலந்த கெட்டியான களிமண்ணைக் கொண்டு ஆக்கப்பட்டுள்ளது. பெரிய தொட்டியின் மேற்குச் சுவர்ப்பகுதியின் அடித்தளத்தை ஒட்டினாற்போல ஆற்றுப் பகுதியை நோக்கி 10x6 செ.மீட்டர் அளவில் ஒரு சிறிய மதகு (Let-out) உள்ளது. தொட்டியிலிருந்து நீரை வெளியேற்றுவதற்கு இந்தச் சிறிய மதகு பயன்பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது. மதகின் அளவிற்கேற்ற சிறிய செங்கல்லைக் கொண்டு மதகு அடைத்து வைக்கப் பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

இந்த இரண்டு தொட்டிகளுமே கி.பி. முதல் நூற்றாண்டைச் சேர்ந்த போதிலும் பெரிய தொட்டியானது சிறிய தொட்டி கட்டுவதற்குச் சற்று முன்னதாகக் கட்டப்பட்டதற்கான தடயங்கள் தெரிகின்றன. ஏனென்றால், இரண்டு தொட்டிகளின் அடித்தளமும் சமமான அளவில் இல்லை. சிறிய தொட்டியின் அடிக்கல் (செங்கல்) மட்டம் பெரிய



தொட்டியின் அடிக்கல் மட்டத்தை விட 6 செ.மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. சிறிய தொட்டியின் வடக்குப்புறச் சுவரும் பெரிய தொட்டியின் தெற்குப்புறச் சுவரும் ஒரே சுவராகத் தெரிந்த போதிலும் அவையிரண்டும் தனித்தனியாக இருவேறு குறுகிய காலங்களில் கட்டப் பட்டிருக்க வேண்டும். ஏனென்றால், இந்தச் சுவர் மட்டும் அகலத்தில் இரண்டு செங்கல் அளவிலும் மற்ற எல்லாச் சுவர்களும் ஒரே செங்கல் அளவிலும் கட்டப்பட்டிருக்கின்றன. எனவே, பெரிய தொட்டி கட்டப்பட்டு சிறிது காலம் கழித்து அதனருகே தனியாகவே இந்தச் சிறிய தொட்டியும் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. சிறிய தொட்டியிலுள்ள செங்கற்கள், பெரிய தொட்டியிலுள்ள செங்கற்களைவிட அளவில் சிறியதாக இருப்பதும் குறிப்பிடத் தக்கது. ஆகவே, இந்த இரண்டு தொட்டிகளும் கி.பி, முதல் நூற்றாண்டைச் சேர்ந்தனவென்று கூறினாலும், அவையிரண்டும் அதே நூற்றாண்டின் இருவேறு குறுகிய காலகட்டங்களில் கட்டப்பட்டிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வர வேண்டியுள்ளது.

சிறிய தொட்டி கட்டும்பொழுது பெரிய தொட்டியின் உயரத்தையும் சற்று அதிகப்படுத்தியுள்ளதும் தெரிகின்றது. ஏனென்றால், பெரிய தொட்டியின் மேல்மட்ட அடுக்கிலுள்ள செங்கற்கள் சிறிய தொட்டியிலுள்ள செங்கற்களின் அளவை ஒத்திருக்கின்றன.

இதைப் போன்ற சுட்ட செங்கற்களால் கட்டப்பட்ட தொட்டி பல முன்பு நடைபெற்ற அகழ்வாய்வுகளிலும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன, என்றாலும் அருகருகே கட்டப்பட்ட இரட்டைத் தொட்டிகள் இந்த ஆய்வில் மட்டுமே கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சங்ககாலச் சோழர்களின் தலைநகராக விளங்கிய உறையூரில் (திருச்சி) சென்னைப் பல்கலைக்கழகத் தொல்லியல் துறையினர் அகழ்வாய்வு நடத்தியபோது (1965) சுட்ட செங்கற்களைக் கொண்டு இருவேறு அளவுகளில் கட்டப்பட்ட இரண்டு (இரட்டை) தொட்டிகள் கண்டுபிடிக்கப்பட்டன. இவைகள் துணிகளுக்குச் சாயம் தோய்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சாயத் தொட்டிகளாக இருக்கலாம் என்று கண்டறியப்பட்டுள்ளது. இந்தத் தொட்டிகள் கட்டப்பட்ட அதே காலத்தைச் சேர்ந்த படிவுகளில் நூல் நூற்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சுடுமண் தக்களிகள், நூற்ற நூலைக் கொண்டு துணி நெய்வதற்குப் பயன்படுத்தப்பட்ட எலும்பினாலான கட்டைகள் (Shuttles) போன்றனவும் கிடைத்துள்ளன. இதுபோன்ற அரும்


தமிழரசு
சந்தா விவரம்
தமிழ்
ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12
ஆங்கிலம்
ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)
விவரங்களுக்கு
உதவி இயக்குநர்
(விற்பனை மற்றும் விநியோகம்)
தமிழரசு, அரசினர் தோட்டம், சென்னை-600 002.


பொருட்கள் அரிக்கமேட்டில் இப்பொழுது நடத்தப்பட்ட அகழ்வாய்விலும் கிடைத்துள்ளன.

அரிக்கமேட்டில் முந்தைய ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்ட தொட்டிகளும் துணிகளுக்குச் சாயம் தோய்ப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருக்கலாம் என்று திரு. மார்ட்டிமர் வீலர் தெரிவித்துள்ளார்.

ஆகவே, இப்பொழுது அரிக்கமேட்டில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த இரட்டைத் தொட்டிகளும் துணிகளுக்குச் சாயம் தோய்க்கப் பயன்படுத்தப்பட்ட சாயத்தொட்டி தான் என்ற முடிவிற்கு வரவேண்டியுள்ளது. அத்துடன் இந்தத் தொட்டிகளின் உட்புறச் சுவர்களில் பச்சை நிறத்தில் சாயப்படிவுகள் (பாசி) படிந்திருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்தப் படிவுகளின் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு இரசாயனப் பரிசோதனைக்கு அனுப்பி வைக்கப் பட்டுள்ளது.

ஆகவே, அரிக்கமேட்டில் ஒரு காலத்தில் நெசவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றிருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட ஆதாரங்கள் தெளிவாக்குகின்றன. பல்வேறு வாணிபப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பண்டகசாலையின் இடிபாடும் முந்தைய ஆய்வுகளில் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளிலிருந்து வந்த பொருட்களான அரிட்டைன் மட்பாண்ட வகைகள், ஆம்பொரா மதுச்சாடிகள், கண்ணாடிப் பாத்திரங்கள் போன்றனவும் உள்நாட்டில் தயாரான பொருட்கள் பலவும் பேரெண்ணிக்கையில் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டிற்கும் மேலைநாடுகளுக்குமிடையில் பண்டைநாளில் சிறப்பான முறையில் வாணிபம் நடைபெற்றதாகவும், தமிழ்நாட்டிலிருந்து மேலைநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களில் துணிவகைகளும் இருந்ததாகவும் பழந்தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன.

இந்த ஆதாரங்களைக் கொண்டு, அரிக்கமேட்டுப் பகுதியான கிறிஸ்து சகாப்தத்தின் ஆரம்ப நூற்றாண்டுகளில் தொழில் மையமாகவும், வாணிப மையமாகவும் திகழ்ந்ததோடு, வெளிநாட்டு வணிகர்கள் வந்து தங்கியிருந்ததையும் உறுதி செய்கின்றன.

# ஆடற்கலை விளம்பும் ஆலயங்கள்

ஆய கலைகள் அறுபத்து நான்கினும் மிகவும் போற்றிப் புகழப்படுவது நடனக் கலையாகும். நடனக் கலையானது அனைத்துக் கலைகளையும் விடக் காலத்தால் முந்தையது என்று கூடக் கூறலாம். பேச்சுக் கலை, எழுத்துக் கலை போன்ற மற்ற கலைகள் தோன்றும் முன்பே நடனக் கலை தோன்றிவிடடது. மனிதன் என்று தோன்றினானோ அன்றே நடனக் கலையும் தோன்றி விட்டது என்று கூறலாம்.

முதன் முதலில் மனிதன் தாம் பிறருக்கு உணர்த்த நினைத்தவைகளை தம்முடைய அங்க அசைவுகளின் மூலம் வெளிப்படுத்தினான். அவ்வசைவுகளே நடனக் கலையின் தோற்றமாகும். அதற்குப் பிறகு என்று தம்முடைய உணர்ச்சிகளை ஒலிகள் மூலம் பிறருக்கு உணர்த்தத் தலைப் பட்டானோ அன்று முதலே இசைக்கலை தோன்றி விட்டது. ஆனாலும், இந்தப் பொருளை உணர்த்து வதற்கு இப்படித்தான் அசைத்தல் வேண்டுமென்ற ஒரு கோட்பாட்டை மனதில் கொண்டு அதற்கேற்ப தம் அசைவுகளை என்று ஏற்படுத்திக் கொண் டானோ அன்று முதல் முறையான ஆடல் தோன்றியது.

நடனக் கலையின் முதற் கட்டம் கூத்தே ஆகும். கூத்து என்பது குழுவாகச் சேர்ந்து, ஒரு கதையை அபிநயித்துக் காட்டுவதாகும். இத்தகைய கூத்துக்களை இந்தியாவில் இடைப் பழங்கற்காலக் காலத்தில் ஓவியமாகத் தீட்டப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

பழங்கற்கால மனிதன், வட்டமாக நின்று மகிழ்ச்சியோடு கைகோத்து ஆடுகின்ற வகையில் மத்தியப் பிரதேசம் பிம்பட்கோ மலைத் தொடர்ச்சி யில் லகஜோர் என்னுமிடத்தில் வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இவ்வோவியங்கள் சுமார் இருபது ஆயிரம் ஆண்டு களுக்கு முற்பட்டவையாகும், அதற்கு அடுத்து, இந்தியாவில் சுமார் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட நடன மாதின் செப்புத் திருமேனி ஒன்று அரப்பா நாகரீகத்தைச் சேர்ந்ததாகக் கிடைத் துள்ளது.

வரலாற்றுக் காலத்திற்கு வருவோமானால் கி.மு.500 அளவில் சிலாலின் என்பவரால் எழுதப்பெற்ற 'நடசூத்ரம்' என்னும் ஒரு நூல் இருந்ததாகக் கூறப்படுகிறது. அதற்குப் பிறகு நந்திகேஸ்வரர் எழுதிய 'பத்ரபரதார்ணவம்' என்னும் நூலும் வழக்கில் இருந்ததாக அறிய முடிகிறது. ஆனால் இவ்விரு நூல்களும் இது வரையில் கிடைக்கவில்லை. கி.மு.3-ஆம் நூற் றாண்டினது என்று சிலராலும், கி.பி. 2-ஆம் நூற்றாண்டினது என்று சிலராலும் கூறப்படும் பரத நாட்டிய சாஸ்திரம் தற்போது வழக்கில் இருக்கின்ற அனைத்து நூல்களிலும் மிகவும் பழமையானது என்றும் இது பரத முனிவரால் எழுதப்பட்டது என்றும் கூறப்படுகிறது. அதற்கு அடுத்து நந்திகேஸ்வரர் எழுதிய 'அபிநயதர்ப்பணம்' சாரங்கதேவர் எழுதிய 'சங்கீதரத்னாகரம்' நாரதர் எழுதிய 'தசரூபம்' ஆகிய வேறு நூல்களும் கிடைத் துள்ளன. ஆதலால், கிறித்து பிறப்பதற்கு முன்பு இருந்தே பரத நாட்டியம் மிகச் சிறப்பாக மக்களால் போற்றப்பட்டு வந்தது என்பது தெரிய வருகிறது.

பரத நாட்டியத்துக்கென்று பல நூல்கள் வெளி வந்திருப்பபதைக் காணுகின்றபொழுது மக்கள் மனதில் நாட்டியம் மிக ஆழ்ந்த ஆர்வத்தை ஏற் படுத்தியிருக்கிறது என்பது உணர முடிகிறது.

சங்க காலத்தில் ஆடவரும் பெண்டிரும் நாட்டியக் கலையைக் கற்றுக் கொள்வதிலும் அதனைப் பொது இடங்களில் ஆடி, பொதுமக்களுக்கு உற்சாகம் ஊட்டுவதிலும் ஆர்வம்உடையவர்களாக இருந்திருக்கிறார்கள் என்பது இலக்கியங்கள் மூலம் தெரிய வருகின்றன. நாட்டியம் ஆடுகின்ற இடம் 'ஆடு களம்' என்றும் 'அரங்கு' என்றும் பெயர் பெற்றிருந்தது. நாட்டியம் முன் இரவில் நிகழ்த்தப் பெற்றதாகவும் அறிய முடிகிறது. நாட்டியத் திற்கு முன்னோடியாக விளங்கிய கூத்தில் பல் வகை இருந்திருக்கிறது என்பது இலக்கியங்களால் புலனாகிறது. வள்ளிக் கூத்து, பேடிக் கூத்து, குரவைக் கூத்து, கழைக் கூத்து, குடக் கூத்து போன்ற பல்வகைக் கூத்துக்கள் ஆடப்பெற்றன என்பது அகநானூறு, நற்றிணை பரிபாடல் போன்ற சங்க இலக்கியங்களால் புலனாகிறது.

குரவைக் கூத்தை மலை வாழ் குறவர்களும் மீனவர்களும் ஆடினார்கள் என்று முறையே சிலம்பும் மதுரைக் காஞ்சியும், உழவர் வயலில் ஆடினர் என்று பதிற்றுப்பத்தும் கூறுகின்றன. சங்க காலத்தை மருவிய சிலப்பதிகாரக் காலத்தில் கணிகையர் நடனத்திலே சிறந்து விளங்கினார்கள்



ஆடும் அணங்கு: சிற்பம் - சோழர் காலம். சிதம்பரம் நடராசர் கோயில்



ஆடும் அணங்கு: சிற்பம் - சிதம்பரம் நடராசர் கோயில். சோழர் கலை.



ஆடு மகள் சித்தன்னவாசல் ஓவியம் - பாண்டியர் காலம்.

**நடன. காசிநாதன்**
இயக்குநர்
தொல்பொருள் ஆய்வுத் துறை



இசைக் கலைஞர்களுடன் தோன்றும் நாட்டிய மகளிர்: நடராசர் கோயில் சிற்பங்கள் - சிதம்பரம்.

என்பதும், மாதவி தலைசிறந்த நாட்டிய மங்கையாகத் திகழ்ந்தார் என்பதும், அவளுடைய நடனத் திறமையைக் கண்டுவியந்த மன்னன் அவளுக்குத் ''தலைக் கோலி'' என்ற விருதை அளித்துப் பாராட்டினான் என்பதும் சிலம்பு செப்பும் செய்திகளாகும். ஆதலால் கி.பி.4 அல்லது கி.பி.5 ஆம் நூற்றாண்டு அளவில் ஆடற்கலை மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுவிட்டது என்பது தெரிய வருகிறது. ஆடல்களை இறைவனே ஆடியதாகவும், பதினோரு வகையான ஆடல் இறைவனால் ஆடப்பெற்றது என்றும் கூறப்படுகிறது.

அவை: 1. அல்லிக் கூத்து, 2. கொடுகொட்டியாடல், 3. குடையாடல், 4. குடக் கூத்து, 5. பாண்டரங்கம், 6. மல்லாடல் 7. துடிக்கூத்து, 8. கடையக் கூத்து, 9. பேடாடல், 10. மரக்காலாடல், 11. பாவைக் கூத்து என்பவையாகும்.

இவற்றில் முதல் ஆறு ஆடல்களும் நின்று ஆடுவது என்பதையும்; பின்வரும் ஐந்தும் வீழ்ந்து ஆடுவது என்பதையும் கீழ்வரும் பாடல் புலப்படுத்துகிறது.

''அல்லியும் கொடி குடை குடம் பாண்டரங்கம்
மல்லுடன் நின்று ஆடல் ஆறு''

''துடி கடையம் பேடு மரக்காலே பாவை
மடிவுடன் விழுந்தாடல் ஐந்து''

- மேற்காணும் ஒவ்வொரு கூத்தும் எக்காலத்து இறைவனால் ஆடல் பெற்றது என்பதை அடியார்க்கு நல்லார் தம் உரையில் விரிவாக விளக்குகிறார். மேலும், தன் காலத்திலிருந்த இரு நாட்டிய நூல்களான 'கூத்தநூல்' 'பரதசேனாபதியம்' ஆகிய இரு நூல்களையும் மேற்கோள் காட்டியுள்ளார்.

இந்தியாவில் குப்தர்கள் ஆட்சி செய்த காலத்தைப் பொற்காலம் என்று வரலாற்று ஆசிரியர்கள் வருணிப்பர். அவர்கள் காலத்தில் அனைத்துக் கலைகளும் நன்கு வளர்ச்சியுற்றன. குப்தர்கள் காலத்தைச் சார்ந்ததாகக் கருதப்படும் ஓவியங்கள் சில விந்திய மலைச் சாரலில் உள்ள பாக் என்னும் ஊருக்கு அருகில் காணப்படும் மலைக்குகையில் தீட்டப்பட்டுள்ளன. அங்கு காணப்பெறும் பல்விதக் காட்சிகளில் நாட்டியச் சிறப்பை எடுத்து இயம்பும் காட்சியும் உள்ளது. நடன மகளிர் சிலர் வட்டமாக நின்று கொண்டு கோலாட்டம் அடிப்பது போன்று ஒரு காட்சி மிக எழிலுடன் தீட்டப்பட்டிருக்கிறது. குப்தர் கால நடனக் கலை வளர்ச்சிக்கு இவ்வோவியம் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது.

தமிழ்நாட்டில் புதுக்கோட்டைக்கு அருகிலுள்ள சித்தன்னவாசலில் காணப்பெறும் குகைக் கோயிலில் நடன மங்கையர் இருவர் ஓவியங்கள் ஒப்பிலா அழகுடன் மிளிர்கின்றன. இவ்வோவியம் கி.பி. 9-ஆம் நூற்றாண்டில் தீட்டப்பட்டிருக்கும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கணித்துள்ளனர். இந் நாட்டிய அரம்பையர்கள் இருவரின் ஓவியங்களும் நாட்டியக்'கலைக்கு இலக்கணமாகத் திகழ்கின்றன. இடப்புறத் தூணில் தீட்டப்பட்டிருக்கிற ஓவியம் இடக் கரத்தைக் கஜ ஹஸ்தமாக வீசி, வலக் கரத்தில் அபயம் காட்டி, மலர் முகத்தை இலேசாக இடப்பக்கம் திருப்பி, உடலை வலப்பக்கம் சாய்த்து ஆடும் பாங்கு பார்ப்போர் மனதைப் பரவசமூட்டும் நிலையில் உள்ளது.

மாமன்னன் இராசராசனால் எழுப்பப்பட்ட தஞ்சைப் பெருவுடையார் கோயில் உண்ணாழியின் பின்புறச் சுவரில் தீட்டப்பட்டிருக்கும் பல ஓவியங்களில் ஒரு நடன மாதின் உருவம் உலகப் புகழ் பெற்ற ஓவியமாகும். இவ்வோவியத்தில் காணப்படுவது போன்ற நாட்டிய மகளிர்கள் 400 பேர் தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் ஒவ்வொரு நாளும் இறைவன் திருவடி முன்பு தம் ஆடற் கலையை அர்ப்பணித்து வழிபட்டிருக்கின்றனர் என்பது தஞ்சைப் பெருவுடையார் கோவிலில் எழுதப்பெற்றிருக்கும் கல்வெட்டுகள் மூலம் புலனாகிறது. இதே கோவிலில் இறைவன் ஆடிய தாண்டவக் கரணங்கள் 108-இல் 81 கரணங்கள் கல்லிலே வடிக்கப்பட்டு அழகுறக் காணப்படுகின்றன. ஆதலால், தஞ்சையில் நடனக் கலையைக் கற்றுத் தரும் நாட்டியக் கல்விச் சாலையே இருந்திருக்குமோ என்ற ஐயம் எழுகிறது. மேற்காணும் சிற்பங்கள் மற்றும் ஓவியங்களின் காலம் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முற்பட்டவையாகும்.

இறைவனை ஆடல் வல்லவனாகச் சித்திரித்துக் காட்டும் அற்புதத் திருமேனி தமிழகத்தில் தனிச் சிறப்புப் பெற்ற திருமேனியாகும். இத்திருமேனியைக் கண்டு வியக்காத மாந்தர் இன்ம் உலகத்தில் எந்தப் பகுதியிலும் இல்லை என்று கூறலாம். இந்தியாவிற்குப் பெருமை சேர்க்கும் பல்விதக் கலைப் பொருட்களில் தமிழகத்தைச் சார்ந்த 'ஆடல் வல்லான்' திருமேனி உன்னதக் கலைக் கருவூலமாகும். இறைவன் ஆடியதாகப் பல்வித நடனங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஒவ்வொரு சமயத்திலும் ஒவ்வொரு நடனம் இறைவனால் ஆடப்பட்டது என்று தெரிய வருகிறது. சிவபெருமான் ஆண்களுக்குரிய 'தாண்டவ' நடனத்தையும்; உமையவள் பெண்களுக்குரிய 'லாஸ்ய' நடனத்தையும் உருவாக்கினார்கள் என்றும் திருமால், நாட்டியத்தின் நான்கு வகை பாணிகளையும் உருவாக்கினார் என்றும், பரதர் நாட்டியக் கலையினை உலகுக்கு அறிமுகப்படுத்தினார் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. சிவன் ஆடியதாகக் கூறப்படும் பல்வகை ஆடல்களில் 'கொடிகொட்டி' 'பாண்டரங்கம்', கபாலம் ஆகிய மூன்றும் வியந்து போற்றப் படுகின்றன. ஊர் எரிகின்ற காலத்து இறைவன் கை கொட்டி ஆர்த்து ஆடியதால் இதற்கு 'கொடி கொட்டி' 'கொட்டி தேசம்' எனவும் பெயர்கள் வழங்கப்பட்டன, என்று குறிக்கப்படுகிறது. இறைவன் கொடுகொட்டி என்னும் திருக் கூத்தை ஆடும் போது இறைவி அருகில் நின்று தமது கைகளில் சீர் எனும் தாளத்தைக் கொட்டினாள் என்று கலித் தொகை கூறுகிறது.

இறைவன் மூன்று புரங்களையும் அழித்து அவுணர்கள் வெந்து வீழ்ந்த சாம்பலைப் பூசி ஆடுவது 'பாண்டரங்கம்' என்று கூறப்படுகிறது. பாண்டரங்கக் கூத்தை இறைவன் ஆடியபோது உமையவள் அருகில் நின்று தூக்கு என்னும் தாளத்தைக் கொட்டியதாகக் கலித்தொகை கூறுகிறது. கொடுகொட்டி, பாண்டரங்கம் ஆகிய இரண்டு கூத்தும் சிவன் திரிபுரம் எரித்த நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டு ஆடப்பட்டவை. கபாலத்தைக் கையில் ஏந்தி சிவபெருமான் ஆடும் கூத்து 'கபாலக் கூத்து' என்று வழங்கப்பட்டது.

கூத்துக்களின் நாயகனாக விளங்கும் சிவ பெருமான் காளிதாண்டவம், கௌரிதாண்டவம், ஆனந்த தாண்டவம் என்று எழுவகைத் தாண்டவத்தையும் ஆடியுள்ளான் என்றும்; ஆனந்த தாண்டவம் அனைத்து தாண்டவங்களுக்கும் சிகரமாக அமைந்துள்ளது என்றும் கருதப்படுகிறது.

ஆக்கல், அழித்தல், காத்தல், அருளல், மறைத்தல் எனும் ஐந்தொழிலையும் ஒரு சேரச் செய்யும் தாண்டவம் ஆனந்த தாண்டவம் என்று போற்றப் படுகிறது. அது மட்டுமல்லாமல், நிலம், நீர், தீ, காற்று விசும்பு என்ற ஐம்பூதங்களையும் ஒரு சேர இணைத்து அனைத்துக்கும் தாமே ஆதாரம் என்பதையும் காட்டுவதாகக் கொள்ளலாம் என்று தோன்றுகிறது.

இறைவனின் ஊன்றிய திருப்பதம் நிலத்தையும், முடியில் அணிந்துள்ள கங்கை நீரையும், இடக்கையில் ஏந்தியுள்ள அனல் தீயையும், இருபுறமும் பறந்து செல்கின்ற விரிசடையும் ஆடையும் காற்றையும், பிரபை விசும்பையும் சுட்டுவதாகக் கருதலாம்.



நடன மங்கை ஓவியம்: சித்தன்னவாசல்,
கி.பி. 9-ஆம் நூற்றாண்டு.

எனவே, பஞ்ச பூதத்துக்கும் நாயகனாக இருந்து, பஞ்ச தொழில்களையும் செய்கின்ற செயலை வெளிப்படுத்துவதே ஆனந்த தாண்டவத்தின் உட் கருத்து என்று உணர்த்துகிறது.

திருநெல்வேலி மாவட்டம் கடையநல்லூருக்கு அருகில் உள்ள திருமலைப்புரம் கோயிலில் பாண்டியர் கால ஓவியம் காணப்படுகிறது. இவ்வோவியத்தின் ஓரிடத்தில் நடமாடும் மங்கையும் மத்தளம் கொட்டும் மற்றொரு உருவமும் தீட்டப் பட்டுள்ளன. இதனை அடுத்து சைவர்களால் கோயில் என்று போற்றிப்பாராட்டப்படும் தில்லை நடராசப்பெருமான் ஆலயத்தில் மேற்குக் கிழக்குக் கோபுரங்களில் நடன மங்கையர்களின் சிற்பங்களும் அச்சிற்பங்களின் கீழே அவை என்னென்ன கரணங்களைத் தெரிவிக்கின்றன என்றும் எழுதப் பெற்றுக் காணப்படுகின்றன. அதே போன்று குடந்தைச் சாரங்கபாணி கோயில் கோபுரத்திலும், திருமுதுகுன்றம் திருவண்ணாமலை அண்ணாமலை ஆலயங்களின் கோபுரங்களிலும் நடனச் சிற்பங்கள் செதுக்கப்பெற்று நடனக் கலையின் மேன்மையைப் பறை சாற்றுகின்றன.

ஆதலால், இந்தியத் திருநாட்டில் ஆடற்கலையானது கற்காலம் தொடங்கி தற்காலம் வரை நிலைத்த புகழோடும் பெருமையோடும் தொடர்ந்து விளங்கி வருகிறது என்பதை நாம் அறிந்து இன்புறலாம்.

# விடுவிக்கப்பட்ட தொழிலாளர்க்கு விடிவு காலம்

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் உள்ள, எல்லப்பட்டி என்ற கிராமம் மல்லீஸ்வரன் மலைத் தொடரில் உள்ள மலை அடிவாரத்தில் ஒட்டன்சத்திரத்தில் இருந்து வடகிழக்கில் 21 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ள கிராமம் ஆகும்.

விடுவிக்கப்பட்ட தொழிலாளருக்கு ஒதுக்கப்பட்ட இடம் இது. மலை அடிவாரத்தில் சிறிய மலைக்குன்றுகளுக்கு இடையில் இது அமைந்துள்ளது. விடுவிக்கப்பட்ட தொழிலாளருக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தின் மேல் பரப்பு கெட்டியாகவும், சில இடங்களில் மண் மேடுகளாகவும் உள்ளன. இந்த நிலம் இவ்வாறு ஏற்பட்டதற்குக் காரணம் பல ஆண்டுகளாகக் காற்றினால் ஏற்பட்ட மண் அரிப்பு ஆகும். மேலும், மழை குறைவாகப் பெய்வதன் காரணமாக இதன் மேல்பரப்பு கெட்டியாக உள்ளது. மேற்கண்ட நிலங்களை வளப்படுத்துவதற்காகவும், நிலத்தின் வருவாயை அதிகப்படுத்துவதற்காகவும் கீழ்க்கண்ட வளப்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வேளாண்மைப் பொறியியல் துறையின் மண்தள்ளும் இயந்திரங்கள் நிலத்தைச் சமப்படுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன, நிலம் கெட்டியாக உள்ள இடங்களில் வெடி மருந்துகள் பயன்படுத்தப்பட்டு, கெட்டியான நிலம் உடைக்கப்பட்டு விளைச்சலுக்கு ஏற்றதாக மாற்றப்படுகின்றன. மேற்கண்ட கிராமத்தில் உள்ள விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் 3 விழுக்காடு முதல் 15 விழுக்காடு வரை நிலம் சரிவாக உள்ளது.

இத்துறையில் உள்ள உழுவை இயந்திரங்கள் மூலம், நிலத்தைச் சமப்படுத்திய பிறகு நிலம் உழுதல் செய்யப்படுகின்றது. உழுவை இயந்திரங்களில் சட்டிக் கலப்பைகளும், கொக்கிக் கலப்பைகளும் நிலத்தின் தன்மைக்கு ஏற்பப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

நிலம் சமம் செய்த பின்பும் மற்றும் உழுதல் பணி செய்த பிறகும் வண்டல் மண் இடப்படும். வண்டல் மண் இடுவதற்கு முன், இந்த நிலத்திற்கு வண்டல் மண் தேவை பற்றி, நிலத்தில் உள்ள சத்துக்கள் அளவைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகவே, மண் பரிசோதனைக்காக, நிலத்தில் உள்ள மண்ணை, மதுரை திருநகரில் உள்ள அரசு மண் பரிசோதனை ஆய்வகத்திற்கு அனுப்பப்படும். மண் பரிசோதனை அறிக்கைகளைப் பார்த்த பிறகு, வண்டல் மண் நிலத்திற்கு இடப்படும்.

மேற்கண்ட நிலங்களில் உள்ள ஓடைகளில் மண் அரிப்பைத் தடுப்பதற்காக ரூ.7,000 முதல் ரூ.10,000 வரையில் மதிப்பீடு தயார் செய்து தடுப்பணைகள் கட்டப்படும்.

எல்லப்பட்டி கிராமத்தில் விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காகத் திறந்த கிணறுகள் 11 எண்கள், ஒன்றின் மதிப்பு சுமார் ரூ.50,000 மதிப்பீட்டில் மற்றும் ஒரு கிணறு ரூ.62,000 மதிப்பீட்டில் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

6.15 எக்டேர் நிலப்பரப்பில் சுமார் ரூ.0.40 இலட்சம் மதிப்பில் சம உயரக் கற்கோட்டை பணி செய்யப்படும். இந்தச் சம உயரக் கற்கோட்டைப் பணிகள் படிமட்டப் பணிகள் முடிவுற்ற பிறகு செய்யப்படும். இந்தப் பணிகள் இத்துறையின் விதிகளின்படி செய்யப்படும்.

49.51.5 எக்டேர் நிலத்தில் ரூ.0.175 இலட்சம் மதிப்பில் குண்டுப்பட்டி கிராமத்தில் மரம் நடும் பணி செய்யப்படவுள்ளது. விடுவிக்கப்பட்ட தொழிலாளர்களின் விருப்பத்தின்படி பிளம்ஸ், பீச்சஸ், கீரான்டில் போன்ற மரக்கன்றுகள் நடப்படும்.

சுமார் ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் நிலத்தைச் சமப்படுத்துதல், ஆழ உழுதல், திறந்த கிணறு மற்றும் குழாய்க் கிணறு அமைத்தல், தடுப்பு அணைகள் கட்டும் பணி ஆகியவை மேற்கொள்ளப்பட இருக்கின்றன.

விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலத்தைச் செப்பனிடும் பணியை, திண்டுக்கல்-காயிதேமில்லத் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சக்திகாந்த தாஸ் அவர்கள் பார்வையிடுகிறார்.



தென் ஆர்க்காடு மாவட்டம்

# ஆதிதிராவிடர் நலம் பெற அரிய திட்டங்கள்

வறுமைக்கோட்டின் கீழ் நலிவுற்று வாழ்கின்ற ஆதிதிராவிட மக்களின் ஏழ்மையைப்போக்கி வளம் பெறச் சிறு தொழில்களை நடத்தி வாழ்க்கையில் முன்னேற சுயவேலைவாய்ப்புக் கடன் வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன.

880 பேர்களுக்கு ரூ.52.80 இலட்சம் கடனாக, அதில் ரூ.26.40 இலட்சம் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயிக்கப் பட்டு, இதுவரை இத்திட்டத்தின் கீழ் பெட்டிக்கடை, மளிகைக் கடை, சைக்கிள் கடை, ஒலிபெருக்கி, மாவு அறைக்கும் இயந்திரம், பாய் முடைதல், செங்கல் காளவாய், சுண்ணாம்புக் காளவாய், காலணிகள் தயாரித்தல், காய்கறிகள் விற்பனை, கயிறு உற்பத்தி போன்ற இனங்களில் 563 பேர்களுக்கு ரூ.16,80,000 மானியம் வழங்கி செலவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், தாட்கோ மூலம் வேளாண்மை மற்றும் சுயவேலை வாய்ப்புப் பயிற்சி ஆகிய திட்டங்களும் செயல்படுத்தப்படு கின்றன. அதன் விவரம் வருமாறு:

## தொழில் நுட்பப் பயிற்சித் திட்டம்

இதில் ஏழை ஆதிதிராவிடர்களுக்குத் தொழிற் பயிற்சி இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. 60 நபர்களுக்கு ரூ.1.56 இலட்சம் மதிப்பில் பயிற்சி அளிப்பதற்கு இலக்கு நிர்ணயம் செய்து, இதுவரை 60 நபர்களுக்கும், ரூ.1.56 இலட்சம் மதிப் பில் இலவசத் தொழிற் பயிற்சி வழங்கப் பட்டுள்ளது.

## ஆழ்குழாய்க் கிணறு அமைத்தல்

இத்திட்டத்தில் ஏழை ஆதிதிராவிடர் களுக்கு ஆழ்குழாய்க் கிணறு அமைக்க மானியத்துடன் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் 10 நபர்களுக்கு ரூ.1 இலட்சம் வழங்குவதற்கு இலக்கு நிர் ணயம் செய்யப்பட்டு, இதுவரையில் 10 நபர்களுக்கும் ரூ.1 இலட்சம் வழங்கப் பட்டு விட்டது.

## மின்சார மோட்டார் மற்றும் பம்ப் செட் வழங்குதல்

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு மின்சார மோட்டார் மற்றும் பம்பு செட் கடனாக மானியத்துடன் வழங்கப்படு கிறது. 1990-91 இல் 35 நபர்களுக்கு ரூ.1.4875 இலட்சம் வழங்குவதற்கு இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இது வரை 35 நபர்களுக்கும் ரூ.1.4875 இலட்சம் மதிப்புள்ள மோட்டார் பம்ப் செட்டுகள் வழங்கப்பட்டுள்ளன.

## மோட்டார் அறை கட்டுதல்

இதில் ஆதிதிராவிடர்களுக்கு மோட்டார் அறை கட்டிக் கொடுக்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டில் 20 பேர் களுக்கு ரூ.30 ஆயிரம் மதிப்பில் கட்டிக் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 3 நபர்களுக்கு ரூ.4,500 வழங்கப்பட்டுள்ளது.

## மாட்டு வண்டியும், இரு மாடுகளும்

இத்திட்டத்தில் ஆதிதிராவிடர்களுக்கு ஒரு இணை மாட்டு வண்டியும், மாடும் வழங்கப்படுகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 100 பேருக்கு ரூ.3 இலட்சம் கொடுக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 100 பேருக்கு ரூ. 3 இலட்சம் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

## டயர் வண்டி மற்றும் இருமாடுகள் வாங்க

இதில் ஏழை ஆதிதிராவிடர்களுக்கு டயர் பொருந்திய இரட்டை மாட்டு வண்டியும், இரண்டு மாடுகளும் வாங்க கடன் வழங்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டிற்கு 100 நபர்களுக்கு ரூ.6 இலட்சம் கடன் வழங்க இலக்கு நிர்ண யிக்கப்பட்டு இதுவரை 100 பேர்களுக்கும் ரூ.6 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## உழவு மாடுகள் வாங்க

இத்திட்டத்தின் கீழ், ஏழை ஆதி திராவிடர்களுக்கு உழவு மாடு வாங்கக் கடன் வழங்கப்படுகிறது. 1990-91-ஆம் ஆண்டிற்கு 200 நபர்கள் உழவு மாடு வாங்க ரூ.3.270 இலட்சம் இலக்கு நிர்ண யிக்கப்பட்டு, இதுவரை 175 நபர்களுக்கு ரூ.2,86,125 மதிப்பில் உழவு மாடு வாங்கக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

## பவர் ஸ்பிரேயர் மற்றும் ஒரு சைக்கிள்

ஏழை ஆதிதிராவிடர்களுக்கு இத் திட்டத்தில், பவர் ஸ்பிரேயர் மற்றும் ஒரு சைக்கிள் வாங்கக் கடன் வழங்கப்படு கிறது. 1990-91 ஆம் ஆண்டிற்கு 30 நபர்களுக்கு ரூ.0.48 ஆயிரம் இலக்கு நிர்ண யிக்கப்பட்டு, இதுவரை 10 நபர்களுக்கு ரூ.0.16 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் அடிப்படையில் தனி நபர் களுக்கு வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. 1990-91 இல் 500 ஆதிதிராவிடர் களுக்கு ரூ.15 இலட்சம் வழங்கப்பட்டு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை 285 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.8,55,000 வழங்கப்பட்டுள்ளது.

## தனி நபர் தொழில் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், 1990-91 ஆம் ஆண்டிற்கு 115 ஆதிதிராவிடர்களுக்குத் தனி நபர் தொழில் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 50 ஆதிதிராவிடர்களுக்கு இத்திட்டத்தின் கீழ் ரூ.7,50,000 வழங்கப்பட்டுள்ளது.



வளரும் வேளாண்மை

# கால்நடைகளுக்குச் சிறந்த தீவனம்

நமது விவசாயிகளது வாழ்விலும் கிராமப் பொருளாதாரத்திலும் கால்நடைகளின் பங்கு முக்கியமானதாகும். உலகிலேயே நமது நாட்டில்தான் அதிக எண்ணிக்கையில் மாடுகளும், எருமைகளும் உள்ளன. 26 கோடி மாடுகளும், எருமைகளும், 14 கோடி செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் உள்ளன.

தற்சமயம் நமது நாட்டில் ஓர் ஆண்டில் 50 மில்லியன் டன் பால் உற்பத்தியாவதாகவும் அதன் மதிப்பு ரூ.20,000 கோடி எனவும் கணக்கிடப்பட்டுள்ளது. பலனும் வருவாயும் அளிக்கும் நமது கால்நடைகளுக்குப் போதுமான அளவிலும் தரத்திலும் தீவனம் வழங்கப்படவேண்டும். கிடைக்கும் குறைந்த அளவு மழை மற்றும் நீர்ப்பாசன வசதி கொண்டு சாகுபடி செய்யக்கூடிய தீவன மரங்களை அதிகம் சாகுபடி செய்து பயன் பெறுவதே இன்றைய நிலையில் தீவனப் பற்றாக்குறையைப் போக்கச் சிறந்த வழியாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பே நமது கிராமங்களில் பசுந்தாள் உரத்திற்காகக் கிளிரிசிடியா என்ற மரம் அறிமுகப்படுத்தப்பட்டது. சுலபமாகச் சாகுபடி செய்யக்கூடியதும், கடுமையான வறட்சியையும் தாக்குப்பிடித்து, நீண்டகாலம் பலனளிக்கக் கூடியதுமான கிளிரிசிடியா மரத்தின் இலைகளைக் கால்நடைகளின் தீவனமாகப் பயன்படுத்தலாம். இந்தக் கிளிரிசிடியா மரம் புதியது அல்ல. பழைய மரம்தான். இந்த மரத்தின் இலைகளைக் கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தலாம். என்பது புதிய செய்தியாகும்.

கிளிரிசிடியா மரம் பல ஆண்டுகளுக்கு முன்பே வேளாண்மைத் துறை, மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அலுவலர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. நிலத்தின் வளத்திற்காக, பசுந்தாள் உரத்திற்காகத்தான் அறிமுகம் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன் நட்டு வளர்க்கப்பட்ட, கிளிரிசிடியா மரங்கள் பல ஆண்டுகளின் கடுமையான வறட்சியினையும் தாக்குப்பிடித்து இன்றும்கூட செழித்தோங்கி வளர்ந்துள்ளதைப் பார்க்கலாம்.

சமீப காலங்களில் பல வெளிநாடுகளிலும் நமது நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் முடிவுகளின்படி கிளிரிசிடியாவின் இலைகளைச் சிறந்த கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தலாம் என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர் விளைவே இந்தப் புதிய யோசனையாகும்.


**டாக்டர் எஸ். சுப்பையா,**
துணை இயக்குநர்,
கால்நடைப் பண்ணை,
கொருக்கை


**கிளிரிசிடியாவில் உள்ள சத்துக்கள்**

| | அளவு |
|---|---|
| மொத்தசக்தி(Gross Energy) | 4600-5000K.cal/Kg |
| செரிமானத் தன்மை(Digestibility) | 48-77% |
| நைட்ரஜன்(Nitrogen) | 3-4.5% |
| புரதச்சத்து(Protein) | 18-30% |
| சாம்பல் சத்து(Ash) | 6-10% |
| சுண்ணாம்புச் சத்து(Calcium) | 1-2% |
| பாஸ்பரஸ்(Phospherus) | 0.2-0.3% |
| பொட்டாசியம்(Potassium) | 1.6-3.5% |
| மெக்னீசியம்(Magnesium) | 0.4-0.6% |

**கிளிரிசிடியா கால்நடைகளுக்குச் சிறந்த தீவனம்**

கிளிரிசிடியா இலைகளில் உள்ள புரதச் சத்தில் சுபாபுல் மற்றும் குதிரை மசால் இலைகளில் உள்ள புரதச் சத்தில் உள்ள அத்தியாவசிய அமினோ அமிலங்களைக் காட்டிலும் (Essential Amino Acids) கூடுதலாக உள்ளது. ஆகவே கிளிரிசிடியா மற்ற தீவனப் பயிர்களைக் காட்டிலும் சிறப்பான தீவனமாய் விளங்குகிறது. பருத்திக் கொட்டை, புண்ணாக்கு, தவிடு மற்றும் கம்பெனி கலப்புத் தீவனங்களில் உள்ள ஊட்டச் சத்துக்களுக்குச் சமமான ஊட்டச் சத்து கிளிரிசிடியா இலைகளில் உள்ளது; 2 கிலோ, உலர்ந்த கிளிரிசிடியா இலைகளில் ஒரு கிலோ கடலைப் புண்ணாக்கிற்குச் சமமான சத்துள்ளது. வைட்டமின் 'ஏ' உயிர்ச் சத்தும், கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாஷ் போன்ற உலோகச் சத்துக்களும் இதில் மிகுந்துள்ளன.

நாள் ஒன்றுக்கு 5 முதல் 15 கிலோ வரை கிளிரிசிடியா இலைகளைக் கறவைப் பசு மாடுகளுக்கும், எருமைகளுக்கும் தீவனமாகக் கொடுத்தால் பருத்திக்கொட்டை, புண்ணாக்கு, தவிடு மற்றும் விலை மிகுந்த கம்பெனி கலப்புத் தீவனம் போடுவதைக் குறைக்கலாம்; தவிர்க்கலாம். கிளிரிசிடியாவைத் தீவனமாக உட்கொள்ளும் கறவைப் பசுக்களும், எருமைகளும் அதிகமாகப் பால் வழங்கும். கிளிரிசிடியா தீவனமாக உட்கொள்ளும் கறவை மாடுகளிலிருந்து கிடைக்கும் பாலில் வெண்ணெய்ச் சத்தும் கூடுதலாக இருக்கும். இதனால் அந்தப் பாலின் விலையும் கூடும்.

வளரும் இளம் கன்றுகளுக்குக் கிளிரிசிடியாவைத் தீவனமாகக் கொடுத்தால் அவற்றின் உடல் வளர்ச்சி விரைவாகவும், சிறப்பாகவும் இருக்கும் ஒரே ஆண்டில் நன்கு வளர்ந்து சினைப் பருவம் அடையும். நாள் ஒன்றுக்கு கன்றுக்கு ஒன்று முதல் 3 கிலோ வரை கிளிரிசிடியாவைத் தீவனமாகக் கொடுக்கலாம். வெள்ளாடுகளுக்கும், செம்மறியாடுகளுக்கும் கிளிரிசிடியாவைத் தீவனமாக கொடுக்கலாம். அதனால் அவற்றின் உடல் எடை விரைவாகக் கூடி இறைச்சி உற்பத்தி அதிகமாகி இலாபம் அதிகம் கிட்டும். ஒரு நாளைக்கு ஒரு ஆட்டிற்கு 1 முதல் 3 கிலோ வரை கொடுக்கலாம்.

கோழிகளுக்கும், கிளிரிசிடியாவின் இலைகளைத் தீவனமாக வழங்கலாம். ஆனால் கோழிகளின் தினசரி தீவனத்தில் 2 சதவிகிதம் முதல் 4 சதவிகிதம் மட்டுமே கிளிரிசிடியாவைத் தீவனமாகக் கோழிகளுக்கு வழங்கலாம். அதற்குமேல் கொடுக்கக்கூடாது. கோழிப்பண்ணைகளைச் சுற்றிலும் கிளிரிசிடியா மரங்களை நட்டு மரங்களை உண்டாக்கினால் வெய்யில் காலங்களில் வெய்யிலினால் ஏற்படும் பாதிப்பைத் தவிர்க்கலாம். குளிர்ச்சியான விரும்பத்தக்க சுற்றுப்புறச் சூழ்நிலை உருவாக்கவும் ஏதுவாகும். அதே சமயம் கோழிகளுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் தேவைப்படும் தீவனத்தையும் பெறலாம்.

★ நல்ல நண்பர்களைத் தேடிக் கொள்; அடுத்தபடியாக நல்ல நூல்களைத் தேடிக்கொள்; இப்படிப் பட்ட செயல்களால்தான் நீ உயர முடியும்.

—கோல்டன்

கால்நடைகளைப் பாதிக்கும் பேன் போன்ற ஒட்டுண்ணியை ஒழிக்க:- கால்நடைகள், கோழிகள் மற்றும் நாய்களைப் பாதிக்கும் பேன், தெள்ளுப் பூச்சிகள் மற்றும் சில வெளிப்புற ஒட்டுண்ணிகளை ஒழிக்க கிளிரிசிடியா இலைகளைக் கொதிக்கும் நீரில் போட்டு அந்த நீரைத் தெளித்துக் கட்டுப்படுத்தலாம்.

முதன் முதலாகக் கால்நடைகளுக்குக் கிளிரிசிடியாவைத் தீவனமாகப் போடும்பொழுது சில கால்நடைகள் ஆரம்பத்திலேயே நன்கு விரும்பித் தின்னும். ஆனால் பல கால்நடைகள் முதலில் கிளிரிசிடியாவைத் தீவனமாகப் போடும்பொழுது தின்பதற்குத் தயங்கும். இது ஒரு பிரச்சனையே. ஆனால் இந்த ஆரம்பத் தயக்கம் தீர்ந்து கிளிரிசிடியாவைத் தின்ன ஆரம்பித்தபின் மற்ற தீவனப் பயிர்களைக் காட்டிலும் கிளிரிசிடியாவையே அதிகம் விரும்பிச் சாப்பிடும்.



கிளிரிசிடியாவை முதலில் தீவனமாகத் தின்னத் தயங்கும் கால்நடைகளைக் கிளிரிசிடியாவை விரும்பித் தின்ன வைப்பதற்குச் சில வழிமுறைகளை மேற்கொள்ளலாம். கால்நடைகள் நன்கு விரும்பித் தின்னும் பசும்புல், வைக்கோல் மற்றும் சோளத் தட்டை போன்ற தீவனங்களுடன் கிளிரிசிடியாவைக் கலந்து போடலாம். உப்பு மற்றும் மொலாஸஸ் (MOLASSES) எனப்படும் சர்க்கரை ஆலையின் கழிவைக் கிளிரிசிடியாவின் இலைகளில் தெளிப்பது. கிளிரிசிடியாவை அறுவடை செய்த பின் ஒரு நாள் வாட விட்டுப் போட்டால் சில கால்நடைகள் அதனை விரும்பிச் சாப்பிடும். கிளிரிசிடியாவைப் பசும் சோளப் பயிர் மற்றும் பசும்புல்களுடன் சேர்த்து (SILAGE) முறையில் பக்குவப்படுத்திப் போடுவதன் மூலம் கால்நடைகள் நன்கு விரும்பிச் சாப்பிடும். இளம் கன்றுகள் புல் போன்ற தீவனத்தை முதலில் தின்ன ஆரம்பிக்கும் நிலையில் கிளிரிசிடியாவைக் கொடுத்துப் பழக்கலாம். கறவை மாடுகளைத் தவிர மற்ற கால்நடைகளின் முன்னால் கிளிரிசிடியாவைத் தீவனமாகப் போட்டு வேறு தீவனம் எதையும் போடாமல் விட்டுவிட்டால் கிளிரிசிடியாவைத் தின்னும் கட்டாய நிலை ஏற்படும். கிளிரிசிடியாவைச் சில கால்நடைகள் விரும்பித் தின்னும். கிளிரிசிடியாவை விரும்பித் தின்னாத கால்நடைகளை அதை நன்கு விரும்பித் தின்னும் கால்நடைகளுக்கு அருகில் கொண்டுவிட்டால் அதனைப் பார்த்துப் பழகும். கிளிரிசிடியாவின் இலைகளை உலர்த்தித் தூளாக்கிப் புண்ணாக்குத் தவிட்டுடன் கலந்து போடலாம்.

**தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறையின் சாதகமான பரிந்துரை**

தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை இயக்குநர், சென்னை அவர்களின் நக.எண்.124024/பி-1 90, நாள். 1.8.90 உத்தரவின்படி கிளிரிசிடியாவைத் தீவனப் பயிராக அங்கீகரித்து கால்நடைகளுக்குத் தீவனமாகப் பயன்படுத்தத் தக்க நடவடிக்கை எடுக்கும்படி அனைத்து அலுவலர்களுக்கும் அறிவுரை வழங்கப் பட்டுள்ளது பாராட்டுக்கும் மகிழ்ச்சிக்கும் உரியது.



## சிறுசேமிப்புத் துறை




எதாபாரா இன்னல்கள் ஏற்படுமுன் சேமியுங்கள். வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/- முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

DIPR/189/MS/91/ARIES

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**




கூடுதல் சலுகைகள்:

- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை.
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்றும்
இயக்குநர்
**சிறுசேமிப்புத்துறை**
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.




# பாவாணரும் பாவேந்தரும்



- இரா. இளங்குமரன்

**பா**வேந்தருக்கு நூற்றாண்டு; பாவாணருக்குத் தொண்ணூறாம் ஆண்டுப் பிறப்பு.

பாவேந்தர் காலம் 9.4.1891 - 21.4.1964; 73 ஆண்டுகள்.
பாவாணர் காலம் 7.2.1902 - 15.1.1981; 79 ஆண்டுகள்.

பதினோர் ஆண்டுகள் மூத்தவர் பாவேந்தர்; பாவேந்தருக்குப் பின்னரும் பதினேழு ஆண்டுகள் வாழ்ந்தவர் பாவாணர்.

இருவரும் தமிழ் - தமிழர் - தமிழ்நாடு என்னும் மும்மையில் ஒப்பாரும் மிக்காரும் இல்லா வகையில் பற்றுமை கொண்டு, உடல் பொருள் உயிர் ஆகிய மும்மையையும் அதற்கே ஆக்கியவர். 'இவரை அவரும்', 'அவரை இவரும்' மதித்த மதிப்பீட்டுக்கும், பற்றுமைக்கும் போற்றுதலுக்கும் ஈடுஇணை இல்லை.

புலமிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம் என்னும் பழநெறிக்குப், புதுச் சான்றாகத் திகழ்ந்த பெருமக்கள் இவர்கள்.

இளைய பாவணர் முதிய பாவேந்தரை இடந் தேடிச் சென்று இனிது உரையாடியமை இயற்கை; ஆனால், முதிய பாவேந்தர் இளையபாவாணரை இருக்கும் இடம் தேடிச் சென்று இனிய வைப்பகமெனப் பாராட்டி மகிழ்ந்தமை இயற்கை இறந்த சிறப்பினது, அப்படிப் பல்கால் நிகழ்ந்த நிகழ்ச்சிகள் உண்டு.

ஒருவரை ஒருவர் உள்ளபடி உணர்தல் அரிது; உணர்ந்தாலும் உள்ளாரப் போற்றி உரைத்தல் அரிது; உரைப்பினும் நிலைபெறும் எழுத்தில் காட்டுதல் அரிது; காட்டினும், ஊரறியப் பரப்புதல் அரிது. இவ்வருமையை இருவரும் எளிமையாய்ச் செய்த சான்றுகள் உண்டு. ஏன்? தந்நலம் தேய்ந்து தமிழ்நலம் வாய்ந்த அருமையின் விளைவே அது.

பாவாணர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் திராவிட மொழித்துறையில் பணியமர்த்தம் [illegible]றார். அதனால், பாவேந்தர்க்கென்ன? துணைவேந்தர்க்குப் பாவேந்தர் விண்ணப்பம் விடுக்கிறார். தமக்குப் பணியமர்த்தம் வேண்டியா?

''தமிழ் மொழி ஆயும் தமிழ்ப்புல வர்தம்
தமிழகம் காக்கும் தகுதி வாய்ந்தவர்
என்பது தமிழ்ச்சான் றோரின் எண்ணம்!
அண்ணா மலைப்பல் கலைக்கழ கந்தான்
பண்ணிய தவத்தின் பயனே யாகத்
தேவ நேயப் பாவண னாரும்
வி.மு.சோ மசுந்தரனாரும் அமைந்தனர்''

என்கிறார். அமைந்தது சரி! விண்ணப்பம் என்ன?

''மனம்வைக்க வேண்டும் ஐயா!
இனம்தன் மேன்மை எய்தும் பொருட்டே''

என்பது விண்ணப்பம். 'இனநலம்' காக்கும் விண்ணப்பம் எவர்க்குத் தோன்றும்? 'மன நலம்' மல்கியவர்க்குத் தானே தோன்றும்!

(குயில் 3:6;26.7.60)

நான் கண்ட அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என வரிசை செய்கின்றார் பாவேந்தர். அவ்வரிசையில் ஒன்று தேவநேயப் பாவாணர். ஒருபெரும் பதிகம் பாடினார் பாவேந்தர், பாவாணர் மேல். ஆம்! பன்னிரு வெண்பா.

வேந்தருள் வேந்தர் பாவேந்தர், பாவேந்தர்க்கு வேந்தர் எவராம்? பாவாணராம்! அவர்க்கு மட்டுமா, வேந்தர் பாவாணர்; தமிழர் அனைவர்க்குமே வேந்தராம் பாவாணர் ஏன்?

அருமைத் தமிழே உலகத்தின் ஆதிமொழி - முதன்மொழி - என்பதை நிலைநாட்டினாராம் பாவாணர்! அதுவும் எப்படி நிலை நாட்டினாராம்?

வடமொழி இந்தி முதலிய பலமொழிகளையும் வேரும் தூரும் கொத்தும் குலையும் தடவித் தடவிப் பார்த்துத் தமிழே உலக முதன் மொழி எனக் [illegible]ராராம்!

''வடமொழியும் இந்தியும் மற்றும் வடக்கிற்
படுமொழிகள் என்ற பலவும் - தடவியே
அந்தமிழே ஆதிஎன்னும் தேவநே யர்தாம்
எந்தமிழர் எல்லோர்க்கும் வேந்து''.

எத்தகைய மனந்திறந்த பாராட்டு! வரவேற்பு! நெஞ்சில் துளியளவு தம்முனைப்பு இருப்பினும் இப்படிப் பாடல் கிளருமா?

'தேவநேயர்க்குத் தீமை செய்வார் உளர்' என அறிகிறார் பாவேந்தர். அவரைத் தமக்குத் தீமை செய்பவராகவே நினைந்து குமைகிறார்; குமுறுகின்றார்; வெம்புகின்றார்; வெதும்புகின்றார்; இல்லை! இல்லை! எமக்கு மட்டும் தீமை செய்வார் அல்லர்! எம்தமிழர் அனைவர்க்கும் வேந்தாம் அவர்க்குச் செய்யும் தீமை, எப்படி எமக்கு மட்டும் செய்ததாகும்? செந்தமிழர் அனைவருக்குமே ஒரு மொத்தமாகச் செய்த தீமையேயாம் என முடிவு செய்கிறார்; முழங்குகிறார்!

''நாவலந் தீவுக்கு நந்தமிழே தாயென்று
கூவும் அதுவுமோர் குற்றமா? - பாவிகள்!
தேவநே யர்க்குச் செயுந்தீமை செந்தமிழர்
யாவர்க்கும் செய்வதே யாம்''.

குயில் கூவுகிறது! பாவாணக் குயில் கூவுவதாகப் பாவேந்தர்க்குயில் கூவுகிறது! 'நாவலந் தீவுக்கு நம் தமிழே தாய்' என்று கூவுகிறது. இதில் என்ன குற்றம்? குற்றமற்றதைக் குற்றமெனக் கொள்வார் பாவியர் தாமே! உள்ளம் வெள்ளமெனப் பாய்ந்தால் துள்ளிவீழாதோ சொல்!

''பாவாணன் செந்தமிழன்; ஏனெனில் அவன் உண்மை உரைப்போன்! அவன் பாலைவன மழையல்லன்; பாழ்நில மழையல்லன்; புன்செய் மழையல்லன்; நன்செய் மழை; ஆம்; அவன் செந்நெற் பயன்மழை!''

''பெய்யும் மழைக் கொடையைக் கெடுப்போன் - கீழறுப்போன் - கீழோன்!'' பன்னிரண்டாம் பாட்டு இது;

''எந்தமிழ் மேலென்ற உண்மை எடுத்துரைப்போன்
செந்தமிழன்! செந்நெற் பயன்மழை! - நந்தமிழின்
கீழறுப்போன் கீழோனே! தேவநே யர்வாழ்க!
வாழிய செந்தமிழ் மாண்பு!''

பாடிப் பொழிந்த பாவேந்தக் குயிலைப் பாவாணர் எப்படிப் பாராட்டினார்? உரையில் பாராட்டினார்; பாவில் பாராட்டினார்; 'பண்பாட்டுப் பதிக'மெனப்பாடியும் பாராட்டினார். பத்தன்று பாட்டு; பதினொன்று! பாவேந்தர் பாடியது போன்றே வெண்பா, பாட்டுக்குப் பாட்டா? அவர்பாட்டுக்கு அவர் பாடினார்; இவர் பாட்டுக்கு இவர் பாடினார் பாட்டு பைந்தமிழ் வளமாயிற்று!

பாவேந்தர் உருவெளிக் காட்சி தோன்றுகின்றது. அது, உள்ளொளிக் காட்சியாய் - உண்மைக் காட்சியாய் உருவாகின்றது. பாவேந்தர் நடையழகும், பெருமித அழகும், உரையழகும், அஞ்சாமை அழகும், உடையழகும் ஒவ்வொன்றும் முன்னே முன்னே வந்து என்னைப்பாடு என்னைப் பாடு என்கின்றன; பாடுகின்றார்பாவாணர்.

''ஆனை நடையும் அரிமாப் பெருமிதமும்
கோனையும் சாடிக் குமுறுரையும் - தானையே
தாக்கினும் அஞ்சாத் தறுகண்ணும் மேலாடைச்
சேக்கையும் பாரதிதா சன்''.

ஆனை நடையாம்; அரிமாப் பெருமிதமாம்; ஆண்டவன் என்ன, ஆள்பவன் என்ன எதிரிட்டு முழக்காம்;எப்படை வரினும் அப்படைக்கு அஞ்சாமையாம்; மேலாடைப் பொலிவாம்; இவை பாரதிதாசனாம்! படக் கருவிதானும், இப்பாக்கருவிப் படப்பிடிப்பைப் பிடித்துக் காட்டுமா?

பாவேந்தர் பிறந்தது ஏன்? அவர்தம், 'பிறவிப் பயன் என்ன? 'வெந்ததைத் தின்று விதிவந்தால் போகவா' வந்தார்? தன் குடும்பம் - தன் சுற்றம் - தானுண்டு - சொத்துண்டு - சுவையுண்டு என்பதற்கு வந்த 'கடுகுப்பிறவியா? கடுகுக்கு மூத்த 'துவரைப் பிறவியா? ஊரை அலைக்கழிக்க - உலகை அலைக்கழிக்க - வந்த தொன்னைப் பிறவியா? தமிழுலகு வாழ வந்த தண்ணளிப் பிறப்பு அது ! என்கிறது பாவாணர் ஆழ்ந்தகன்ற ஆய்வுள்ளம்!

''தன்னலமும் தன்குடும்பத் தின்னலமும் பேணாது
மன்னலமே என்றும் மதித்தொழுகித் -
தன்னினமாம்
செந்தமிழ் மக்கள் சிறந்தோங்கி வாழ்வதற்கே
வந்தனன் பாரதிதா சன்.''


பக்கமெலாம் பார்க்கிறார் பாவாணர். போலித் தமிழர்; புன்றமிழர்; ஒருவரா இருவரா? பலப் பலர்; பன்னூற்றுவர் பன்னூற்றுவர்; எத்தகு போலித் தமிழர் - புன்றமிழர் - அவர்? செய்யும் தொழிலில் - செய்யும் வணிகத்தில் - இம்மியளவு கூடிய வருவாய் வருமாயினும், தம் இன்னுயிர்க் கின்னுயிராம் தமிழையும் கூவிக் கூவி விற்று விடும் பாழ்பட்ட பகைத் தமிழர்! போலிமானத் தமிழர்! நிலைத்த நெஞ்சோ, நிலைத்த சொல்லோ, நிலைத்த செயலோ இல்லா, நிலைக் கேட்டுத் தமிழர்! இப் பாலைக்கு இடையேதான் ஒருசோலை; பைஞ்சோலை; பன்மரப் பைஞ்சோலை; பழம்படு பன்மரப் பைஞ்சோலை - பாரதிதாசன்!

''இம்மியே கூடிடினும் இன்றமிழை விற்றுவிடும்
தெம்மானப் போலித் திரிதமிழர் - கும்மிடையே
பாலை நிலத்திற் பழம்படு பன்மரப்பைஞ்
சோலையே பாரதிதா சன்''.

ஒருவருள் ஒருவராகிய உள்ளன்பாளர்களைத் 'தமிழரசு' வழியே நினைத்துப் பார்க்க வாய்ப்பது உவகைப் பெருக்காம்.



எங்கள்
இனிய
நல்வாழ்த்துக்கள்



காஞ்சிபுரம்
பட்டுச் சேலைகள்
உற்பத்தியாளர்

**B.M. சில்க்ஸ்**



249, காந்தி ரோடு,
காஞ்சிபுரம் - 631 501

தொலைபேசி எண்: 2970

# நிறம் மாறாமல் பற்களைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

முத்துப் போன்ற பற்கள் என்றால், பற்களின் அமைப்பும் நிறமும் முத்துப்போல் அழகாக இருக்கிறது என்பது தெளிவான கருத்து. எனினும், முத்தின் நிறம் தூய்மையான வெள்ளை அல்ல. இருந்தாலும் பற்கள் அந்த நிறம் அடைவதற்குப் பற்களின் பல பாகங்களான பற்சிப்பி, தந்தினி மற்றும் பற்கூழ் ஆகியவை உதவி புரிகின்றன.

வாயினுள் தெரியும் பற்களின் பாகம் பல்சிகரம் (CROWN) எனப்படும். பற்சிப்பி (ENAMEL) என்பது பற்களின் வெளிப்புறத்தில் அமையும் பாகம். இந்தப் பற்சிப்பி உள்ளே உள்ள தந்தினிகளை (DENTINE) முழுமையாக மூடுகின்றது. பற்களின் நடுபாகத்தில் அமைந்துள்ளது பற்கூழ்க்குழி (PULP). இவை தவிர, ஒவ்வொரு பல்லுக்கும் வேர்கள் உண்டு. இந்த வேர்கள் பற்களைத் தாடையுடன் இறுக்கமாக இருக்க உதவி செய்கின்றன. பற்களின் வெளிப்பாகமான பற்சிப்பி ஒளி ஊடுருவ வகையளிப்பதாக (TRANSLUCENT) அமைந்துள்ளது. அதனால் அதன் கீழே உள்ளே தந்தினியினுடைய நிறம் பற்சிப்பியின் வழியாக ஊடுருவித் தெரிந்து பல்நிறத்திற்குக் காரணமாகத் திகழ்கின்றது.

**கறைகளும் நிறம் மாறிய பற்களும்**

பற்கள் நிறம் மாறுவது என்பது இரண்டு காரணங்களால் உண்டாகும்:

1. பற்களின் மேல் படிந்துள்ள கறைகள் - வெளிக் காரணங்களால் (EXTRINSIC) உண்டாகும் கறைகள் மற்றும் நிற மாற்றங்கள்.

2. பற்களின் உள்ளே உள்ள திசுக்களிலிருந்து (INTERNAL TISSUES) உண்டாகும் நிற மாற்றங்கள் (INTRINSIC).



**வெளிக்காரணங்களால் (EXTRINSIC) உண்டாகும் நிற மாற்றங்க்ள்:**

பற்களின் மேலே படிந்துள்ள கறைகள் தற்காலிக நிற மாற்றங்களை ஏற்படுத்தலாம். இவை சாதாரணமாக உண்ணும் உணவிலிருந்தும், பானங்களிலிருந்தும் ஏற்படும். புகை பிடிப்பதனாலும் பற்கள் மேல் கறைகள் உண்டாகலாம். பற்களின் நிறமாற்றத்திற்கு இவையே பொதுவான காரணங்கள். இதனால் பற்கள் கருப்பு நிறமாகவோ, பழுப்பு நிறமாகவோ காட்சியளிக்கும். இவை தவிர, பற்சிப்பியின் மேற்புறச் சொரசொரப்பு, பற்கள் சீராக அமையாதிருத்தல், மற்றும் தினம் பற்களைத் தேய்க்காமல் இருப்பது போன்ற காரணங்களாலும், பற்கள் மீது கறை மற்றும் காரை படிந்து

**அ. பரமேசுவரன்**
பேராசிரியர் -
பல் பாதுகாப்புத்துறை
பல் மருத்துவக் கல்லூரி,
சென்னை.

பற்களின் நிறத்தில் மாற்றத்தை விளைவிக்கலாம். உமிழ் நீர் கெட்டியாக இருப்பதும், பற்களின் மேல் காரைபடிவதற்குக் காரணமாக விளங்கும். இந்த வகையான நிற மாற்றங்கள் பற்களில் பச்சை நிறமாகவோ (GREEN STAIN) கருப்புக் கறையாகவோ, பழுப்பு நிறமாகவோ காட்சியளிக்கக் கூடும்.

பற்களின் மேல் நிற மாற்றங்கள் உலோகப் பொருட்களாலும் ஏற்படலாம். இந்த நிற மாற்றங்கள் வேலை செய்யும் சூழ்நிலையிலிருந்து ஏற்படும் புழுதி மற்றும் புகையுடன் (FUMES) கலந்து · உருவாகலாம், அல்லது இந்த உலோகங்கள் உள்ள மருந்துகளை உட்கொள்வதனாலும் வரலாம். இந்த உலோகங்கள் உள்ள மருந்துகளை உட்கொள்வதனாலும் வரலாம். இந்த உலோகக் கறைகள் வெள்ளி, தங்கம், செம்பு, இரும்பு நிக்கல், பாதரசம் (MERCURY) மாங்கனிஸ், காட்மியம், தகரம் போன்ற உலோகங்களால் உண்டாகலாம். இந்தக் கறைகள் உலோகங்களுக்கு ஏற்ப பச்சை நிறமாகவோ, கருப்பு நிறமாகவோ, ஊதா நிறமாகவோ மஞ்சள் நிறமாகவோ காட்சியளிக்கக் கூடும்.

**உள் காரணங்களால் (INTRINSIC) அதாவது திசுக்களிலிருந்து உண்டாகும் காரணங்களால் ஏற்படும் நிற மாற்றங்கள்:**

திசுக்களிலிருந்து உண்டாகும் நிற மாற்றங்கள் பல காரணங்களால் ஏற்படுகின்றன. அவை முக்கியமானவை:-

★ பரம்பரையாகத் தோன்றும் நிற மாற்றம் (HEREDITARY) இது குடும்பத்தில் உள்ள அனைவரிடமும் தென்படும்.

★ பற்கள் முளைக்கும் போது (ERUPTION) அல்லது பற்கள் உருவாகும் பருவத்தில் (DEVELOPMENT) கடுமையான நோய் வருவது மற்றும் அந்நோய்க்கு மருத்துவத்திற்காக உட்கொள்ளும் சில மருந்துகள், டெட்ராசைக்ளின் (TETRACYCLINE) ஆகியவையும் பற்கள் நிறம் மாறுவதற்குக் காரணமாகின்றன.

★ விபத்துகளிலிருந்தும் மற்றும் பற்களின் மீது ஏற்படும் அதிர்ச்சியினாலும் பல்லின் உள்புறமுள்ள பற்கூழ் சேதமடைந்து, பற்கள் உயிரின்மையுடன் (DEAD OR NON-VITAL) விளங்கலாம். இவையும் பற்கள் நிறம் மாறுவதற்குக் காரணமாக உள்ளன.

★ ஃபுளோரைட் (FLUORIDE) குடிக்கும் தண்ணீரில் இருக்கும் ஃபுளோரைட் அளவு அதிகமாக இருந்தால் (3-5 PPM) அவையும் பல் நிறம் மாறுவதற்குக் காரணமாகத் திகழும். இவ்வாறு பல்வேறு காரணங்களால் பற்கள் நிறம் மாற வாய்ப்புண்டு.

**பற்களின் நிறமாற்றங்களைச் சரி செய்யும் முறைகள்:**

1. பற்களின் மேலே படிந்துள்ள கறைகள், காரைகள் இவைகளைச் சுலபமாக எடுக்க முடியும். இவற்றை மருத்துவரிடம் சென்று சுத்தம் (SCALING) செய்து எடுத்து விடலாம். உணவுப் பொருட்களால் உண்டாகும் பழுப்பு மற்றும் கருப்புக் கறைகளைப் 'பாலிஷ்' செய்து எடுத்து விடலாம்.

2. உலோகக் கலப்புள்ள மருந்தினால் ஆன நிறமாற்றங்களையும் திசுக்களின் சேதத்தின் விளைவாக ஆன நிற மாற்றங்களையும் மற்ற காரணங்களினால் ஏற்படும் மாற்றங்களுக்கும், கறைகள் பற்களை எவ்வளவு தூரம் பாதித்திருக்கிறதோ- பற்சிப்பியை மட்டும் பாதித்திருக்கிறதா அல்லது உள்ளிருக்கும் தந்தினியையும் பாதித்திருக்கிறதா என்பதைப் பொருத்து மருத்துவ முறை மாறுபடும். இந்த நிற மாறுபாட்டால், அதிகப் பாதிப்பு இல்லாவிட்டால் ஒன்றும் செய்யாமலும் இருந்து விடலாம். இல்லையென்றால், கீழ்க்கண்ட வழி முறைகளால் அவற்றைச் சரி செய்யலாம்.

அ) புதுவிதமான பல் நிறத்தியுள்ள பல்லடைக்கும் பொருட்களால் நிற மாற்றத்தை மூடி மறைத்து விடலாம்.

ஆ) 'தொப்பி' போல் பல் அளவில் அதே நிறத்தில் செய்து நிறம் மாற்றம் தெரியாமல் மறைக்கலாம்.

இ) 'வெண்மைப் படுத்தும்' முறையைக் (BLEACHING) கடைப் பிடிக்கலாம்.

★ பற்களில் கரைபடிந்துள்ள பகுதியை லேசாகத் தேய்த்து ஓரளவுக்குக் கறையை அப்புறப்படுத்தி விடலாம். அதற்குப் பிறகு மீதம் இருக்கும் நிறக்குறைபாடுகளைப் பல் நிறத்தில் இருக்கும் பல் அடைக்கும் பொருட்களை வைத்துச் சமன் செய்து சீர் செய்து விடலாம் (COMPOSITE MATERIALS).

★ பற்தொப்பி (CROWNS) நிற மாற்றம் அதிகப்படியாக இருந்தால், பற்களை எல்லாப் புறங்களிலும் சிறிதளவு தேய்த்து எடுத்து விட வேண்டும். இதன் பிறகு, ஏற்கெனவே பல் இருந்த அளவிற்குப் பல்லின் மேல் செருகக்கூடிய 'தொப்பி' போல் செய்து அணிவித்து விடலாம். இவை பல்லின் நிறத்திலோ அல்லது தேவையான நிறத்திலோ செய்யலாம். அக்ரீலிக் (ACRYLIC) மற்றும் பீங்கான் பொருட்களால் செய்யப்படும். இந்தத் தொப்பிகள் பல்லின் நிறத்தில் அமையும், மேலும், இவை பல் நிற மாற்றத்தை முழுமையாக மறைத்து விடும். பல காலங்கள் உபயோகப் படுத்தும் வாய்ப்பு இவற்றிற்கு உண்டு. கடிக்க உபயோகப் படுத்தும் கடைவாய்ப் பற்களை இந்த முறையில் 'தொப்பி' போல் செய்து மூட வேண்டுமென்றால் அவற்றிற்கு அதிகமான அழுத்தும் திறன் (COMPRESSIVE STRENGTH) தேவைப் படுகிறது. ஏனென்றால் கடிக்கும் போது இவை உடையாமல் இருக்க வேண்டும். மேலும், கடிக்கும் பொருளையும் நன்றாக நசுக்க வேண்டும். அதனால் இவற்றிற்கு உடலுக்குக் கேடு விளைவிக்காத தங்கம் மற்றும் தங்கம் சேர்ந்துள்ள உலோகங்களினால் செய்வது அவசியமாகிறது.


**வெண்மைப் படுத்துதல் (BLEACHING)**

இது பல காலங்களாகச் செய்யும் முறை. இதனால் நிறம் மாறிய பற்களின் அடர்த்தியான மாற்றத்தையும் நன்றாகக் குறைக்க முடியும். ஓரளவுக்குக் குறைத்து சாதாரணப் பற்களின் நிறத்திற்குக் கொண்டு வர முடியும்.

**உயிரிழந்த பற்கள் (NON-VITAL TEETH)**

பற்கூழ்க் குழிக்கு ஏற்படும் அதிர்ச்சியினால் பல் சிகரம் சில மாறுபாடுகளை அடைந்து நிறம் மாறிவிட்டால் கடுமையான பழுப்பு நிறமாக மாறுகின்றது. இந்தப் பற்களை வெண்மை செய்வதால் (BLEACHING) நிறம் மாறுவது சிறிதளவேயாகும். பற்கூழ்க் குழியில் மாறுதல் ஏற்பட்டதால் வெண்மை செய்வதற்கு முன்பு பல்வேர் (ROOT CANAL TREATMENT) மருத்துவம் செய்ய வேண்டும். பிறகு, வெண்மை செய்து ஓரளவிற்கு நிறம் மாற்றலாம். அல்லது 'தொப்பி' போல் செய்து நிறம் மாற்றத்தை மறைத்து விடலாம்.

நிறம் மாறிய பற்களால் மனோ நிலை மாறுதல்கள் ஏற்படலாம். சிறு வயதிலிருந்தே பற்களின் அழகைப் பராமரிக்கவே பலர் விரும்புவர். எந்த விதமான நிறமாற்றத்தையும் கூடிய சீக்கிரம் சரியான நிலைக்கு மாற்றினால் தாழ்வு மனப்பான்மை வராமல் தவிர்க்கலாம். பல் உடைந்திருந்தாலோ, நிறம் மாறியிருந்தாலோ சிலர் பேசுவதற்குக்கூட கூச்சப்படுவார்கள். எல்லா விதத்திலும் பின் தங்கும் மனப்பான்மை வரவும் வாய்ப்புண்டு. ஆகவே உடனடியாக, நிறம் மாறிய பற்களை (COSMETIC DENTISTRY) அழகுப் படுத்தும் பல் மருத்துவ முறைகளைக் கொண்டு இவ்வாறு சீர் செய்யலாம். அப்படிச் செய்வதன் மூலம் - 'பல் போனால் சொல் போச்சு' என்ற பழமொழிக்கு ஆளாகாமல் அவரவரும் தப்ப முடியும்.



**4-வது அட்டையில்:**

மாமல்லபுரத்தில் நடந்த வசந்த விழாவில், முக்கிய நிகழ்ச்சியாக இடம் பெற்ற பரத நாட்டியம், கிராமிய நடனம், குச்சிபுடி ஆகிய நடனக் காட்சிகள் 4-ஆம் அட்டையை அலங்கரிக்கின்றன.

With
Best
Compliments
From

**M/s. Sreenivas Silk House,**
**Silk Cloth Merchants**

**17-A, T.K. Nambi Street,**
**Kancheepuram - 631 503.**

**Phone:3064**





மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள், மண்டபம் இலங்கை அகதிகள் முகாமிற்கு, வருகை புரிந்து அகதிகளுக்கு இலவச வேட்டி, சேலைகள், வழங்கினார். (20.2.1991)

## படமும் செய்தியும்

மத்திய அரசின் செய்தி மற்றும் ஒலிபரப்புத் துறையின் விளம்பரப்பிரிவின் சார்பில், சென்னை இராஜாஜி மண்டபத்தில் ஏற்பாடு செய்திருந்த டாக்டர் அம்பேத்கர் புகைப்படக் கண்காட்சியினை, மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி. கார்த்திகேயன் அவர்கள் துவக்கி வைத்தார். ( 20.2.91 )



# நூல் நயம்

### அழகிய வெண்பா அறுநூறு

**தொகுப்பு: உதகை பொன்னழகன்**

**வெளியீடு:**

மங்கை நூலகம்,
நல்லப்பன் தெரு,
அருவங்காடு-643 202.

விலை:ரூ.20/- பக்கம்:182

**தெ**ன்றல், தமிழரசு, கவிக்கொண்டல் போன்ற பல்வேறு இதழ்கள் நடத்திய வெண்பாப் போட்டிகளில் தேர்வுபெற்ற வெண்பாக்களிலிருந்து 600 பாக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றைத் தொகுத்து நூலாக்கியுள்ளார் தொகுப்பாளர்.

பொதுவாக நானூறு செய்யுட்களைத் தொகுத்துத் தொகை நூலாக வழங்குவது மரபு. சான்று, அகநானூறு, புறநானூறு. அண்மைக் காலத்தில் நிலாவைப் பற்றிய நானூறு செய்யுள்களைத் தொகுத்து 'நிலா நானூறு' என வெளியிட்டார் ஒரு கவிஞர்.

இந்நூலின் தொகுப்பாளர் பழைய மரபை மாற்றி புது மரபை மேற்கொண்டிருப்பது வரவேற்புக்குரியது.

இந்நூலில் காணப்படும் வெண்பாக்கள் அனைத்தும் அருமை; ஏற்கெனவே வாசகர்களுக்குப் பல்வேறு காலகட்டங்களில் அறிமுகமானவை என்றாலும், அவற்றை ஒரே தொகுப்பில் காணும்போது ஏற்படும் இன்பமே தனி! இந்த அரிய விருந்தை எல்லாம் 'தேடித் தொகுத்த திறம்' பாராட்டுக்குரியது; போற்றுதலுக்குரியது.

—தமிழ்ப்பித்தன்

### மகாத்மா காந்தியின் சுயசரிதை (சத்திய சோதனை)

தமிழாக்கம்: ரா. வேங்கடராஜுலு

வெளியீடு:

காந்திய இலக்கியச் சங்கம்,
தமிழ்நாடு காந்தி நினைவு நிதி,
மதுரை-625 020.

விலை: ரூ.30 பக்கம்: 511

அண்ணல் காந்தியடிகளால் எழுதப் பெற்ற 'சத்திய சோதனை' என்னும் சுயசரிதம், முதலில் குஜராத்தியில் எழுதப் பட்டது. பிறகு ஆங்கிலத்திலும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது. தமிழில் இது வரை 10 பதிப்புகள் வெளிவந்துள்ளன. 1,30,000 பிரதிகள் தமிழில் விற்பனையாகியுள்ளன.

அண்ணல் காந்தியடிகள் தம் குழந்தைப் பருவத்திலிருந்து, இந்நூலைத் தொடங்குகிறார். தம் வாழ்க்கையில் ஏற்பட்ட சோதனைகள் சாதனைகள் எல்லாம் இந்நூலில் விளக்கியுள்ளார். இந்நூலில், மொத்தம் ஐந்து பாகங்கள் உள்ளன.

அண்ணல் காந்தியடிகள் வாழ்க்கையில் நிகழ்ந்த பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளையும் நாம் தெரிந்து கொள்கிறோம். உள்ளது உள்ளபடி உரைத்துள்ள இந்த உண்மைக் கதையை, அனைவரும் படிக்க வேண்டியது அவசியமாகும்.

- பி.வி. கிரி.

### சின்னஞ்சிறிய பூக்கள்

**ஆசிரியர்:கே.சுப்பிரமணியன்**

**வெளியீடு:**

சிறுவர் வெளியீடு
79, மேட்டுத்தாங்கல்
கல்லாவி
தர்மபுரிமாவட்டம் 635 304

விலை:ரூ.10/- பக்கம்:80

குழந்தை இலக்கிய மாலையில் மேலும் ஒரு மணமலராகச் சேர்கிறது இந்நூல். வழக்கமான தலைப்புகள் இருந்தாலும், வித்தியாசமான தலைப்புகளும் அவை பற்றிய நல்ல கவிதைகளும் (சுண்டெலி, மூட்டைப்பூச்சி, முருங்கைக் காய், எருமை) இந்நூலில் உண்டு.

—சாமி

### காற்றிலே மிதந்த கருத்துக்கள்

**ஆசிரியர்: துரை. இராமு**

**வெளியீடு:**

டி.ராமு
6, பிள்ளையார் கோயில் தெரு
பழைய தாம்பரம்
சென்னை-600 045.

விலை:ரூ.12/- பக்கம்:96

**இ**ந்நூலில் பதினோரு தலைப்புகளில் வெளியாகியுள்ள எழுத்தோவியங்கள் அனைத்துமே வானொலியில் ஒலிபரப்பப்பட்டவை.

செஞ்சிலுவைச் சங்கம், பேரை, இரத்தம், சத்துணவு, எழுத்தறிவு, உணவு ஒழுக்கம், கற்றல்சிறக்க, கிராம ஆட்சியில் பெண்கள் பங்கு என்பன போன்ற மாணவர்களுக்கு மிகவும் பயன்படக் கூடிய இக்கட்டுரைகள் இடம்பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

—என். குமாரசாமி

### மது, புகையிலை பழக்கங்களால் வரும் நோய்கள்

**ஆசிரியர்: டாக்டர் ஹாஜி எம்.ஏ. அலிம்**

**வெளியீடு:**

நியூ செஞ்சுரி புக்ஹவுஸ்
பிரைவேட் லிமிடெட்
41 பி, சிட்கோ இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சென்னை-600 098.

விலை:ரூ.5/- பக்கம்:30

**இ**ன்று உலகை பயமுறுத்திக் கொண்டிருக்கும் கொடிய பழக்கங்களில் ஒன்று போதைப் பழக்கம்.

மது அருந்துவதால், புகைப்பதால், புகையிலை போன்றவற்றைப் பயன்படுத்துவதால் உண்டாகும் தீமை எத்தகையது என்பதனைச் சுருக்கமாக, விளக்கமாக விவரிக்கிறது இந்நூல்.

இப்பழக்கங்களால் எத்தகைய நோய்கள் எப்படி உண்டாகின்றன என்பது பற்றியெல்லாம் விளக்கமாகத் தெரிந்து கொள்கிறோம்.

மேற்கண்ட பழக்கவழக்கங்கள் உள்ளவர்கள் இந்நூலைப் படித்தால், அத்தகைய பழக்கங்களிலிருந்து விடுபட வாய்ப்பு நிச்சயம் உண்டு.

—என்.குமார்

புத்தகங்கள் மக்களுக்கு
இறக்கைகளைக்
கொடுக்கின்றன.

-ஹம்ப்ரியோடோர் க்னாட்கோவ்



புத்தகங்கள்

புத்தகங்களை எவ்வாறு
உபயோகிப்பது என்று நீங்கள்
தெரிந்துகொள்ளும் காலம்
வரை அவை மிகப் பெரிய
பொருள்களாகும்.

-அலெக்சாண்டர் ப்ளாக்

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 568926, 568927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

* பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
* பருத்தி, பாலியஸ்டா சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
* பருத்தி, பாலியஸ்டா சூட்டிங்ஸ்.
* லுங்கிகள், துவாலைகள். வேட்டிகள்.
* படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ்
விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

கடல் மல்லையில்
கண் கவர்
கலை விழா







தமிழரசு
16-3-1991 ரூ.1



மேதகு ஜெர்மன் நாட்டின் குடியரசுத் தலைவர் டாக்டர் ரிச்சார்டு வான் வைஸாக்கர் அவர்களும், அவருடைய துணைவியாரும் இரண்டு நாள் சுற்றுப்பயணமாகத் தமிழ்நாட்டிற்கு 3.3.91 அன்று வருகை தந்தனர்.



## இந்த இதழில்...


| | |
|---|---|
| தமிழ்நாடு அரசின் 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவுசெலவுத் திட்டம் ... | 2 |
| தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம் ... | 8 |
| கால்நடைச் செல்வம் ... | 9 |
| உயிர்க்கொல்லி நோயை ஒழிப்போம் ... | 13 |
| தமிழகத்துக்கு வாங்க! (கவிதை) ... | 16 |
| தெலுங்கு-கங்கைத் திட்டப் பணிகள் ... | 19 |
| தொழுநோய் ஒழிப்பில் ஒரு தொண்டு நிறுவனம் ... | 20 |
| மூடநம்பிக்கை (சிறுகதை)-வ.ரா. ... | 23 |
| உதகை தாவரவியல் பூங்கா வளர்ச்சிப் பணிகள் ... | 29 |
| விவசாயிகளுக்கு விற்பனை உதவி ... | 31 |
| வால்நட்சத்திரம் ... | 33 |
| நல்ல தங்காள் கதை ... | 39 |
| காணும்பொருளெல்லாம் கலைவண்ணம் ... | 42 |
| படமும் செய்தியும் | 46 |



# தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2022

பங்குனித் திங்கள் - 2

மலர்: 21 இதழ்: 18

16-3-1991


159891
சென்னை-600 00

# தமிழ்நாடு அரசின்

## 1991-92-ஆம் ஆண்டிற்கான

# வரவு - செலவுத் திட்டம்

அரசியலமைப்புச் சட்டத்தின் 356-ஆம் பிரிவின் கீழ் 30.1.1991 அன்று பிறப்பிக்கப் பட்ட உத்தரவின் காரணமாக, தமிழ்நாடு மாநிலச் சட்டமன்றத்தின் அதிகாரங்கள், நாடாளுமன்றத் தால் அல்லது நாடாளுமன்றத்தின் ஆணை உரிமை யின் பேரில் செலுத்தத்தக்கவையாகும். எனவே, 1991-92-ஆம் நிதி ஆண்டிற்கான தமிழ்நாடு மாநிலத்தின் வரவினங்கள், செலவினங்கள் குறித்த விவரங்கள் அவைமுன் வைக்கப்படு கின்றன.



**1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு**

நடப்பாண்டிற்கான திருத்த மதிப்பீடுகளில் ரூ.3,418,20 கோடி மாநில வரியும், வரியில்லாத ஏனைய வருவாயும் இடம்பெறுகிறது. இவை வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை விட ரூ.360.96 கோடி உயர்வைக் காட்டுகின்றன. வணிகவரிகள், மாநில ஆயத்தீர்வை வருவாய்கள் ஆகியவற்றின் கீழ் கூடுதலாகக் கணிசமான அள விற்கு நிதி ஆதாரங்களைத் திரட்டியதே இதற்குக் காரணங்களாகும்.

வரவு - செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள ரூ.1340.22 கோடியுடன் ஒப்பிடுகையில் திருத்த மதிப்பீட்டில் மத்திய வரிகள் தீர்வைகள் ஆகிய வற்றில் மாநில அரசின் பங்கு மத்திய அரசிட மிருந்து பெறும் உதவி மானியங்கள் ரூ.1,557.46 கோடியாகும். வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டி லுள்ள ரூ.4,814.09 கோடியுடன் ஒப்பிடுகை யில், திருத்த மதிப்பீட்டில்வருவாய்க்கணக்கின் கீழ் செலவு ரூ.5,266.32 கோடியாகும்.



**பிறரிடம் அன்பு செலுத்தினா லன்றி அவர்களை அறிய இயலாது என்பதையும் – உங்களிடம் நல் லெண்ணம் இல்லாவிடில் இது சிரம சாத்தியம் என்பதையும் உணருங்கள்.**

**—மூதறிஞர் ராஜாஜி.**



அரசுப் பணியாளர்களுக்கு ஊதியக் கொடை வழங்கியது, மாநில அரசு எடுத்துக் கொண்ட நகராட்சிப் பள்ளிகளிலுள்ள ஆசிரியர்களுக்குச் சம்பளம் கொடுத்தது, சம்பள வீதங்களைச் செயல்படுத்தியது, ஓய்வூதியங்களைத் திருத்தி மைத்தது ஆகியவையே ரூ.452.23 கோடி உயர் விற்குக் காரணமாகும் எனினும், கூடுதல் வருவாய் திரட்டிய்து, வருவாய்க்கணக்கில் மதிப்பிடப்பட்ட செலவு உயர்வைவிட் ரூ.125.96 கோடி அதிக மாக இருப்பதால், வரவு-செலவுத் திட்டத்தில் ஏற்பட்ட ரூ.416.63 கோடி பற்றாக்குறை ரூ.290.67 கோடி பற்றாக்குறையாக ஆகிவிடும்.

மூலதனக் கணக்கில் வரவினங்கள், வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.1,773.59 கோடி யாகக் கணக்கிட்டிருப்பதை ஒப்பிடுகையில், அவை தற்பொழுது ரூ.2,119.95 கோடியாகக் கணக் கிடப்பட்டுள்ளன. பொதுக் கணக்கிலுள்ள பற்று வரவுகளையும் ஆரம்பப் பற்றாக்குறைகளையும் கணக்கில் கொண்டு பார்த்தால், வரவு-செலவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட ரூ.510.10 கோடி பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில், நடப்பாண்டு ரூ.179.10 கோடி பற்றாக்குறையுடன் முடிவடை யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு**

வருவாய் வரவுகள் ரூ.5,585.03 கோடியாக இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளன. 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டுடன் ஒப்பிடுகையில் இவை ரூ.609.38 கோடி அதிக மாக உள்ளதைக் காட்டுகின்றன. மாநில வரி-வரியல்லாத ஏனைய வருவாய் ரூ.3,897.99 கோடியாகக் கணக்கிடப்பட்டுள்ளது. 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைக் காட்டிலும் இவை ரூ.479.79 கோடி அதிகமாகும். மத்திய வரிகள்/ தீர்வைகளில் மாநில அரசின் பங்கு, மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் உதவி மானியங்கள் ரூ.1,687.04 கோடியாகும். 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டைவிட இது ரூ.129.58 கோடி அதிகமாகும். வருவாய்க்கணக்கில் செலவு ரூ.5,955.03 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

மூலதனக் கணக்கில் வரவினங்கள் ரூ.1,795.04 கோடியாகக் காட்டப்பட்டுள்ளன. கடன்கள் முன் பணங்கள் உள்படச் செலவு ரூ.1,632.35 கோடி யாகக் காட்டப்பட்டுள்ளது. வருவாய்/ கணக்கு, மூலதனக் கணக்கு, பொதுக்கணக்கு ஆகிய வற்றைக் கருத்தில் கொண்டு பார்க்கையில், பற்று வரவுகள் தொடர்பான 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.128.21 கோடி பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. ரூ.179.10 கோடி ஆரம்பப் பற்றாக்குறையைக் கணக்கில் கொண்டு பார்க்கையில், 1991-92-ஆம் ஆண்டு ரூ.307.31 கோடி இறுதிப் பற்றாக்குறையுடன் முடிவடைகிறது.

**உடனடி செலவிற்கான மானிய அனுமதி**


1991-92-ஆம் ஆண்டிற்கான, ஆண்டு நிதி நிலை அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ள தாலும், தொடர்புடைய மானியக் கோரிக்கைகள் ஏனைய வரவு செலவுத் திட்ட ஆவணங்களுடன் மதிப்பிற்குரிய உறுப்பினர்களுக்கு அனுப்பப்பட்டு வருவதாலும் 1991-92-ஆம் நிதியாண்டிற்கு முதல் ஆறு மாதங்களுக்குத் தேவைப்படும் உடனடிச் செலவிற்கான மானிய அனுமதியை வழங்குமாறு இந்நிலையில் கேட்டுக் கொள்கிறேன்.

(—நாடாளுமன்றத்தில் 1991-ஆம் ஆண்டு மார்ச்சு 5-ஆம் நாள் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை)

## வரவு-செலவுத் திட்டம் முக்கிய விவரங்கள்

**1990-91**-ஆம் ஆண்டிற்கான ஏற்பளிக் கப்பட்ட திட்ட ஒதுக்கீடு ரூ.1,450 கோடியாகும். மின்சக்திக்காக, மின்சக்தி நிதியுதவி நிறுவனத்திட மிருந்து பெற்ற ரூ.100 கோடி நிதியுதவியும் இதில் அடங்கும்.

1990-91-ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப் பீடு, ரூ.1,488 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது. 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.1,600.42 கோடிக் கான ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீட்டைச் செயல்படுத்த வகை செய்கிறது.




1991-92-ஆம் ஆண்டிற்கான இந்த ரூ.1,600.42 கோடி திட்ட ஒதுக்கீட்டுடன், மின்சக்தி நிதியுதவி நிறுவனத்தின் உதவியுடன் கூடுதலாக ரூ.100 கோடி நிதி ஒதுக்கீடும் இருக்கும். எனவே, 1990-91-ஆம் ஆண்டு ரூ.1,350 கோடியாக இருந்த திட்ட ஒதுக்கீடு 1991-92-இல் ரூ.1,600.42 கோடியாக உயர்ந்துள்ளது அல்லது 1990-91-இல் ரூ.1,450 கோடி என்பதிலிருந்து 1991-92-இல் ரூ.1,700.42 கோடியாக அதிகரித்துள்ளது.

நாடாளுமன்ற மக்களவையில் 5.3.1991 அன்று வைக்கப்பட்ட 1991-92- ஆம் ஆண்டிற் கான தமிழ்நாடு வரவு-செலவுத் திட்டம் குறித்த முக்கிய விவரங்கள்:


★ 1990-91-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.510.10 கோடியாக இருந்த இறுதிப் பற்றாக்குறை (-) 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் ரூ.179.10 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது (-).

★ 1991-92-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டிலுள்ள இறுதிப் பற்றாக்குறை ரூ.307.31 கோடியாக (-) இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

★ 1991-92-ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு ரூ.1,600.42 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது.

★ 1990-91-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் திட்ட ஒதுக்கீடு ரூ.1,450 கோடியை விட அதிகரிக்கும். 1990-91-ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு ரூ.1,488 கோடி திட்ட ஒதுக்கீட்டிற்கு வகை செய்கிறது.

★ மின்சக்தி நிதியுதவி நிறுவனம் அளிக்கும் நிதியுதவியின் அடிப்படையிலான ரூ.100 கோடி ஒதுக்கீடு உட்பட 1990-91-ஆம் ஆண்டு மின் சக்தித் துறையின் மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.457 கோடியாகும். 1991-92-இல், திட்ட



ஒதுக்கீடு ரூ.525 கோடியாக அதிகரிக்கப்படும். இதில் மின்சக்தி நிதியுதவி நபுவனத்திடமிருந்து பெறும் கூடுதல் நிதி ஒதுக்கீடு ரூ.100 கோடியும், திட்ட ஒதுக்கீடு, ரூ.425 கோடியும் அடங்கும்.

★ குடிநீர் வழங்கலுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.166 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.199 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

★ வேளாண்மை, அது தொடர்பான பணிகள் ஆகியவற்றுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.160 கோடியாக இருந்தது; இது 1991 - 92-இல் ரூ.184 கோடியாக உயர்ந்துள்ளது.

★ பாசனம், வெள்ளக்கட்டுப்பாடு குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91- இல் ரூ.74 கோடியாக இருந்தது; இது 1991-92-ல் ரூ.94 கோடியாக உயர்ந்துள்ளது.

★ தொழில்கள், கனிமங்கள் குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.92 கோடியாக இருந்தது; இது 1991-92-இல் ரூ.114 கோடியாக உயர்ந்துள்ளது.

★ கல்வி குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.37 கோடியாக இருந்தது; இது 1991-92-இல் ரூ.76 கோடியாக உயர்ந்துள்ளது.

★ வீட்டு வசதி, நகர்ப்பகுதி மேம்பாடு குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-ஆம் ஆண்டில் ரூ.96 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.111 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

★ ஆதி திராவிடர்/பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்கான திட்ட ஒதுக்கீடு 1990-91-இல், ரூ.41 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.59 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

★ சமூக நலன், சத்துணவு, குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.79 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.91 கோடியாக உயர்த்தப் பட்டுள்ளது.



★ சாலைகள், பாலங்கள் குறித்த திட்ட ஒதுக்கீடு 1990-91-இல் ரூ.62 கோடியாக இருந்தது. இது 1991-92-இல் ரூ.76 கோடியாக அதிகரிக்கப் பட்டுள்ளது.

★ குடிநீர்ப்பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு குடிநீர் ஆதாரங்களைப் பெருக்கி, அவற்றைப் பாதுகாக்கத் தனி முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது. நகர்ப் பகுதி குடிநீர் வழங்கு திட்டங் களுக்கு வரவு-செலவுத் திட்டத்தில் மொத்தம் ரூ.89.03 கோடியும், ஊரகக் குடிநீர் வழங்குத் திட்டங்களுக்கு ரூ.61.51 கோடியும் வகை செய்யப் பட்டுள்ளது.

★ தெலுங்கு கங்கைத்திட்டத்திற்கு ரூ.75 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆந்திரப் பிரதேசத் திற்குக் கொடுப்பதற்கான ரூ.50 கோடியும், தமிழ்நாட்டு எல்லைக்குள் நிறைவேற்றப்படும் பணிக்கான ரூ.25 கோடியும் அடங்கும். இத் திட்டப்பணி விரைவுபடுத்தப்படும். சென்னை மாநகர் குடிநீர் வழங்கல் பணிக்கான நிறுவன நிதி உதவியும் பெறப்படும்.

★ இம்மாநிலத்தில் ஏதாவதொரு வகையில் கூட குடிநீர் வசதி இல்லாத 5,885 குடியிருப்புப் பகுதிகளுக்கு, வரும் ஆண்டில் ரூ.12 கோடி செலவில் குடிநீர் வசதி செய்து கொடுக்கப்படும்.

★ விரைவுபடுத்தப்பட்ட கிராமக் குடிநீர்த் திட்டத் திற்கு ரூ.33.70 கோடி ஒதுக்கப்படுகிறது.

★ தற்போதுள்ள பாசன வாயில்களைப் புதுப் பித்து, சீரமைப்பதற்குச் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகிறது. நீரைச் சிக்கனமாகக் கையாளு வதற்காக மேம்பட்ட தொழில் நுட்ப உத்திகள் கொண்ட புதிய திட்டமொன்று ரூ.5 கோடி செலவில் மேற்கொள்ளப்படும்.

★ சொட்டு நீர்ப் பாசனம், தெளிப்புப் பாசனம் ஆகிய பாசன முறைகளை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த சிறப்பாக முக்கியத்துவம் அளிக்கப் பட்டுள்ளது.

★ ஐரோப்பியப் பொருளாதாரக் குழுவின் உதவி பெறும் ஏரிகளை நவீனப்படுத்தும் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிக்கு ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தும் தொழில் நுட்ப உத்தியுடன் கூடிய சிறு பாசன ஆதாரங் களைப் புதுப்பிக்கும் புதிய திட்டம் ஒன்று ரூ.5 கோடி நிதி ஒதுக்கத்தில் தொடங்கப்படும்.

★ ரூ.310 கோடி செலவிலான ஏழாண்டுக்கால அளவில் நிறைவேற்றப்படக் கூடிய உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் தொடங்கப் படும். இதற்காக 1991-92- வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.10 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

★ மானாவாரி சாகுபடிக்கான புதிய நீர் வரத்துப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் வரும் ஆண்டில் 34 வளர்ச்சி வட்டாரங்களில் செயல்படுத்தப்படும்.

★ தீவிர அரிசி உற்பத்தித் திட்டம் பத்து மாவட்டங் களில் செயல்படுத்தப்படும்.

★ உலக வங்கி நிதி உதவியுடன் கூடிய பட்டுப் புழு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் ரூ.4.5 கோடி நிதி ஒதுக்கீட்டில் 32,500 பேர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும்.

★ சுவீடன் அனைத்து நாட்டு மேம்பாட்டு அமைப் பின் நிதி உதவியுடன் கூடிய சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் 1991-92-ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற் காக நிதி ஒதுக்கீடு ரூ.19.55 கோடியாக இருக்கும்.

★ எஞ்சியுள்ள 1,184 கால்நடை வளர்ப்பு மையங்களில் உறை விந்து மூலம் கருத்தரிக்கச் செய்வதற்கான வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

★ ஐந்து மாவட்டங்களில், செம்மறியாடு வளர்ப் புத் திட்டம் 1991-92-இல் ரூ.2 கோடி நிதி ஒதுக்கீட்டில் தொடர்ந்து செயற்படுத்தப்படும்.

★ ஐந்து மாவட்டங்களில் மீனவர்களுக்குக் கட்டு மரங்கள், வல்லம் ஏனைய சாதனங்கள் ஆகிய வற்றை வழங்குவதற்கான தேசியக் கூட்டுறவு வளர்ச்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் கூடிய ஒருங்கிணைந்த கடன் மீன் பிடித்திட்டம் தொடங் கப்படும்.

★ வரும் ஆண்டில் மீனவர்களுக்காகப் புதிதாக 3,000 வீடுகள் கட்டப்படும்.

★ கிராமப் பகுதி குறைந்த அளவு தேவைகள் திட்டத்தின் கீழ், தொடக்கப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல், 1000-க்குக் குறைவாக மக்கள் தொகை உள்ள குடியிருப்புகளில் கிராமியச் சாலைகள் அமைத்தல், பாசன ஏரிகளைப் பழுது பார்த்துப் புதுப்பித்தல், கிராமப் பகுதித் தகவல் தொடர்புத் திட்டங்கள், கிராமப் பகுதி குடிநீர் வழங்கல் பணிகள், சுகாதாரத் துணை நிலையங்கள் ஏற்






படுத்துதல், நண்பகல் உணவு மையங்கள் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படும். வரும் ஆண்டில் கிராமப் பகுதி குறைந்த அளவு தேவைகள் திட்டத்திற்காகத் திட்ட ஒதுக்கீடு ரூ.30 கோடியாக இருக்கும்.

★ வரும் ஆண்டில், புதிதாக, 222 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்யப்படும்.

★ காவிரி வடிநிலப் பகுதியிலிருந்து கிடைக்கும் எரிவாயுவைப் பயன்படுத்துவதன் மூலம் முதற் கட்டப் பணியாக 300 மெகாவாட் அளவிற்கு மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக உடனடி நட வடிக்கை மேற்கொள்ளப்படும்.

★ பெரியார், தஞ்சாவூர், திருநெல்வேலி-கட்ட பொம்மன் ஆகிய மாவட்டங்களில் மூன்று புதிய தொழில் வளர்ச்சி மையங்கள் ஏற்படுத்தப்படும். ஒவ்வோர் வளர்ச்சி மையமும் சுமார் 1000 ஏக்கர் பரப்பளவில் ரூ.30 காடி செலவில் ஏற்படுத்தப் படும். இத்திட்டப் பணிக்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.4 கோடி நிதி ஒதுக்கப் பட்டுள்ளது.

★ சென்னைக்கு அருகே சோளிங்கநல்லூரில் மின்னணுவியல் நகரம் ஏற்படுத்தப்படும். இத் திட்டத்திற்காக மொத்தம் ரூ.40.6 கோடி செல வாகும்.

★ தொழில் தகவல் மையம் ஒன்றும், தொழில் முனைவோர் பயிற்சி மையம் ஒன்றும் புதிதாக ஏற்படுத்தப்படும்.

★ நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தள்ளு படித் தொகையைத் திருப்பிக் கொடுப்பதற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.37 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், தள்ளுபடி வழங்கப்பட்ட தொகையை உரிய காலத்தில் திருப்பிக் கொடுக்க முடியும்.

★ புதிதாக 1500 இடைநிலை ஆசிரியர்கள் பதவி ஏற்படுத்தப்படும்.

★ உலக வங்கியின் நிதி உதவியுடன் பல்திறத் தொழில் பயிற்சிப் பள்ளிகளை மேம்படுத்து வதற்கான திட்டம் ஒன்று தொடங்கப்படும்.

★ தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்

தின் கீழ் ரூ.32 கோடி செலவில் 15,000 மேம்படுத்தப்பட்ட மனைகள் வரும் ஆண்டில் ஒதுக்கப்படும்.

★ தமிழ்நாடு நகர்ப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் வரும் ஆண்டில் ரூ.8 கோடி செலவில் 25,000 குடும்பங்கள் பயனடையும் வகையில் குடிசைப் பகுதி மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப் படும்.

★ சென்னை மாநகரில் நடைபாதைகளில் வசிக்கும் 4096 குடும்பங்கள் வேறு இடத்தில் குடியமர்த்தப் படும்.

★ 1,00,000 வீட்டு உரிமையாளர்களுக்குப் பயன் அளிக்கும் வகையில் குடியிருப்புகளை மேம்படுத்தும் திட்டம் மேற்கொள்ளப்படும்.

★ தமிழ்நாடு சத்துணவுத் திட்டத்தின் கீழ் பழைய பாத்திரங்களுக்குப் 'பதிலாகப் புதிய பாத்திரங் களை வழங்குவதற்காக ரூ.1 கோடி வகை செய்யப் படும்.

★ சத்துணவுத் திட்டத்தை வலுப்படுத்த இரும்புச் சத்து நிறைந்த உப்பு வழங்குவது' அறிமுகப் படுத்தப்படும்.

★ சத்துணவுத் திட்ட மையங்களில் உள்ள சமய லறைகளைப் புதுப்பிக்கும் பணி அடுத்த கல்வி ஆண்டு தொடங்குவதற்கு முன் முடிக்கப்படும்.

★ வரும் ஆண்டில், ஆதி திராவிடர், பழங் குடியினருக்காக 40 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.

★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ், ஆதி திராவிட உழவர்களுக்கு 2,000 கிணறுகள் இலவசமாகத் தோண்டப்படும்.

★ நிலங்களைக் கையகப்படுத்துவதன் மூலம் ஆதி திராவிடர்களுக்கு 75,000 இலவச வீட்டு மனை களுக்கு வகை செய்யப்படும்.

★ பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப் பட்டோர், சீர் மரபினர் ஆகியோருக்கு 50 புதிய மாணவர் இல்லங்கள் தொடங்கப்படும்.

★ வரும் ஆண்டில் ரூ.6.4 கோடி செலவில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட் டோர் ஆகியோருக்காக 63 மாணவர் இல்லங்கள்/ கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும்.

★ தருமபுரி மாவட்டத்துடன் தென்னார்க்காடு, சேலம் மாவட்டங்களில் வேளாண்மை மேம் பாட்டுக்கான அனைத்து நாடுகள் நிதியுதவி யுடனான (மகளிர்) திட்டம் செயல் படுத்தப்படும். வரும் ஆண்டில் 7,500 மகளிர் இதன் மூலம் பயன் அடைவர்.

★ ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் சராசரி 100 நாட்களுக்கு 7 இலட்சம் பேர் வேலை வாய்ப்புப் பெறுவர். இத்திட்டத்திற்கான மொத்த நிதி ஒதுக்கீடு ரூ.172 கோடியாகும்.


**தஞ்சாவூர் நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலை லிட்.டி.878, தஞ்சாவூர்**

**பதிவு செய்யப்பட்ட தேதி: 20.4.1940** **வேலை துவக்கப்பட்ட தேதி: 1.5.1940**

**பொன் விழா ஆண்டு**

தஞ்சாவூரைத் தலைமை இடமாகக் கொண்டு இப்பண்டகசாலை ஏழு தாலுக்காக்களைச் செயல் எல்லையாகக் கொண்டு இயங்கி வருகிறது. பொதுமக்களின் அன்றாடத் தேவைகளை ஒரே இடத்தில் பெற ஏதுவாக 25 பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டு தஞ்சாவூரில் "காவேரி கூட்டுறவுச் சிறப்பங்காடி" இயங்கி வருகின்றது.

**31.10.90-இல்**

| | | | |
|---|---|---|---|
| 1. | உறுப்பினர் | ... | 43,887 |
| 2. | பங்கு மூலதனம் | ... | ரூ.33.56 இலட்சம் |
| 3. | விற்பனை | | |
| | 1987-88 | ... | ரூ.16.23 கோடி |
| | 1988-89 | ... | ரூ.17.04 ,, |
| | 1989-90 | ... | ரூ.17.23 ,, |
| | 1990-91 (Upto 31.12.90) | ... | ரூ.12.46 ,, |
| 4. | லாபம் | ... | ரூ.2.80 இலட்சம் |
| 5. | செயல்படும் சிறப்பு அங்காடி | ... | 3 |
| 6. | செயல்படும் சிற்றங்காடி | ... | 5 |
| 7. | செயல்படும் கிளைகளும், நியாய விலைக்கடைகளும் | ... | 60 |

நுகர்வோர்கள் வாங்க விரும்பும் பொருளைத் தாங்களே தேர்ந்தெடுக்க வசதியாக, தஞ்சாவூர் காவேரி சிறப்பங்காடியில் சுயசேவைப் பகுதி 1,200 பொருட்களைக் கொண்டு இயங்குகிறது. கொள்முதல் செய்யப்பட்ட பொருட்களின் தரத்தைப் பரிசோதனை செய்ய தரப் பரிசோதனைக் கூடமும், தரமான கடலை எண்ணெய் வழங்க எண்ணெய் பிழியும் ஆலையும் இப்பண்டக சாலையில் செயல்படுகிறது.

நுகர்வோரின் திருப்தியே எங்கள் குறிக்கோள்.

எம். ஆனந்தராவ், பி.காம்.,
இணைப்பதிவாளர்/தனி அலுவலர்




இரண்டாவது அட்டை சொல்லும் செய்தி

# தமிழ்நாட்டில் ஜெர்மனி அதிபர்

இணைந்த ஜெர்மனி நாட்டின் மேதகு அதிபர் ரிச்சர்டு வான் வைஸாக்கர் தனது இந்தியச் சுற்றுப் பயணத்தின் ஒரு பகுதியாகத், தமிழ் நாட்டுக்கு மார்ச்-3 மற்றும் 4 தேதிகளில் வருகை தந்தார்.

மார்ச்-3 ஆம் தேதி சென்னை விமான நிலையத்தில் இந்திய விமானப்படை விமானம் மூலம் வந்தடைந்த மேதகு ஜெர்மனி அதிபரை மேதகு தமிழக ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் மாலையணிவித்து அன்புடன் வர வேற்றார். மற்றும் ஆளுநரின் ஆலோசகர்கள் திரு வி.கார்த்திகேயன், திரு வி. இராமச்சந்திரன், தலைமைச் செயலர் திரு டி.வி. அந்தோணி, காவல்துறைத் தலைவர் திரு பி.பி. ரெங்கசாமி மற்றும் அரசு உயர் அலுவலர்களும் மேதகு ஜெர்மனி நாட்டின் அதிபரை அன்புடன் வரவேற்றார்கள்.

மேதகு அதிபர் திரு. வைஸாக் கருடன் அவரது துணைவியார் திருமதி மரியான், ஜெர்மனி நாட் டின் பொருளாதாரக் கூட்டுறவு அமைச்சர் திரு வேய்க் மற்றும் மத்திய சுற்றுச்சூழல்- வனத்துறை இணை அமைச்சர் திருமதி மேனகா காந்தி ஆகியோரும் வருகை புரிந் தனர்; மேலும் ஜெர்மனி நாட்டின் புகழ்மிக்க பத்திரிகையாளர்களும், அலுவலர்களும் வருகை தந்தனர்.

மார்ச்-3 ஆம் தேதியன்று மாலை ஜெர்மனி அதிபரும் அவரது துணைவி யாரும் மாமல்லபுரம் சென்று அங் குள்ள 'அர்ச்சுனன் தவம்', ஐந்து ரதங்கள் மற்றும் கடற்கரைக் கோயில் ஆகிய பல்லவர்காலச் சிற்பங்களைக் கண்டு வியந்து மகிழ்ந்தார்கள்.

பின்னர், மேதகு ஜெர்மனி அதிபர் அவர்கள் சென்னை பால வாக்கத்திலுள்ள உடல் ஊனமுற்றோர் வாழ்க்கை உதவி மையத்திற்குச் சென்று பார்வையிட்டு, அங்கு வசிக்கும் 280 உடல் ஊனமுற்றோ ருடனும் அளவளாவினார். இம் மையத்தில் நடைபெற்றுவரும் தூய தொண்டுப் பணிகளைக் கண்டு மகிழ்வுற்றார். மையத்திற்கு ரூ.65,000/- நன்கொடையாக வழங்கினார்.

இந்த மையத்தின் பணி களுக்காக ஜெர்மனி அரசு இதுவரை ரூ.2.5 கோடி நிதியுதவி அளித் துள்ளது.

மார்ச் 4-ந்தேதி அன்று சென்னை யில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கல்லூரி (ஐ.ஐ.டி.), மேதகு ஜெர்மனி அதிபருக்கு கௌரவ டாக்டர் பட்டம் வழங்கி கௌரவித்தது. ஐ.ஐ.டி. ஆளுநர்கள் குழுத் தலைவர் டாக்டர் எம்.எஸ். சுவாமிநாதன் சிறப்புப் பட்டமளிப்பு விழாவைத் துவக்கி வைத்தார். ஐ.ஐ.டி. நிறுவன இயக்குநர் திரு என்.வி.சி. சுவாமி, ஜெர்மனி அதிபருக்கு டாக்டர் பட்டத்தினை வழங்கினார்.

அடுத்து, ஐ.ஐ.டி. வளாகத்தி லுள்ள சீமன்ஸ் கம்ப்யூட்டர் மையத் தைப் பார்வையிட்டு, பின்னர் பெருங் கடல் பொறியியல் மையத்தையும் பார்வையிட்டு அங்கு அலைகளி லிருந்து மின்சக்தி தயாரிக்கும் இயந் திரம் ஒன்றை மேதகு அதிபர் துவக்கி வைத்தார். ஐ.ஐ.டி. நிறுவனத்திற்கு ஜெர்மனி அதிபர் தனது - நல் எண்ணத்தைத் தெரிவிக்கும் வகை யில் புத்தகங்கள் வாங்குவதற்கென ரூ.1.3 இலட்சம் நன்கொடையாக வழங்கினார்.

ஜெர்மானிய அதிபரின் இரண்டு நாள் சுற்றுப் பயணம் முடிந்தபின் அவரை 4.3.1991 அன்று மாலை சென்னை விமான நிலையத்தில் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள், ஆளுநரின் ஆலோசகர்கள், அரசு தலைமைச் செயலர், காவல்துறைத் தலைவர் மற்றும் அரசு உயர் அலு வலர்கள் அன்புடன் வழியனுப்பி வைத்தார்கள்.

- க. குமாரவேலு.


**தமிழரசு**
சந்தா விவரம்

தமிழ் ........ ஓராண்டு - ரூ.24
அரையாண்டு - ரூ.12

ஆங்கிலம் ... ஓராண்டு - ரூ. 12
(அரையாண்டு சந்தா கிடையாது)

விவரங்களுக்கு :
உதவி இயக்குநர் தமிழரசு,
(விற்பனை மற்றும் விநியோகம்)
அரசினர் தோட்டம், சென்னை-600 002.

# மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
# தென்னார்க்காடு மாவட்டம் (இ) கடலூர்.

**நலிந்தோர் மேம்பாட்டிற்கு நல்லதோர் திட்டம்:**

வறுமைக்கோட்டிற்குக்கீழ் வாழ்வோரின் வளமான வாழ்விற்கும், கிராம முன்னேற்றத் திற்கும் அரசின் வளர்ச்சிப் பணிகளின் நலனை எய்திட, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை யினால் செயல்படுத்தப்படும் கீழ்க்கண்ட திட்டங்களுக்கு ஆதரவு தர வேண்டுகிறோம்.

**அ. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்:**

மானியத்துடன் கடன் வசதி அளித்து சுயவேலை செய்வதை ஊக்குவித்தல்.

| | | |
|---|---|---|
| பயன்பெறும் குடும்பங்கள் | - | 14,125 |
| ஒதுக்கீடு ரூ.லட்சத்தில் | - | 444.389 |

குறிப்பாக ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு மானியத் தொகை 50 சதவிகிதம் உதவி அதிகப்பட்சமாக ரூ.5,000 வரை இவ்வாண்டில் வழங்கப்படும்.

**ஆ. ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டம்:**

| | | |
|---|---|---|
| 1990-91-ஆம் ஆண்டிற்கு வேலைகள் | - | 10,544 |
| ஒதுக்கீடு ரூ.லட்சத்தில் | - | 1,733.23 |

ஒவ்வொரு வீட்டிற்கும் மாநில அரசு வழங்கும் ரூ.4,000-க்கான தொகையுடன் இந்த ஆண்டில் 5,100 கான்கிரீட் வீடுகள் ஆதிதிராவிடர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்படுகின்றன.

**இ. மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்:**

1987-88-ஆம் ஆண்டு முதல் இம்மாவட்டத்தில் டோக்ரா திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டு முடிய 16 வட்டாரங்களில் 363 மகளிர் குழுக்கள் ஆரம்பிக்கப் பட்டு அங்கத்தினர்களுக்கு 50 சதவிகிதம் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டு மத்திய அரசினால் 100 குழுக்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. குழுக்கள் மூலம் பொம்மைகள் தயாரித்தல், நெசவு செய்தல், பாய் முடைதல், மெழுகுவர்த்தி தயாரித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்காணும் திட்டங்கள்பற்றி அறிய வேண்டிய இடம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம்.

**இரா.தனபதி, பி.காம்.,**
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
தென்னார்க்காடு மாவட்டம்
கடலூர்

**திரு.அ.இளங்கோவன், இ.ஆ.ப.**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும்
பெருந்தலைவர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
தென்னார்க்காடு மாவட்டம் (இ) கடலூர்



# கால்நடைச் செல்வம்

**டாக்டர்.தி.க.கோவிந்தராசன்**
இயக்குநர்
காலநடைப் பராமரிப்புத் துறை

**கா**ல்நடைப் பராமரிப்புத் துறை, தமிழ்நாட்டில் பல்லாண்டுக்காலமாகத் தமிழ்நாட்டிலுள்ள பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காகப் பல் வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வந் துள்ளது.

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு, கிராமப்புற விவசாயிகளால் நீண்ட காலமாகச் செயல்படுத்தப்பட்டு வந்த போதிலும், கால்நடைகளின் பால், இறைச்சி, முட்டை உற்பத்திகுறைவாக இருந்த காரணத்தால் அவர்கள் கால்நடை வளர்ப்பில் அதிக அக்கறை காட்ட வில்லை. ஆனாலும் சமீப காலங்களில் கால்நடை வளர்ப்பு, கால்நடை இன விருத்தி, கால்நடைத் தீவனம் மற்றும் கால்நடைகளில் நோய்த் தடுப்பு முறை களில் ஏற்பட்டுள்ள விஞ்ஞான முன் னேற்றத்தின் காரணமாகத் தமிழ்நாட்டில் உள்ள பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகள் உற்பத்தித்திறன் வெகு வாக உயர்ந்துள்ளது. இதன் காரணமாகத் தமிழ்நாட்டில் ஏராளமான விவசாயக் குடும்பங்கள் கால்நடை வளர்ப்பை நல்ல வருமானம் கொடுக்கக்கூடிய முழுநேரத் தொழில் ஆகவும் உபரி வருமானம் கொடுக்கக்கூடிய பகுதி நேரத் தொழிலாக வும் ஏற்றுச் செயல்படுத்தி வருகின்றனர்.

தமிழகத்தில் 1982-ஆம் ஆண்டு கால்நடைக் கணக்கின்படி ஒரு கோடியே 4 இலட்சம் மாடுகளும் 32 இலட்சம் எருமைகளும் 55 இலட்சம் ஆடுகளும் (செம்மறி ஆடு) 52 இலட்சம் வெள்ளாடு களும் ஒரு கோடியே 83 இலட்சம் கோழிகளும் இருந்தன. தமிழ் நாட்டில் உள்ள கால்நடைகளின் உற்பத்தித்திறன் அதிகரிக்கப்பட்டதன் காரணத்தால் கிராமப்புற விவசாயிகள் நல்ல தரமான கால்நடைகளை உற்பத்தி செய்து அதன் மூலம் உற்பத்தியை அதிகரித்ததால், உற் பத்திக் குறைவான மாடுகளை அகற்றி விற்று விட்டனர். இதன் காரணமாக 1989-ஆம் ஆண்டு எடுத்த கால்நடைக் கணக்கின்படி, தமிழ் நாட்டில் 93 இலட்சம் மாடுகளும், 31 இலட்சம் எருமைகளும், 59 இலட்சம் செம்மறி ஆடுகளும், 59 இலட்சம் வெள்ளாடு களும், இரண்டு கோடியே 14 இலட்சம் கோழிகளும் உள்ளதாகக் கணக்கெடுக்கப் பட்டுள்ளது.

**பால் உற்பத்தி**


தமிழ்நாட்டில் தற்பொழுது 31 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதியான பசுக்களும் 16 இலட்சம் இனவிருத்திக்குத் தகுதியான எருமைகளும் உள்ளன. தமிழ் நாட்டில் உள்ள பசுக்கள் மற்றும் எருமை களின் பால் உற்பத்தித்திறனை அதிகப் படுத்துவதற்குத் தமிழக அரசு, அதிகம் பால் தரக்கூடிய உயர்தர, அயலின, ஜெர்ஸி, பிரிசியன் பொலி காளை களைக் கொண்டு, தமிழ் நாட்டிலுள்ள பசுக்களின் இனவிருத்திக்கு உபயோகப் படுத்தி வந்துள்ளது. இதேபோல் தமிழ் நாட்டில் உள்ள குறைந்த அளவு பால் கொடுக்கக்கூடிய நாட்டின எருமைகளின் இனப் பெருக்கத்திற்காக வட இந்தியா விலிருந்து கொண்டுவரப்பட்ட அதிக அளவு பால் கொடுக்கக்கூடிய இனத்தைச் சேர்ந்த முர்ரா பொலி காளைகளைக் கொண்டு இனவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்த முயற்சிகளின் காரணமாகத் தமிழ் நாட்டில் தற்பொழுது ஒரு நாளைக்கு 10 லிட்டரிலிருந்து 15 லிட்டர் பால் கொடுக்கக்கூடிய கலப்பினப் பசுக்கள் ஏராளமாக உள்ளன. ஒரு நாளைக்கு 15 லிட்டரிலிருந்து 20 லிட்டர் பால் கொடுக் கக்கூடிய பசுக்களும் அதிக அளவில் உள்ளன. எருமைகளின் பால் உற்பத்தி கணிசமாக அதிகரித்து, ஒரு நாளைக்கு 7 லிட்டரிலிருந்து 8 லிட்டர் வரை பால் கொடுக்கக் கூடிய எருமைகளும் நிறைய உள்ளன.

இந்த முயற்சிகளின் காரணமாகத் தமிழ்நாட்டில் உற்பத்தியான மொத்த பாலின் அளவு 1978-79-ஆம் ஆண்டு 17 இலட்சம் டன்னாக இருந்தது, 1989-90 -ஆம் ஆண்டு 34 இலட்சம் டன்னாக உயர்ந்துள்ளது. இதன் பயனாகத் தமிழ் நாட்டில் ஒரு நாளைக்கு ஒரு நபருக்குக் கிடைக்கக்கூடிய பாலின் அளவு 1978-79-இல் 99 கிராம் ஆக இருந்தது, 1989-90-இல் 169 கிராம் ஆக உயர்ந் துள்ளது.

தமிழ்நாட்டில் கிராமப்புங்களில் உள்ள பசுக்கள் மற்றும் எருமைகளின் இனவிருத்திக்காக் கால்நடைப் பரா மரிப்புத்துறை 2,770 நிலையங்களின் செயற்கைமுறை இனவிருத்திவருகிறது. இந்த மொத்த நிலையங்களில், 1,859 நிலையங்களில் உறைவிந்து மூலம் செயற்கை முறையில் கருவூட்டல் பணி செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 911 நிலையங்களில் பதப்படுத்தப்பட்ட திரவ விந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணி செய்யப்பட்டு வருகிறது. இவ்விதம் உறைவிந்து மூலம் இனவிருத்தி செய்யப்படும் பசுக்கள் எருமைகளின் இனவிருத்திக்குத் தேவையான உறை விந்து தயாரிக்கக் கால்நடைப் பராமரிப்புத்


நான்காம் அட்டை சொல்லும் செய்தி



துறை ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்), அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்), ஊட்டி (நீலகிரி மாவட்டம்), ஓசூர் (தர்மபுரி மாவட்டம்) ஆகிய இந்த 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையங்களில் ஜெர்ஸி, பிரிசியன் போன்ற அயல் இனப் பொலி காளைகளும், முர்ரா பொலி காளைகளும், காங்கேயம், அலிகார் போன்ற இந்திய இனப் பொலி காளைகளும் பராமரிக்கப்பட்டு உறைவிந்து தயாரிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பசுக்களின் இனப் பெருக்கம செய்யத் தொடங்கிய காலத்தில் ஜெர்ஸி மற்றும் பிரிசியன் பொலி காளைகள் அயல்நாட்டிலிருந்து வெகு மதியாகப் பெறப்பட்டன. இந்தப் பொலி காளைகள் நாட்டினப் பசுக்களின் இன விருத்திக்கு உபயோகப்படுத்தப்பட்டாலும், இவைகளின் உற்பத்தித் திறன் வெகு அதிகமாகக் காணப்படவில்லை. இதனால், கால்நடை பராமரிப்புத் துறை நாட்டினப் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்க எடுத்துக்கொண்ட முயற்சிகள் மிக வேகமாகச் செயல்படுத்தப்பட முடியவில்லை. இதனைக் கருத்திற்கொண்டு, கால்நடைப் பராமரிப்புத்துறை தமிழக அரசு வழங்கிய ரூபாய் 50 இலட்சம் பணத்தில் டென்மார்க் மற்றும் ஜெர்மனி நாடுகளிலிருந்து வெகு உன்னதமான வம்சாவழியைச் சேர்ந்த மிக அதிகமாகப் பால் கொடுத்த பசுக்களின் சந்ததியான 140 ஜெர்ஸி மற்றும் பிரிசியன் பொலி காளைகளை இறக்குமதி செய்துள்ளது.

இந்தப் பொலி காளைகள் தற்பொழுது ஈச்சங்கோட்டை, ஓசூர், ஊட்டி உறைவிந்து நிலையங்களில் வைக்கப்பட்டு உறைவிந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த உறைவிந்து தமிழ்நாட்டிலுள்ள பசுக்களின் இனப பெருக்கத்துக்குப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவ்விதம் மிக அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய வம்சாவழியைச் சேர்ந்த இந்தப் பொலிகாளைகளின் விந்தை உபயோகப் படுத்தி இனவிருத்தி செய்வதன் மூலம் பிறக்கும் கலப்பினக் கன்றுகள் மிகவும் தரமானவையாக இருக்கும். இவை மிக வேகமாக வளர்ந்து குறுகிய காலத்தில் பருவத்திற்கு வந்து வெகு அதிகமான பால் கொடுக்கக்கூடிய நல்ல பசுக்களாக இருக்கும்.

இந்த முயற்சியின் மூலம் தமிழ்நாட்டில் அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய கலப்பினக் கன்றுகள் அதிகம் பிறந்து அதன் மூலம் பால் உற்பத்தி வெகு கணிசமான அளவில் அதிகரித்து, அதனால் கறவைப் பசுக்கள் வளர்க்கும் ஏழை விவசாயிகளுக்குப் பெரிய அளவில் பயன் கொடுக்கும் என்பது நிச்சயம். அகில இந்திய அளவில் இந்த விதமான உயரகப் பொலிகாளைகள் வேறு மாநிலத்தில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

தமிழ் நாட்டில் கால்நடைப் பராமரிப்புத் துறை தீவிரமாகச் செயல்படுத்தி வரும் திட்டங்களினால் ஏற்பட்ட நன்மைகளைத் தக்கவைத்துக் கொள்வதற்காகவும், மேலும் பசுக்களின் பால் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் கால்நடைப் பராமரிப்புத் துறை மாநில அளவிலான கால்நடைத்| திட்டம் ஒன்றைச் செயல்படுத்தியுள்ளது. இந்தத் திட்டத்தை ஆராய்ந்த உலக வங்கி, முழுமையாக அங்கீகரித்து 1991-92-ஆம் ஆண்டிலிருந்து 7 ஆண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் கால்நடை வளர்ப்பை அபிவிருத்தி செய்து, பசுக்கள் மற்றும் எருமைகளின் தரத்தை உயர்த்த, உற்பத்தித் திறனை மேலும் அதிகரிக்க ரூ.37.22 கோடி ரூபாய் செலவில் திட்டத்தை அங்கீகரித்துள்ளது. இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள்:

> சாமானிய மக்களின் நலமே மிகவும் முக்கியமானது; ஒரு சிலருக்காக நாம் மிகப் பலரைப் பலி கொடுக்க முடியாது.
>
> —ஜவகர்லால் நேரு

★ கால்நடைப் பராமரிப்புத் துறையின் கீழ் இயங்கி வரும் உறைவிந்து நிலையங்களைப் பலப்படுத்தி, அதிக அளவில் உறைவிந்து உற்பத்தி செய்வது. இதன் மூலம் தமிழ் நாட்டிற்குத் தேவைப்படும் உறைவிந்தால் தன்னிறைவு பெறுதல்.

★ கால்நடைப் பராமரிப்புத் துறையில் உள்ள கால்நடைப் பண்ணைகளைப் பலப்படுத்தி, அதிக அளவில் தரமான பொலிகாளைகளை உற்பத்தி செய்தல்.

★ தமிழ் நாட்டில் தேர்ந்தெடுத்த 10 இடங்களில் உறைவிந்து மையங்களை ஏற்படுத்தி, எல்லாச் செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களுக்கும் உறைவிந்து மற்றும் திரவ நைட்ரஜன் வழங்க ஏற்பாடு செய்தல்.

★ தமிழ் நாட்டிலுள்ள எல்லா செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்களுக்கும் உறைவிந்து முறையை விரிவாக்குதல்.

★ பசுந்தீவன உற்பத்தியை அதிகரித்தல்.

★ விரிவாக்கப்பணிகளைத் தீவிரப் படுத்துதல்.

- இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், தமிழ் நாட்டில் கறவைப் பசுக்கள் வளர்ப்பு மிக இலாபகரமாக மாறி, விவசாயிகளுக்கு அதிக அளவில் பலனைக் கொடுத்து உதவும் என்பது நிச்சயம்.

**ஆடு வளர்ப்பு**

செம்மறி ஆடு வளர்ப்பு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு தமிழ் நாட்டில் கிராமப்புற விவசாயிகளிடம் பிரபலம் அடைந்து வருகிறது. ஆடு வளர்ப்பு ஏழை விவசாயக் குடும்பங்களுக்கு நல்ல முறையில் வருவாய் கொடுத்து வந்துள்ளது.

தமிழ்நாட்டிலுள்ள செம்மறி ஆடுகளின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதற்காகக் கால்நடைப் பராமரிப்புத் துறை, சாத்தூர் (காமராஜர் மாவட்ட), சின்னசேலம் (தென்னார்க்காடு மாவட்ட), ஆகிய இரண்டு இடங்களில் செம்மறி ஆட்டுப் பண்ணைகளையும், புதுக்கோட்டை, செட்டிநாடு, ஓசூர் மற்றும் அபிசேகப்பட்டி போன்ற 4 கால்நடைப் பண்ணைகளில் செம்மறி ஆடு வளர்ப்புப் பிரிவுகளையும் செயல்படுத்தி வருகிறது. இந்தப் பண்ணைகளில் இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், வேம்பூர், மாண்டியா போன்ற ஆட்டினங்கள் அறிவியல் முறையில் மேம்பாடு செய்யப்பட்டு நல்ல தரமான தேர்ந்தெடுத்த ஆட்டுக் கிடாய்கள், கிராமப் புறத்திலுள்ள ஆடுகளின் இனப் பெருக்கத்திற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இதே போல் சின்னசேலம் மற்றும் கொருக்கை பண்ணையில் ஜமுனாபாரி இன வெள்ளாடுகள், புதுக்கோட்டை மாவட்டப் பண்ணையில் தலைச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்படுகின்றன. அதிக அளவில் பால் கொடுக்கக் கூடிய இந்த ஆடுகளின் குட்டிகள் கிராமப்புறத்திலுள்ள வெள்ளாடுகளின் தரத்தை உயர்த்துவதற்காக விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இவ்விதப் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத் துறை ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி, பல்வேறு கால்நடை வளர்ப்புத் திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

இந்தத் திட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு மானியமும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் கடன் உதவியும் கிடைக்கக் கால்நடைப் பராமரிப்புத் துறை வழி செய்கிறது. தீவிரத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள கால்நடைகளுக்குக் கால்நடைப் பராமரிப்புத் துறை, உடல் நலம் பேணும் பணிகளையும், இனப் பெருக்கப் பணிகளையும் செய்து ஏழை விவசாயிகளுக்கு உதவி வருகிறது.

கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வரும் முக்கியப் பணிகளாவன:

**சிறப்புக் கால்நடைப் பராமரிப்புத் திட்டம்**

இந்தத் திட்டத்தின் கீழ் ஆடு வளர்ப்பு, பன்றி வளர்ப்பு, கன்று வளர்ப்பு மற்றும் கோழி வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஆடு வளர்ப்புத் திட்டத்தையும், கன்று வளர்ப்புத் திட்டத்தையும் கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்திற்கு 20 பெட்டை ஆடுகளும், ஒரு செம்மறி ஆட்டுக் கிடாவும் வாங்க மொத்தத் தொகையான ரூ.8,000 வழங்கவும், பயன்பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 25 சதவிகிதம் மானியம் ஆகச் சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தத் திட்டம் தற்பொழுது வடஆர்க்காடு, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

1976-77 முதல் இதுவரை 23,199 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெற்றுள்ளன. இந்த ஆண்டு 1,746 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவர். இந்தத் திட்டத்திற்காகத் தமிழக அரசு ரூபாய் 55.04 இலட்சம் மானியமாக வழங்கியுள்ளது.

**கன்று வளர்ப்புத் திட்டம்**

கன்று வளர்ப்புத் திட்டம் தமிழ்நாடு பால்வள வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், சிறு/குறு விவசாயிகள் மற்றும் நிலமற்ற விவசாயிகளுக்குக் கலப்பினக் கிடாரிக் கன்றுகள் வளர்க்க மானிய விலையில் தீவனம் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், இதுவரை 52,527 கன்றுகள் பயன் பெற்றுள்ளன. மொத்தம் ரூ.683.665 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், மதுரை மாவட்ட ங்களில் செயல்படுத்தப்படும் திட்டத்தின் கீழ், 2,500 கலப்பினக் கன்றுகள் பயன் பெறும். இதற்காக ரூ.67.57 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.



**பன்றி வளர்ப்புத் திட்டம்**

பன்றி வளர்ப்புத் திட்டம் மதுரை மாவட்டத்தில் செயல்படுகிறது. இந்தத் திட்டத்தில் ரூபாய் 6,000 செலவில் பன்றிப் பண்ணை அமைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இதுவரை 300 பன்றிப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 25 பன்றிப் பண்ணைகள் மதுரை மாவட்டத்தில் அமைக்கப்படும்.

**கோழி வளர்ப்புத் திட்டம்**

கோழி வளர்ப்புத் திட்டம், கோழி வளர்ப்பு வளர்ச்சிக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 3,098 முட்டைக் கோழிப் பண்ணைகளும், 855 இறைச்சிக் கோழிப் பண்ணைகளும் அமைக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டு 650 கோழிப் பண்ணைகள் அமைக்கப்பட உள்ளன. இதற்காக ரூ.25.90 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**சிறப்பு மத்திய உதவித் திட்டம்**

தமிழ் நாட்டில் உள்ள இந்து ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த ஏழை விவசாயிகளின் பொருளாதாரத்தை

மேம்படுத்த மத்திய அரசு நிதி உதவியுடன் செயல்படுத்துப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தினால் பயன் பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. முக்கியமாக ஆதி திராவிடப் பெண்களுக்காக வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கக்கூடிய திட்டம் இது. இந்த ஆண்டு 6,250 விவசாயக் குடும்பங்கள் இந்தத் திட்டத்தினால் பயன் பெறுவர். இந்தத் திட்டத்திற்காக 2.7 கோடி ரூபாய் மானியமாக வழங்கப்படும்.



**பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டம்**

தமிழ் நாட்டில் வட ஆர்க்காடு, தர்மபுரி, தென் ஆர்க்காடு, சேலம், திருச்சி மாவட்டங்களில் உள்ள 9 மலைப் பகுதிகளில் வாழும் ஏழை விவசாயிகளின் நலனைக் கருதி, கால்நடைப் பராமரிப்புத் துறை கால்நடை வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. கறவைப் பசுக்கள் பராமரிப்பு, ஆடு வளர்ப்பு, கலப்பினக் கன்றுகள் வளர்ப்பு, உழவு மாடுகள் வளர்த்தல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், இந்தப் பகுதிகளில் உள்ள ஏழை விவசாயிகளுக்கு உபரி வருமானம் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினால் பயன்பெறும் விவசாயிகளுக்குத் திட்டச் செலவில் 50 சதவிகிதம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால், இந்தத் திட்டம் செயல்படும் தென் ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் மலையில் பயன் பெறும் விவசாயிகளுக்கு 75 சதவிதிதம் மானியமாக வழங்கப்படுகிறது. இந்த ஆண்டு இந்தத் திட்டத்தின் மூலம் 435 விவசாயக் குடும்பத்தினர் பயன்பெறுவர்.

இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுவதற்கு 27.21 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்படும்.

இதைத் தவிர, கால்நடைப் பராமரிப்புத் துறை மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தை நீலகிரி மாவட்டத்தில் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தில் ஊட்டி மாவட்ட கால்நடைப் பண்ணையில் உறைவிந்து நிலையம் ஏற்படுத்தி, நீலகிரி மாவட்டத்திலுள்ள பசுக்களின் இனவிருத்திக்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீலகிரி மாவட்டத்தில் எல்லாக் கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கிளை நிலையங்களுக்கு உறைவிந்து மூலம் செயற்கை முறை கருவூட்டல் பணியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலும், கால்நடைப் பராமரிப்புத் துறை வறட்சிக்கு இலக்காகும் பகுதித் திட்டம், மேற்குத் தொடர்ச்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற திட்டங்களின் மூலம் பசுந்தீவன உற்பத்திக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

இவ்விதம் தரம் உயர்த்தப்பட்ட பசுக்கள், எருமைகள், ஆடுகள் மற்றும் கோழிகளை வளர்ப்பதால் அதிக அளவில் பால், இறைச்சி, முட்டை ஆகியவற்றை உற்பத்தி செய்து, தமிழ் நாட்டிலுள்ள விவசாயிகள் நல்ல முறையில் பயன் பெற்று அதன் மூலம் அதிக வருமானம் பெற்று, அவர்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளுவதால் கிராமப்புறப் பொருளாதாரமும் வெகுவாக முன்னேற்றம் அடைந்துள்ளது. இவ்விதம் கிராமப்புறச் சமுதாயத்தை மேலும் முன்னேற்றம் அடையச் செய்யக் கால்நடைப் பராமரிப்புத் துறை செயல்படக் காத்திருக்கிறது.



## தமிழகத்தில் காற்றாலை மூலம் 200 மெகாவாட் மின்சாரம்

எட்டாவது திட்ட காலத்தில், தமிழகத்தில் காற்றாலை மூலம் 200 மெகாவாட் விசை உற்பத்தி செய்ய தமிழ்நாடு விசை மேம்பாட்டு நிறுவனம் திட்டங்கள் வகுத்துள்ளது. இந்த 200 மெகாவாட் திட்டத்தில், 100 மெ.வா. விசை தனியார் துறையில் உற்பத்தி செய்யப்படும்.

50 கிலோவாட் உற்பத்தித் திறன் கொண்ட காற்றாலை அமைப்புகளைத் தமிழகத்தில் நிறுவ, பல்வேறு இடங்களிலிருந்து தமிழ்நாடு விசை மேம்பாட்டு நிறுவனத்துக்கு விண்ணப்பங்கள் வந்துள்ளன. காற்றாலை மின்சாரத்துக்கு, உற்பத்தி வரியிலிருந்து விலக்களிக்கப் படுகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் கயத்தாறு பகுதியில் காற்றாலை மூலம் 500 கிலோவாட் விசை உற்பத்தி செய்யும் அமைப்புகளை நிறுவத் திட்டமிட்டுள்ளது. மத்திய அரசின் அனுமதி கிடைத்ததும் இந்த அமைப்புகள் நிறுவப்படும். இந்தப் பகுதியில் 100 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் மட்டும் 600 மெ.வாட் விசை உற்பத்திக்கு வாய்ப்பு உள்ளதாகக் கண்டறியப் பட்டுள்ளது.

# உயிர்க்கொல்லி நோயை ஒழிப்போம்

பேராசிரியர் டாக்டர் எம்.ஏ. முத்து சேதுபதி
சிறுநீரக நோயியல் துறைத் தலைவர்
சென்னை மருத்துவக் கல்லூரி



தமிழக மக்கள் ஆவலுடன் எதிர் நோக்கும் பருவமழைக்காலம் மருத்துவ உலகில் ஒரு சிறு பரபரப்பை ஏற்படுத்துவதை அனைவரும் அறிந்திருக்க நியாயமில்லை. தண்ணீர்த் தட்டுப்பாட்டிலிருந்து விடுதலை பெற இந்தப் பருவ மழையை மட்டுமே நம்பியிருக்கும்போது அதே நேரத்தில் தூய்மைக் கேட்டால் விளையக்கூடிய பேராபத்தையும் சந்திக்க வேண்டியுள்ளது!

சாதாரணமாகப் பருவநிலை மாறும் போது பாக்டீரியா, வைரஸ் போன்ற நுண்ணுயிர்களால் ஏற்படும் நோய்கள் போலன்றி, ஆண்டுதோறும் அக்டோபர் துவங்கி சனவரி முடிய தென்னகத்தில், 'லெப்டோஸ்பைரோஸிஸ்' எனும் உயிர்க்கொல்லி நோய் ஒருவிதமான நுண்கிருமிகளால், விலங்கினங்கள் மூலம் பரவுகின்றது. இந்நோய்ப் பற்றிய பல தகவல்களை, குறிப்பாக உயிரிழப்புக்குக் காரணமான சிறுநீரகச் செயலிழப்பினைப் பற்றி கடந்த ஆறு ஆண்டுகளாக, நானும், டாக்டர் சிவகுமார் போன்றோரும், மருத்துவர்களிடையே அவ்வப்போது அறிவித்து ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளோம்.

இந்நோய் பற்றிய முழு விவரமும் அனைவரும் அறிய வேண்டியதும் அவசியமாகும்.

'லெப்டோஸ்பைரோஸிஸ்' (Leptospirosis) எனும் இந்நோய் இதனை விளைவிக்கும் நுண்கிருமியின் பெயராலேயே அழைக்கப்படுகின்றது (Leprospira).

சிறிய நூல்போன்ற இருமுனைகளில் சிறிய கொக்கி போன்று வளைந்துள்ள இக்கிருமி 'ஸ்பைரோக்ட்' எனும் வகையைச் சார்ந்தவை சுமார் 6-20 மி.மீ நீளமும், 0.1 மி.மீ பருமனும் கொண்டவை. இவற்றில் சுமார் 19 இனங்கள் இதுவரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவற்றின்கீழ் கிட்டத்தட்ட 180 வகைகள் உலவுகின்றன. மானிடரைப்போல பிறப்பால் மட்டுமே ஆயிரம் சாதிகளாகப் பிரிந்திருப்பது போலன்றி, இவை அவற்றின் குண இயல்புகளில் மாறுபட்டுத் தோன்றுவதாலேயே இனம் பிரிக்கப்பட்டுள்ளன! இவற்றில் மனிதனுக்குக் கேடு விளைவிப்பவை லெப்டோஸ்பைரா இன்டராகன்ஸ்' (Leptospira Interrogans) எனும் இனமாகும். (பமோனா, கானிகோலா போன்ற மற்ற இனங்கள் விலங்கினங்களுக்குத் தீமை பயப்பவையாம்).

இக்கிருமிகள் விலங்கினங்கள் மூலமாகத்தான் மனிதரிடையே பரவக் காரணமாய் உள்ளன. வீட்டுவாழ் பிராணிகள், கால்நடை மற்றும் எலி, பெருச்சாளி அல்லது காட்டு விலங்குகள் இந்நோயால் பீடிக்கப்பட்டு அவை வெளியேற்றும் சிறுநீர் மூலமாகச் சுற்றுப்புறத்தை அடைகின்றது. அவ்வாறு வெளியேற்றப்படும் இக்கிருமிகள் நிலத்தின் தட்பவெட்பத்திற்கு ஏற்பவும் ஈரப்பதம் மற்றும் நீரோட்டத்தைப் பொறுத்தும் நீடித்து வாழும் வல்லமை பெற்றவை. ஈரமற்ற மணற்பரப்பில் சுமார் 6 மணிநேரம் வரையிலும் தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பில் 6 மாதங்கள் வரையிலுங்கூட உயிர் வாழும் தன்மையுடையவை. இம்மாதிரியான இடங்களில் மனிதன் நடந்து செல்லும் போது, கால்களிலுள்ள சிறு வெடிப்புகள் மூலமாகவோ அல்லது சிறிய காயங்கள் மூலமாகவோ இவை அவனது உடலுக்குட் புகுந்து விடுகின்றன. தேங்கி நிற்கும் நீர்ப்பரப்பு மற்றும் சுகாதாரக் குறைவான மழைக்காலத்தில் சுயரூபம் காட்டுவதால் வடிகால் அமைப்புகள் பருவமழையின் போதுதான் இக்கிருமிகளும் தம் பசி தீர்த்துக் கொள்கின்றன.

சாதாரணமாக நகர்ப்புறங்களில்தான் இந்நிலை அதிகமென்றாலும், கிராமப் பகுதிகளில் வயல்வெளிகள் மற்றும் புல்தரைகள் இவ்விலங்கின நடமாட்டத்தால் இக்கிருமிகள் வாழ வழி செய்கின்றன. ஆக, இந்நோய் வழிப்போக்கர் மட்டுமின்றி, விவசாயிகள், விலங்கினங்கள் காப்பிடங்களில் பணிபுரிவோர், கழிவு நீர்த், துப்புரவுப் பணியாட்கள், சுரங்க வேலை செய்வோர், ஏன் இராணுவத்தினரைக் கூட அதிக அளவில் தாக்கக் கூடிய அபாயம் படைத்தது. அமிலத் தன்மை இவற்றை அழிக்கும் சக்தி கொண்டது. இருப்பினும் சரிவர குளோரின் இடப்படாத குடிநீர்த் தேக்கங்களில் கூட இவை நீடித்து வளரும் வாய்ப்புண்டு. அப்படிப்பட்ட நீரை அருந்தும்போது இவை குடல் உறுப்புகள் மூலமாக இரத்த ஓட்டத்தில் கலந்து நோயை உண்டு பண்ணும் தன்மை பெற்றவை.


இக்கிருமிகள் இரத்த ஓட்டத்தில் கலந்து சுழலும்போது கடுமையான காய்ச்சல் மற்றும் தசைவலியை உண்டுபண்ணும். கண்களைச் சிவக்க வைத்து ஒருவித உறுத்தலையும் உண்டாக்கும். இரத்த ஓட்டத்தினால் கல்லீரலை அடைந்து அங்கு பன்மடங்காகப் பெருகி கல்லீரல் திசுக்களைச் சேதப்படுத்துகின்றன. அதனால் தான் இந்நோயின் அடுத்த கட்டமாகக் காய்ச்சலுக்குப் பின்னர் ஓரிரு தினங்களில் மஞ்சள் காமாலை (Jaundice) தென்படுகின்றது. இறுதியில் அனைத்துப் பாரத்தையும் சுமந்து வெளியேற்றும் சிறுநீரகமும் கூட இதற்கு மேல் என்னால் இயலாதெனச் செயலிழந்து விடுகின்றது.

ஆக, 6 அல்லது 7 தினங்களில் சிறுநீரகச் செயலிழப்பு ஏற்பட்டு தக்க தருணத்தில் சிகிச்சை பெறத் தவறும்போது, மனிதன் உயிரிழக்கக் காரணமாயுள்ளது. இதுதவிர மூளைத் திசுக்களையும் ஒருசில சமயங்களில் தாக்கிவிடக் கூடும். ஆக இந்நோய் ஆரம்ப நிலையில் சாதாரண 'ப்ளூ' காய்ச்சல் போல் தோன்றி பின்னர் கல்லீரல் பாதிப்பால் மஞ்சள் காமாலையுடன் கூடி, முற்றிய நிலையில் மூளையுறைத் திசுக்களையும் (Meninges) சிறுநீரகங்களையும் பாதித்து உயிர்குடிக்கும் தன்மையது.

இவ்வாறு பலவித உறுப்புகளைப் பாதிப்பதால் இவ்விதமான அறிகுறிகள் தென்பட்டதுமே மருத்துவர்கள் சந்தேகத்தின்பேரில் இந்நோய்க்குரிய சிகிச்சையளித்து வருகின்றனர். எனினும் இக்கிருமிகள்தான் இந்நோயை உண்டு பண்ணியவை என்று ஆதாரப் பூர்வமாக அறிவிக்கப் பலவிதப் பரிசோதனைகளை மேற்கொள்ளவேண்டியுள்ளது. நிருபணம் இல்லாத எதையும் மருத்துவ உலகு ஏற்பதற்கில்லை ஆகவே, பாதிக்கப்பட்ட நோயாளியின் இரத்தம், சிறுநீர் போன்றவை பரிசோதனைக்குட்படுத்தப்படுகின்றன. நோய் தாக்கிய ஆரம்ப கட்டத்தில் இரத்தத்திலும் ஓரிரு வாரங்கள் கழிந்த பின்னர் சிறுநீரிலும் இக்கிருமிகள் வளர்ந்து வாழ்வதைப் பரிசோதனைகள் மூலம் கண்டறியலாம். இரத்தத் தடவல்களை நுண்நோக்கி மூலம் ஒரு இருண்ட வெளிப்பரப்பில் வைத்துக் காணும்போது இவை சிறிய நூலிழைகள் போல முனைகளில் வளைந்து சிறு புழுக்கள் போல நெளிந்து செல்லும். இச்சோதனை மட்டுமே போதுமானதல்ல. சில சமயங்களில் இதில் தவறு நேர்ந்துவிட வாய்ப்புண்டு.

ஆகவே, இவை பரிசோதனைச் சாலையில் இக்கிருமிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்துள்ள கலங்களில் இடப்பட்டு கண்காணிக்கப்படுகின்றன. நோயாளியின் இரத்தம் இக்கிருமிகளைச் சுமந்திருப்பின் அவை இக்கலங்களில் நன்றாக வளர்ந்து பெருகிவிடும். பின்னர் அவற்றைக் குறிப்பிட்ட நாட்கள் கழித்து நுண்ணோக்கி மூலம் பார்வையிட இவை உறுதிப்படுத்தப்படுகின்றன. இதுதவிர, ஒரு சில மறைமுகப் பரிசோதனைகளும் இடைப்பட்ட காலத்தில் மேற்கொள்ளப்படுகின்றன. இக்கிருமிகள் வெளியிடும் 'தொடுப்பான்'கள் (Antigens) நோயாளியின் இரத்தத்தில் ஏற்ற 'எதிர்ப்பான்'களை (Antibodies) உண்டாக்கும்.

மனித உடலின் நோய் எதிர்ப்புத் திறனே இவ்விதமான எதிர்ப்பான்களை உருவாக்குவதில்தான் அடங்கியுள்ளது. இவ்விதம் உருவாகும் எதிர்ப்பான் வகைகளை வைத்தும் அவை எவ்விதமான



கிருமிகளை எதிர்க்க வல்லவை என அறியலாம். இவ்வாறெல்லாம் பரிசோதித்து ஆதாரம் நிருபிக்கப்பட்ட பின்னர்தான் இக்கிருமிகள் இந்நோய்க்குக் காரணமென ஒத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப அறிகுறிகள் தோன்ற ஆரம்பித்ததும் மருத்துவரை நாடிவிட்டால் இந்நோயை முற்றிலுமாகக் குணப்படுத்திவிடலாம். 'பெனிசிலின்' வகை மருந்துகள் இக்கிருமிகளையழிக்கும் வல்லமை பெற்றவை. இம்மருந்து 6 மணி நேரத்திற்கொருமுறை குறிப்பிட்ட அளவில் ஊசிமூலம் செலுத்தப்படுகின்றது. பாதிக்கப்பட்டவருக்கு வாந்தி முதலிய தொந்தரவுகள் இருந்து அதனால் உடலின் நீர்ச்சத்து குறைந்து போயிருந்தால் தேவையான உப்பு, சர்க்கரை கலந்த திரவப் பொருள் இரத்த நாளங்கள் மூலம் உட்செலுத்தப்படுகின்றன. கல்லீரல் பாதிப்பின் கடுமையினை இவ்வகையான சிகிச்சை முறையே சீர்செய்து விடுகின்றது.

நோயாளி ஒருசில சமயங்களில் சிறுநீரகச் செயலிழப்புடன் மருத்துவமனையை நாடும்போது, உயிர்காக்கும் சிகிச்சையாக 'டயாலிஸிஸ்' மேற்கொள்ளப்படுகின்றது. சரியான நேரத்தில் இந்த 'டயாலிஸிஸ்' முறை மூலம் உயிர் பிழைத்த நோயாளிகள் பலர். ஆக இவையனைத்தையும் மீறி காலம் கடந்து சிகிச்சையை நாடும் போதுதான் உயிரிழக்க வேண்டிய நிலமை ஏற்படும்.

இந்நோய் பற்றிய ஒரு தனியம்சமே - இது விலங்கினங்களைப் பொதுவாகத் தாக்கும் நோய்; அப்படிப் பாதிக்கப்பட்டவைதான், சுகாதாரக் குறை காரணமாக மனிதனைத் தாக்கக் காரணமாயுள்ளது. ஆக, இந்நோய் மிக எளிதில் தடுக்கக் கூடியது என்பதேயாகும். நல்வாழ்வை விரும்பும் எந்த ஒரு நாகரிகமடைந்த சமுதாயமும் இந்நோயை எளிதில் தடுத்துவிடலாம். இதில் பொதுமக்கள், மருத்துவர்கள், (மனித மற்றும் கால்நடை) நுண்ணுயிர்த் துறையினர், சுகாதாரத் துறை மற்றும் நகர் மன்ற அதிகாரிகள் ஆகிய அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் இந்நோயால் மனிதனுக்கும் கால்நடைகளுக்கும் ஏற்படக் கூடிய பேரிழப்பைத் தவிர்த்துக் கொள்ளலாம். அது எவ்வாறென இனி பார்ப்போம்.

முதல் கட்டமாக, வீட்டுவாழ் பிராணிகளான, நாய், பூனை, மாடு, ஆடு போன்ற கால்நடைகள், பண்ணை வளர்ப்புப் பன்றிகள், எலி, பெருச்சாளி போன்றவையும், காட்டு விலங்குகளான ஓநாய், நரி, முள்ளம்பன்றி, கீரி போன்றவையும் இந்நோயால் பாதிக்கப்பட்டு இக்கிருமிகளைச் சுமந்து திரிகின்றன. அவற்றின் சிறுநீர் மூலம் வெளியேறும் கிருமிகள் தான் பின்னர் மனிதனைத் தொற்றிக் கொள்கின்றன. எனவே, இவற்றோடு தொடர்புடைய மருத்துவர்கள் நோய் கண்டதை அறிந்ததும் உறுதிப்படுத்தத் தேவையான இரத்தம் மற்றும் சிறுநீர் இவற்றை மையப் பரிசோதனைச் சாலைக்கு அனுப்பிவைத்து, ஆய்வுக்கூட முடிவுகளின்படி தக்க சிகிச்சை தரவேண்டும். அதே சமயம் இந்தத் தகவல்களை அருகிலுள்ள சுகாதாரத்துறை மையங்களுக்குச் சொல்லியனுப்புவதால் சம்பந்தப்பட்ட துறையினர் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று தேவையான சுகாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள இயலும். இவ்வாறாக அறிவிக்கப்பட்ட பகுதிகளை நகராட்சி மன்ற அதிகாரிகளின் உடனடிப் மேற்பார்வையில் சீர்திருத்தி அமைக்கப்பட வேண்டும். இம்மாதிரியான கூட்டமைப்பில் சமுதாயத்தின் நல்வாழ்வு மேம்பாடு அடையும்.

**தடுப்பு முறைகள்**

1. தகுந்த காலணியின்றி, மழைக் காலங்களில் தேங்கி நிற்கும் தண்ணீரில் நடந்து செல்வதைக் கைவிட வேண்டும்.

2. தகுந்த வடிகால் வசதியின்றிக் குடியிருப்புப் பகுதிகள் அமைக்கப்படுவதைத் தடுக்க வேண்டும்.

3. மழைக்காலத்தில் நீர்த்தேக்கங்கள் மற்றும் குடிநீர்த் தொட்டிகளில் ஏற்ற முறையில் குளோரின் அமிலம் இடப்பட வேண்டும்.

4. குடிநீர்க் குழாய்கள் நல்ல முறையில பராமரிக்கப்பட வேண்டும். எக்காரணத்தைக் கொண்டும் கழிவு நீர்க் குழாய்களுடன் கசிவு மூலம் குடிநீர் கலப்பது தடுக்கப்பட வேண்டும்.

5. விலங்கினக் காப்பகங்கள் நல்ல முறையில் பராமரிக்கப்பட வேண்டும். இறைச்சி விற்பனைக் கூடங்களின் சுகாதாரப் பின்னணிக் கண்காணிக்கப்பட வேண்டும்.

6. வீட்டின் சுற்றுப்புறம் எலிகள், பெருச்சாளி மற்றும் நோய்வாய்ப்பட்ட நாய்கள், பூனைகளால் சூழப்படுவதை ஒழிக்க வேண்டும்.

7. தாம் செய்யும் தொழிலின் தன்மையால் இந்நோய் தாக்கப்படும் அபாயத்திலிருப்பவர்களுக்குத் தகுந்த சுகாதார முறைகள் மூலம் காப்பளிக்கப்பட வேண்டும்.

8. நோய்க்கிருமிகள் வாசம் நிருபிக்கப்பட்ட பகுதிகள் பொதுமக்கள் உபயோகத்திலிருந்து நீக்கப்பட வேண்டும்.



# சென்னையில் சாலைகளைச் சீரமைக்க அரசு துரித நடவடிக்கை

கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் சென்னையில் பெய்த கடும் மழையின் காரணமாக, சென்னை மாநகரிலுள்ள பெருவாரியான சாலைகள் சேதமடைந்தன. இவற்றில் சில சீரமைக்கப்பட்டுள்ளன. செப்பனிடப்படாத சாலைகளை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென மேதகு ஆளுநர் திரு.பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மேதகு ஆளுநர் அவர்கள், சென்னை மாநகராட்சி அலுவலகத்திற்கு வருகை தந்து, உயர் அலுவலர்களுடன் மாநகராட்சிப் பணி குறித்து ஆலோசனை நடத்தினார்.

இந்தக் கூட்டத்தின்போது, சென்னையில் பழுதடைந்த சாலைகள் மற்றும் குழந்தைகள் சத்துணவுக் கூடங்களை உடனடியாகச் சீரமைக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் கேட்டுக் கொண்டார். அதன்படி சென்னையிலுள்ள சாலைகளைச் சீரமைக்க ரூ.13.5 கோடி செலவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அமல்படுத்தப்படவுள்ளது. இதில் முதல் தவணையாக ரூ.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் 240 பெரிய சாலைகளும், 1,184 குறுகலான தெருக்களும், 821 சிறிய தெருக்களும் செப்பனிடப்படும். இதுவரை சாலைகளைச் சீரமைக்க ரூ.3.5 கோடி செலவிடப்பட்டுள்ளது.

சென்னையிலுள்ள 365 மாநகராட்சிப் பள்ளிகளிலுள்ள குழந்தைகள் சத்துணவுக் கூடங்கள் அனைத்தையும் புதுப்பிக்க ரூ.15 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் சத்துணவு கூடங்கள் அனைத்தும் வரும் தமிழ்ப்புத்தாண்டு நாளுக்குள் புதுப்பிக்கப்பட்டு விடும். இந்தச் சத்துணவுக் கூடங்களுக்கு வெள்ளை அடிப்பது, தூய்மைப்படுத்துவது போன்ற பணிகளுக்குச் சாரண மாணவர், மாணவியர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் ஆளுநர் அவர்கள் ஆலோசனை கூறினார்.

சென்னையிலுள்ள அனைத்துச் சாலைகள், தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்ளவும், பொதுக் கழிப்பிடங்களை நல்ல முறையில் பராமரிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்களின் குறைகளை இயன்றவரை நிறைவேற்ற, சென்னை மாநகராட்சி, தனிமுயற்சி எடுத்துள்ளது. சென்ற ஆண்டு பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்தம் 1,607 மனுக்களில், 1,487 கோரிக்கைகள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன.



## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை
## தஞ்சாவூர்

### 1990-91-ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களின் விவரங்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்: | | |
| | 1. பயன் பெறுபவர்கள் எண்ணிக்கை | ... | 26,000 |
| | 2. அளிக்கப்படும் மானியம் | ... | ரூ.444.389 இலட்சம் |
| 2. | கிராமப்புற இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தில் பயிற்சி பெறுபவர்களின் எண்ணிக்கை | ... | 1,190 |
| 3. | ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டம்: | | |
| | மொத்த நிதி ஒதுக்கீடு | ... | ரூ.2,013.770 இலட்சம் |
| | அ) ஆதிதிராவிடர்களுக்கான தொகுப்பு வீடுகள் | ... | 5,900 |
| | ஆ) ஜீவன்தாரா பாசனக்கிணறுகள் | ... | 100 |
| | இ) பள்ளிக் கட்டடங்கள் | ... | 58 |
| | ஈ) ஊராட்சி மன்றக் கட்டடங்கள் | ... | 210 |
| | உ) தார்ச் சாலைகள் போடுதல் | ... | 70-(136 கி.மீ.) |
| | ஊ) கருங்கல் ஜல்லி சாலைகள் போடுதல் | ... | 159-(212 கி.மீ.) |
| | எ) 25% ஊராட்சி பங்கு வேலைகள் | ... | 2,732 |
| | ஏ) 20% மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூடுதல் ஒதுக்கீடு வேலைகள் | ... | 43 |
| | கூடுதல் | ... | 9,272 (348 கி.மீ.) |
| 4. | சமூகக் காடு வளர்ப்புத் திட்டம் | ... | 1,431 எக்டேர் |
| 5. | மீனவர்களுக்கான இலவசக் குடியிருப்பு வீடுகள் | ... | 1,251 |
| 6. | கிராமப்புற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான வளர்ச்சித் திட்டம்: | | |
| | 1) அமைக்கப்பட்ட குழுக்கள் | ... | 100 |
| | 2) தெரிந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் | ... | 2,000 |


ஆர்.வேலு, இ.ஆ.ப.
திட்ட அலுவலர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை,
தஞ்சாவூர்.

விவேக் ஹரிநாராயண்,இ.ஆ.ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
பெருந்தலைவர், மாவட்ட ஊரக வளர்ச்சி
முகமை, தஞ்சாவூர்.



# தமிழகத்துக்கு வாங்க!

## கவியரசர் இளந்தேவன்



தமிழகத்துக்கு வாங்க! - எங்கள்
தாயகத்துக்கு வாங்க!
அமைதிப்பூங்கா அழகு! - இதன்
அன்பில் மகிழும் உலகு!

ஆடற்கலையின் சிறப்பை - கலை
அதிசயங்களின் பிறப்பை
பாடற்கலையின் பரப்பை - இங்கு
பார்க்கலாங்க வாங்க!

தஞ்சை, வேளாங் கண்ணி, - தமிழ்
மதுரை, நாகூர், பழநி
கொஞ்சும் தெற்குக் குமரி - இங்கு
கோயில் பார்க்க வாங்க!

பிச்சாவரம் காடு - அதைப்
பிளக்கும் நீரின் ஊடு
உற்சாகமாய்ப் படகு - அதில்
ஓட்டலாங்க வாங்க!

சிதம்பரமெனும் தில்லை - கலைச்
சிறப்புடையது மல்லை!
விதவித வகைப் பறவை - வரும்
வேடந்தாங்கல் வாங்க!

நீலக்கம்பளம் போர்த்தான் - உடல்
நிறைய வாசம் சேர்த்தான்!
வாலைக்குமரி உதகை - அவள்
வனப்பைப் பார்க்க வாங்க!

வெள்ளைநிலவை உருக்கி - நீர்
வீழ்ச்சி மழையைப் பெருக்கி
கொள்ளையினமை கொழிக்கும் - திருக்
குற்றாலத்துக்கு வாங்க!

முதுமலைப்பெரு வனமே - அதில்
முழங்கும்யானை தினமே!
புதுமைக்கோடைக் கானல் - அந்தப்
பொழிலைப்பார்க்க வாங்க!

சீரகச்சம்பாச் சோறு - உடன்
சிறந்த மீனகின் சாறு
ஊருக்குஊரு 'மோட்டல்' - நல்ல
உபசரிப்புக்கு வாங்க!

முறுகமுறுகத் தோசை - அதில்
முழுஉலகுக்கும் ஆசை!
வருக வருக பயணி - உங்க
வாய்க்கு உண்டு இளநீர்!



## சிறுசேமிப்புத் துறை




எதாபாரா இனனலகள ஏறபடுமுன சேமியுஙகள. வரி செலுத்துவதைத் திட்டமிட்டு, இன்ஷுரன்ஸ் பாதுகாப்பும் பெறுங்கள். இன்றே கீழ்க்கண்ட சிறுசேமிப்புத் திட்டத்தில் ரூ.1,000/-ம் அதற்குமேலும் முதலீடு செய்து தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசியைப் பெறுங்கள்.

**கீழ்க்கண்ட திட்டங்களின்கீழ் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாதுகாப்பு கிடைக்கும்:**

- கிசான் விகாஸ் பத்திரம்
- தேசிய சேமிப்புத் திட்டம்
- அஞ்சலக மாதாந்திர வருமானத்திட்டம்
- அரசுப்பணியாளர்களுக்கான டெபாசிட் திட்டம் 1989
- தேசிய சேமிப்புப்பத்திரம் 8வது வெளியீடு
- 15 வருட பொது சேமநலநிதி
- அஞ்சலக குறித்தகால டெபாசிட்

**வருமான வரி விலக்குப் பெற தேசிய சேமிப்பில் முதலீடு செய்வீர்**

| வசதிகள் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு | பொதுசேம நலநிதி | தேசிய சேமிப்பு திட்டம் |
|---|---|---|---|
| வட்டி | 12% | 12% | 11% |
| முதலீட்டுக்கு வருமான வரிவிலக்கு | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.50,000 பிரிவு 88-ன்கீழ் | ரூ.40,000 பிரிவு 80CCA-ன் கீழ் |
| வட்டிக்கு வருமான வரிவிலக்கு | வருமான வரிச் சட்டம் பிரிவு 88-ன்கீழ் | வருமான வரியில் இருந்து வட்டிக்கு முழுவிலக்கு | வட்டி தொகை சேரும்போது வருமான வரி விலக்கு |
| செல்வ வரி | ரூ.5,00,000 வரை விலக்கு | முழுவிலக்கு | முழுவிலக்கு |
| டெபாசிட்டுகளுக்கான வரம்பு | வரம்பு கிடையாது | ரூ.60,000 | ரூ.40,000 |

**தமிழக அரசின் சிறப்பு சலுகைகள்:**

- ஒவ்வொரு ரூ.500/- முதலீட்டிற்கும் ஒரு இலவச பரிசு கூப்பன் மூலம் 262 பரிசுகளில் ஒன்றைப் பெறும் வாய்ப்பு.
- தமிழ்நாட்டில் குறிப்பிட்ட சில திட்டத்தில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ.1,000/-முதலீட்டிற்கும் 1% வரை ஊக்கத்தொகை.
- 1.1.91 முதல் 31.3.91 வரை தமிழ்நாட்டில் குறிப்பிட்ட திட்டங்களில் முதலீடு செய்யும் ஒவ்வொரு ரூ. 1000/- முதலீட்டிற்கும் தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் வசதி. பிரீமியத்தை தமிழக அரசே செலுத்துகிறது.

**இலவச தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம் — அதிகபட்ச நஷ்ட ஈடு ரூ. 50,000/-**




கூடுதல் சலுகைகள்:
- இந்திய அரசின் முழுப்பாதுகாப்பு
- சொத்து வரிவிலக்கு
- உங்கள் குழந்தைகள் பெயரில் முதலீடு செய்து வருமான வரிவிலக்கு பெறுங்கள்.

யுனைடெட் இந்தியா இன்ஷுரன்ஸ் நிறுவனம், சென்னை
தனிநபர் விபத்து இன்ஷுரன்ஸ் பாலிசி கிடைக்குமிடம்:
அனைத்து மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் மற்று

இயக்குநர்
சிறுசேமிப்புத்துறை
143, அண்ணாசாலை, சென்னை-600 002.
தொலைபேசி: 840223/846209.


# தெலுங்கு கங்கைத் திட்டப் பணிகள்



சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்க கிருஷ்ணா நதியிலிருந்து 15 டி.எம்.சி. நீர் கொண்டுவரும் பொருட்டு தெலுங்கு-கங்கைத் திட்டம் நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு, ஆந்திர மாநிலங்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்காகும் தமிழ்நாட்டின் பங்கிற்கெனத் தமிழக அரசு இதுவரை 107 கோடி ரூபாய் அளித்துள்ளது.

இத்திட்டம் மீண்டும் புத்துயிர் அளிக்கப்பட்டு நல்ல முன்னேற்றத்தில் உள்ளது. தமிழ்நாடு, ஆந்திர மாநில அலுவலர்களிடையே 2.2.1991 அன்று சென்னையில் நடைபெற்ற 26-வது தொடர்புக் குழு கூட்டத்தில் இத்திட்ட முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

1993-ஆம் ஆண்டிற்குள் ஓரளவுக்குச் சென்னைக்குக் குடிநீர் வழங்கிப் பயன் அடையும் பொருட்டும் இத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாகப் பணிகளை விரைவில் செயலாக்கும் பொருட்டும் இரு மாநிலங்களும் நட்புறவு நோக்கத்தோடு ஒரு விரிவான பணித் திட்டம் தயாரிக்க வேண்டுமென அக்கூட்டத்தில் ஒத்துக்கொள்ளப்பட்டது.

தெலுங்கு-கங்கைத் திட்டத்திற்காக ஆந்திர மாநிலம் மேற்கொள்ளப்படவிருக்கும் செலவினத்தில் தமிழ்நாட்டின் பங்காக ஆந்திரப்பிரதேச அரசிற்கு ரூ.30 கோடி இரு தவணைகளில் செலுத்துவதெனத் தமிழ்நாடு அரசு ஒத்துக்கொண்டுள்ளது. 28.2.91-க்கு முன்னர் ரூ.15 கோடியை முதல் தவணையாகவும், வேலைகளில் ஏற்படும் முன்னேற்றத்தின் அடிப்படையில் எஞ்சிய ரூ.15 கோடியை இரண்டாம் தவணையாக 1991-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அளிப்பதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. அதன்படி 1993-ஆம் ஆண்டில் சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதில் ஓரளவு பயன் அளிக்கும் வகையில் இத்திட்டப் பணிகளை விரைவுபடுத்தி முடிக்க ஏதுவாக இருக்கும் பொருட்டு ரூபாய் 15 கோடி ஆந்திர மாநிலத்திற்குத் தமிழ்நாடு அரசு தற்பொழுது அளித்துள்ளது.

1988-89-ஆம் ஆண்டு விலைப்பட்டியலின் அடிப்படையில், தமிழ்நாடு அரசின் பங்காகிய ரூபாய் 252.05 கோடியில் தற்சமயம் தமிழ்நாடு அரசு அளித்துள்ள ரூபாய் 15 கோடி உள்ளிட்டு ஆந்திர மாநில அரசுக்குக் கொடுக்கப்பட்ட ஒட்டு மொத்தத் தொகை ரூபாய் 122 கோடியாகும்.

# தொழுநோய் ஒழிப்பில் ஒரு தொண்டு நிறுவனம்



அண்ணல் காந்தியடிகளின் ஆரம்பகாலப் பணிகளில் ஒன்று, பிச்சைக்காரர் ஒருவரைத் தனது இல்லத்திற்கு அழைத்துக் கொண்டு சென்றதாகும். அவர் ஒரு தொழுநோயாளி. தொழுநோய் பற்றிய காந்தியடிகளின் மனப்போக்கு அவரது வாழ்க்கையில் பல கட்டங்களிலும் பிரதிபலித்தது. அவர் சென்ற இடமெல்லாம் தொழுநோயாளிகளையும் சாதாரண மக்களைப் போலவே சேர்த்துக் கொண்டார்.

தொழுநோயால் தாக்கப்பட்டவர்களைச் சமூகம் தீண்டாதவர்களாகக் கருதுவதை அவர் தவறு என உறுதிபட எண்ணினார். தொழுநோய்ப் பணிக்குத் தம்மை முழுவதும் அர்ப்பணித்துக் கொண்டதாலேயே, காந்தியடிகளின் நினைவு நாளான ஜனவரி 30-ஆம் நாளை, தொழுநோய் எதிர்ப்பு நாளாக நாடு முழுவதும் கொண்டாடுகிறோம். இந்தியத் தொழுநோய்ச்சங்கம், அண்மையில் ஒருவார காலத்திற்குத் தொழுநோய் ஒழிப்பு வாரமாக அனுசரித்தது நினைவிருக்கலாம்.

## தொழுநோயும் இந்தியாவும்

உலகிலேயே, இந்தியாவில்தான் அதிகமான எண்ணிக்கையில் தொழுநோயாளிகள் உள்ளனர். சமீபத்திய புள்ளிவிவரப்படி உலகில் 1 கோடியே இருபது இலட்சம் தொழுநோயாளிகள் இருப்பதாகவும், அதில் நமது இந்திய நாட்டில் மட்டும் மூன்றில் ஒரு பங்கு (சுமார் 40 இலட்சம்) தொழுநோயாளிகள் இருப்பதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. இதில் தமிழ் நாட்டில் மட்டும் 7.6 இலட்சம் தொழுநோயாளிகள் உள்ளனர்.

தொழுநோய் முற்றினால் உண்டாகும் உடல் ஊனமும், சமூகத்தினரிடையே அனுதாபத்திற்குப் பதிலாக வெறுப்பையும், நிராகரிப்பையும் தோற்றுவிப்பதால் - தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பலவிதமான அவதிக்குள்ளாகிறார்கள்.

## தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டம்

தொழுநோய் ஒழிப்பில் அரசு மருத்துவமனைகளும், சில தொண்டு நிறுவனங்களும் ஈடுபட்டுள்ளன. மத்திய அரசு 1955-56-ஆம் ஆண்டிலிருந்தே தொழுநோய்க் கட்டுப்பாட்டுத் திட்டத்தை அமல்படுத்தி வருகிறது.

சென்னை செனாய் நகரில், ஒரு தொண்டு நிறுவனம் தொழுநோய் ஒழிப்பில் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. 'கிரிமால்ட்டஸ்' என்றழைக்கப்படும் இந்தத் தொழுநோய் ஆலோசனை மருத்துவமனையை நேரில் சென்று பார்வையிடுகிறோம். அதன் உதவி இயக்குநர் டாக்டர் தேவஅன்பு அவர்களைச் சந்திக்கிறோம். அவர் கூறினார்-

கிரிமால்ட்டஸ்' (GREMALTES) என்பது, "Greater Madras Leprosy Treatment and Education Scheme" என்பதன் சுருக்கம் ஆகும்.

கிரிமால்ட்டஸ் தொழுநோய் மையம் 1971-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முழு பராமரிப்புச் செலவுகளுக்காக நிதி உதவி, ஜெர்மனி தொழுநோய் நிவாரணச் சங்கத்திடமிருந்து பெறப்படுகிறது. இதன் காரணமாக இந்தத் தொழுநோய் மையம் 'ஜெர்மன் மருத்துவமனை' என்று பெரும்பாலான மக்களால் அழைக்கப்படுகிறது.

இந்தத் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இன்றுவரை சுமார் இருபதாயிரம் தொழுநோயாளிகளுக்குச் சிகிச்சை அளித்துக் குணப்படுத்தியிருக்கிறது. "கிரிமால்ட்டஸ் தொழுநோய் மருத்துவமனை" இந்தியத் தொழுநோய் அறக்கட்டளையின் ஓர் அங்கமாக இருந்து செயல்படுகிறது. சென்னை, அதன் சுற்றுவட்டாரங்களில் தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து, அவர்களுக்குச் சிகிச்சை அளித்து, மறுவாழ்வு கொடுப்பதே இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

75 படுக்கைகள் வசதி கொண்ட இந்தத் தொழுநோய் மருத்துவமனையில் 8 மருத்துவர்களும், 120 இதர பணியாளர்களும் பணியாற்றுகிறார்கள். மருத்துவம், சுகாதாரக் கல்வி, அறுவைச் சிகிச்சை, கண் மருத்துவம், ஆய்வுக் கூடம் போன்ற பலதரப்பட்ட துறைகள் தனித்தனியாக இங்கு இயங்குகின்றன. இவை தவிர, காலணிகள் தயாரிக்கும் ஒரு தொழிற்கூடமும் இங்குச் செயல்படுகிறது. தொழுநோயாளிகளுக்குத் தேவையான காலணிகள் இங்குத் தயாரிக்கப்பட்டு இலவசமாக வழங்கப்படுகின்றன.

இங்கு அனுமதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளுக்கும் நல்ல சுகாதார முறையில் உணவு தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுகிறது. தொழுநோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு, அளிக்கப்படும் சிகிச்சை, மருந்துகள் யாவும் இலவசமாகவே கொடுக்கப்படுகின்றன. தேவைப்படும் நோயாளிகளுக்கு இலவசமாக அறுவைச் சிகிச்சையும் செய்யப்படுகிறது. மேலும் செயற்கை உறுப்புகளும், மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கப்படுகின்றன.



## தொழுநோயாளிகளுக்கு மறுவாழ்வு

சிரிமால்ட்டஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று முழுவதுமாகக் குணமடைந்த தொழுநோயாளிகளின் மறுவாழ்வுக்கும் இந்த மையம் ஏற்பாடு செய்கிறது. 'மறுவாழ்வு நிதி' ஒன்றை ஏற்படுத்தி, அதன் மூலம் தகுதிவாய்ந்த நபர்களுக்குத் தொழில் தொடங்க ரூபாய் மூவாயிரம் வரை நிதி உதவி செய்து அவர்களின் மறுவாழ்வுக்கு உதவுகிறது. ரூ.3,000-க்கு மேல் தேவைப்படும் நபர்களுக்கு வங்கிகள் மூலம் கடன் வழங்க இந்த மையம் ஏற்பாடு செய்கிறது.

## சருமநோய்ப் பிரிவு

தொழுநோய் மட்டுமன்றி இதர சரும நோய்களுக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் இங்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இந்தச் சரும நோய்ப் பிரிவு 1981-ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. அன்று முதல், நாள்தோறும் சுமார் நூறு புற நோயாளிகள் இந்த மருத்துவமனைக்குச் சிகிச்சை பெற வருகிறார்கள். தொழுநோய் அல்லாத இதர நோயாளிகளும் இங்கு அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை பெறுகிறார்கள். தொழுநோயாளிகளை மட்டும் தனியே பிரித்து வைக்கக் கூடாது என்பதற்காக, அனைத்து விதமான நோயாளிகளும் இங்கு அனுமதிக்கப்பட்டு, சிகிச்சை அளிக்கப்





• வாழ்க்கை-அவனவன் வாழ்வதற்கு என்று மட்டும் கருதக் கூடாது; மற்றவர்கள் நலனுக்கும் என்று கருத வேண்டும்.

—தந்தை பெரியார்



படுகிறது. இதுவும் இந்த மையத்தின் முக்கிய நோக்கமாகும்.

கிரிமால்ட்டஸ் மருத்துவம்னை







யில், மருத்துவச் சிகிச்சை தவிர, கீழ்க்கண்ட குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

1. அரசு மற்றும் மாநகராட்சி மருத்துவமனைகளில் பணிபுரியும் மருத்துவர்களுக்குத் தொழுநோய்ப் பற்றி பயிற்சி அளித்தல்.

2. 4-மாத காலத் தொழுநோய் ஆய்வாளர்கள் பயிற்சி.

3. 6-மாத காலச் சுகாதாரக் கல்விப் பயிற்சி.

4. காலணி தயாரிக்கும் 6-மாத பயிற்சி.

5. முட நீக்குப் பயிற்சி (Physiotheraphy)

இவை தவிர தொழுநோய் பற்றிய ஆய்வும் (Research) இங்கு நடைபெறுகிறது.

**தொழுநோய் மாதம்**

கிரிமால்ட்டஸ் தொழுநோய் மருத்துவமனை, இவ்வாண்டு ஜனவரி 30-ஆம் தேதி முதல் பிப்ரவரி மாதம் 28-ஆம் தேதி முடிய ஒருமாக் காலத்தைத் தொழுநோய் மாதமாக அனுசரித்தது.

தொழுநோய் பற்றி மக்களிடம் விழிப்புணர்ச்சி ஏற்படுத்த இந்த ஒரு மாத காலத்தில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. சென்னையில் உள்ள பள்ளிகளுக்கிடையே சுகாதாரம் பற்றிய வினாடி வினா போட்டி, சென்னைக் கல்லூரிகளுக்கிடையே பேச்சுப் போட்டி, சென்னையிலுள்ள மருத்துவக் கல்லூரிகளுக்கிடையே தொழுநோய்வினாடி வினா போட்டி, தொலைக்காட்சி, வானொலி மூலம் பிரச்சாரம் செய்தல், சென்னையிலுள்ள முக்கிய இடங்களில் தொழுநோய் பற்றிய சுவரொட்டிகள் ஒட்டி விளம்பரம் செய்தல் போன்றவை இந்த ஒருமாத காலத்தில் நடைபெற்ற முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

இவ்வாறு பல அரிய பணிகளில் ஈடுபட்டிருக்கும் கிரிமால்ட்டஸ் தொழுநோய் மையத்தின் பணிகள் பாராட்டத்தக்கவை.

- ஜே. சந்திரன்.





# மூட நம்பிக்கை

## வ.ரா



சுண்ணுக்குத் தெரியாமல் நீங்கள் எல்லோரும் உட்கார்ந்து கொண்டிருக்கிறீர்கள். அடியேனும் அப்படி. சௌக்கியந்தானே என்று கேட்டால், பதில் சொல்லப் போகிறீர்களா? பதில் சொன்னாலும், எனக்குக் கேட்கப்போகிறதா? நான் நமஸ்காரம் என்று வணங்கினால், உங்கள் ஆசீர்வாதம் எனக்கு எப்படித் தெரியும்? பழைய காலத்து அசரீரி வாக்கு இப்படித்தான் இருந்திருக்குமோ!

ஆகாசத்திலிருந்து பேசவாவது! அது ஆயிரம் பதினாயிரம் மைலுக்கு அப்பாலே கேட்கவாவது! கலியுகமோ, திரேதாயுகமோ - அது இன்னது என்று தெரியவில்லை.

ராத்திரி எட்டேகால் மணிக்கு உங்களுக்கெல்லாம் என்னென்ன வேலை இருக்குமோ! நான் உங்கள் கதவைத் தட்டி, உங்கள் காலத்தையும் க்ாதுகளையும் யாசகம் கேட்பது ரொம்பவும் மரியாதைக் குறைவான காரியந்தான். இந்த மரியாதைக் குறைவுக்கு நான் காரணம் இல்லை. நம்மையெல்லாம் மீறியே, சில காரியம் நடக்கிறது இயற்கைதானே?

''என்னடா! பொழுது விடிகிறது; பொழுது அஸ்தமித்து ராத்திரி வருகிறது. அதோடு தூக்கமும் கொட்டாவியும் கிறுகிறுப்பும் கலந்து வருகிறது. இந்த மாதிரியே காலம் போய்க் கொண்டிருந்தால்-''

இப்படி நினைத்துக் கொண்டு, உட்கார்ந்திருந்தேன். திடீரென்று, ''நமஸ்காரம்'' என்ற சத்தம் காதிலே பொத்தென்று குதித்தது. திரும்பிப் பார்த்தால், நண்பர்-

''வரணும்'' என்றேன். ''வந்த பிறகு, 'வரணும்' என்று சொல்லுகிறதிலே என்ன வாஞ்சை இருக்கிறது?'' என்று நண்பர் சொன்னார். ''போகணும் என்று ஒரு நாளும் சொல்ல மாட்டேன்'' என்றேன்.

''உங்கள் வீட்டுக்கு வந்தவனை, வரணும் என்று சம்பிரதாய மரியாதை நீங்கள் செய்வது உசத்தி இல்லை. உங்க வீட்டுக்கு நான் வந்து, உங்களை 'வரணும்' என்று அழைப்பது தான் உசத்தி'' என்று நண்பர் அழகாகப் பங்கடைத்துப் பேசிவிட்டார்.

''எங்கே வரணும்?''


''ஆகாசத்திலிருந்து பேசறத்துக்கு வரணும்'' என்று அவர் கிண்டலாகப் பேசினார்.

''அடே அப்பா! சாதாரணமாகத் தரையிலிருந்து உரக்கப் பேசினாலே. ஆகாயத்திலே பறக்கிறான் என்று லோகத்திலே மட்டுமரியாதை இல்லாமல் பேசறா. ஆகாசத்திலிருந்தே பேசிட்டா, அப்புறம் கேட்க வேண்டியதேயில்லை! சுவாமி! நான் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை... எல்லாத்தையும் யோசிக்க வேணுமோன்னோ!'' என்று சொன்னேன்.

''நீங்கள் சொல்லுகிற மாதிரி தான், எல்லோரும் ஒரு தாய்க்கு ஒரு பிள்ளை. இரண்டு தாய்க்கு ஒரு பிள்ளை யாருமே இல்லை!'' என்று சிரித்தார் நண்பர்.

நான் தொண்டையிலே எச்சிலை விழுங்கினேன். கனைத்துக் கொண்டேன். வேறே என்ன செய்கிறது?

''பேசறது என்கிறது ஒரு பெரிய வித்தை. அந்த வித்தை எல்லோருக்கும் லேசா வராது. மேலும் பேசறதற்கு விஷயம் இருக்க வேண்டாமா? சாமான் சட்டியிலே இருந்தால் தானே அகப்பையிலே வரும்?'' என்று சொன்னேன்.



• சீதனம் என்பது பெண்களை விலைபேசி விற்பதைத் தவிர வேறொன்றுமில்லை. வரதட்சணை கொடுத்தால்தான் திருமணம் செய்து கொள்ள முடியும் என்று நிபந்தனை விதிக்கும் எந்த இளைஞனும், தான் படித்த படிப்புக்கும், தன்னுடைய தேசத்திற்கும் அவமதிப்பைத் தேடிக் கொடுத்தவனாகிறான்!

—காந்தியடிகள்

''நீங்கள் சபைக் கோழைப் பேர்வழி என்று எனக்குத் தெரியாது'' என்று நண்பர் சொல்கிற பொழுதே, என் சம்சாரம் படக்கென்று சிரித்துவிட்டாள். சம்சாரம் சிரித்த பிறகு, என்ன நேர்ந்தாலும், ஆகாசத்திலிருந்து பேசிவிடுகிறது என்று கண்டிப்பாகத் தீர்மானம் செய்துகொண்டு, சம்சாரம் இருக்கிற பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

''ஏன் ஸார்! நான் பேசறபோது ஒத்தரும் கலாட்டா பண்ண மாட்டார்களே?'' என்றேன்.

''ரேடியோ உங்களுக்குத் தெரியாதா!'' என்றார். இது என் சம்சாரத்தின் காதிலே விழுந்தால், என் கீர்த்தியிலே இடி விழுந்தது போல ஆகாதா? ஏதோ, அவள் சிரித்தது மாதிரி இருந்தது. ஆனால், திரும்பிப் பார்க்க எனக்குத் துணிச்சல் கிடையாது.

''சரி, பேசுகிறேன்'' என்று நண்பரிடம் ஒப்புக் கொண்டேன். ஆனால் ஒன்று மாத்திரம் அவரைக் கேட்டுக் கொண்டேன்.

''சுவாமி! நான் கூட்டத்திலே கோழை; ஆனால் தனியாக இருந்தாலும் அதைவிடக் கோழை. பக்கத்திலே நீங்கள் இருக்கணும்; சங்கீதக் கச்சேரிகளிலே சம்பிரதாய சபாஷ் போடுவதைப் போல ரேடியோ கேட்கிறவர்களுக்குக் கேட்காமல், எனக்கு மாத்திரம் தெரியும்படியாக, நடுநடுவிலே, கொஞ்சம் சபாஷ் போட்டால் நல்லது'' என்று அவரை வேண்டிக் கொண்டேன்.

''அப்படியே ஆகக்கடவதாக!'' என்று வரம் கொடுக்கிற மாதிரி சொல்லிவிட்டு, அவர் போய் விட்டார்.

அன்றையிலிருந்து, எனக்குச் சங்கடந்தான். ரேடியோ என்று நான் மனசிலே நினைக்கிறபொழுது, யாராவது பக்கத்திலே தும்மிவிட்டாலோ, போதும்; எனக்குப் பயம் தான். என்ன அபசகுனம் என்று என் மார்பு 'திக் திக்' என்று அடித்துக் கொள்ளும்.

இந்தச் சங்கடத்தையெல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த என் சம்சாரம், ''என்னைக் கூப்பிட்டிருந்தால், ஜோராய்ப் போய்ப் பேசி'ப்பிட்டிருப்பேன்'னு வெண்கலக் குரலில் கணீர் என்று கன்னத்திலே அறைஞ்ச மாதிரி சொன்னாள்.

என் சிரமம் அவளுக்கு என்னமாய்த் தெரியும்? நான் தலைப் பிரசவக்காரி நிலைமையில் இருந்தேன். ஒரு சமயம் அடங்காத உற்சாகம்; இன்னொரு சமயம் அர்த்தமில்லாத பயம். ஒரு சமயம், நாக்கு சுத்தமாய்ப் பேசமாட்டேன் என்று விட்டது.

பரீட்சை கொடுக்கிற இருப[illegible] தேதி வந்தது. ''கொஞ்சம் [illegible]மாகவே ரேடியோ காரியா[illegible]யத்துக்குப் போகணும்'' என்று [illegible]ம்சாரத்தினிடம் சொன்னேன்.

''நாட்டுப்புறத்தார்கள் 'போட்மெயில்' வண்டிக்குப் புறப்படுகிற மாதிரியா?'' என்று சிரித்தாள். அவள் என்ன பண்ணுவாள்! நண்டுக்குச் சீவன் போறாது; நரிக்குக் கொண்டாட்டம்!

இருந்தாலும், சீக்கிரமாகப் புறப்பட்டேன். எல்லாம் அவசரம்தான். புறப்பட்டு, இரண்டு அடி எடுத்து வைக்கவில்லை - ''இந்தாருங்கோ'' என்று சம்சாரம் கூப்பிட்டாள். ''புறப்பட்டுப் போறப்போ சகுனத் தடையா கூப்பிடறயே?'' என்று கோபித்துக் கொண்டேன்.

''கண்ணாடியை வச்சிட்டு மறந்து போயிட்டீங்களே! அங்கே போய் எப்படிப் படிப்பீங்க?'' என்று பரிதாபத்தோடு சொன்னாள்.

கண்ணாடியை வாங்கிக் கொண்டு, மாடியிலிருந்து கீழே, இறங்கி, புறப்

சென்னை-600 006.





**தூய உள்ளமே கோயில்; நலிந்தோரைத் தேற்றுவதே தோத்திரம்; மக்கட் பணியே மகேசனுக்கு உகந்த வழிபாடு; ஏழை இதயத்தின் மகிழ்ச்சியே இறைவனுக்குத் தேர்த்திருவிழா!**

**—அறிஞர் அண்ணா**

பட இருந்தேன். "மாமா! சினிமாவுக்குப் போறீங்களா?" என்று எதிர் வீட்டுப் பையன் கேட்டான். சகுனத் தடை ஒண்ணாச்சு, இரண்டாச்சு - என்ன ஆகப் போகிறதோ என்று எனக்குப் பயம். எப்படியோ தைரியத்தைக் கைவிடாமல், அடி எடுத்து வைத்தேன். வீதியிலே போகும் ஒருவர் பொசுக்கெனத் தும்மினார். இது என்ன விபரீதம்! இந்தத் தும்மலை அவர் கொஞ்சம் முந்தித் தும்மியிருக்கக் கூடாதா? அல்லது கொஞ்சம் பிந்தித்தான் தும்மியிருக்கக் கூடாதா?

என்ன பண்ணுவது என்று தெரியவில்லை. நான் வீதியிலே நின்று கொண்டிருந்தேன். எனக்குத் தெரிந்த பாட்டியம்மா வந்தாள்.

"அப்பா! போகிற காரியம் அட்சயப் பாத்திரம் மாதிரி வளர்ந்துண்டே இருக்கும்; வெளுத்ததெல்லாம் பாலில்லே; வெள்ளைப் புடவைக்காரிகளெல்லாம் விதவை இல்லே! என் சகுனம் நல்ல சகுனம், பயப்படாதே, போ" என்று பாட்டி தாதுபுஷ்டி லேகியம் கொடுத்தாள். தும்மலாச்சு; போகிறபோது கூப்பிடுகிறதாச்சு. போதாக்குறைக்கு, அமங்கலி அம்மா வேறே வந்து தோன்றியிருக்கிறாள்!

'ரேடியோ ஆச்சு; அதுவும் ஆச்சு! வீட்டுக்குத் திரும்பிப் போய் விடலாமா?' என்று யோசித்தேன். திரும்பி எங்கே போவது? வீட்டுக்குத் தானே போக வேண்டும்? சம்சாரம் சிரிக்கமாட்டாளா? ஆண்பிள்ளைகளுக்கெல்லாம் தைரியம் வருகிற கடைசி வழி சம்சாரம்தானே!

பத்தடி எடுத்து வைத்தேன். "ரொம்ப சந்தோஷம்! போய்விட்டு வாருங்கள். இன்றைய பிரசங்கம் அபூர்வமாக இருக்கணும்" என்று பக்கத்து வீட்டுச் சிநேகிதர் வாழ்த்தினார். ஆனால் அவர் வீட்டிலே வளர்ந்து வந்த பூனைக்கு இங்கிதமே தெரியவில்லை! அது ஒரே பாய்ச்சலாய்க் குறுக்கே பாய்ந்து ஓடிற்று.

பூனை குறுக்கே போகிற காரியம் ஒரு நாளும் பலிக்காது என்று எங்கள் பாட்டி சொன்னது, தகதக என்று சூரிய ஒளி போலே என் ஞாபகத்துக்கு வந்தது. இருந்தாலும், சிநேகிதர் கிண்டல் செய்வார் என்று பயந்து, வேகமாக நடந்து, பஸ்ஸிலே ஏறினேன்.

உடம்பெல்லாம் வியர்வை. மார்பு படபட என்று அடித்துக்கொள்கிறது. பேந்தப் பேந்த விழிக்கிறேன். பக்கத்தில் இருந்தவர் பயந்து போய்விட்டார்; மெல்ல விசாரித்தார். என்னை அறியாமலே, ரேடியோ என்று உளறிவிட்டேன். சட்டென்று நினைவு வந்துவிட்டது. தொண்டையை நன்றாகக் கனைத்துக் கொண்டேன். இதற்குள்ளே, பஸ்ஸும், மவுண்ட் ரோடில் வந்து நின்றுவிட்டது.

சட்டென்று இறங்கினேன். இறங்கின அவசரத்திலே, பஸ் கதவிலே இடித்துக் கொண்டேன். இந்த அபசகுனமும் நேரவேண்டுமா என்று நினைத்துக் கொண்டேன்.

எல்லாம் சரி, ரேடியோவிலே என்ன பேசறது! கல்யாணச் சந்தடியிலே தாலிகட்ட மறந்துபோன கதை மாதிரி ஆகிவிட்டது....?

இனிமேல் என்னமா யோசிக்க முடியும்? இந்தச் சமயத்திலே சமய சஞ்சீவி மாதிரி ஒரு பையன் பேப்பர் விற்றான். "மூட நம்பிக்கைகள்' காலணா" என்று விற்றான். பழம் நழுவிப் பாலிலே விழுந்து, அதிலிருந்து நழுவி வாயிலே விழுந்த மாதிரி ஆச்சு; மூட நம்பிக்கைகள் டஜன் கணக்கிலே, காலணாவுக்கு மலிவாகக் கிடைத்ததிலே எனக்குச் சந்தோஷம்.

அதிலிருந்து, கொஞ்சம் உங்களுக்குப் படிக்கப் போகிறேன். படிக்கட்டுமா? கொஞ்சமே கொஞ்சந்தான்:

*பந்தயப்பட்டி சித்திரவதை*

"நம் நாட்டிலே இருக்கிற மூட நம்பிக்கைகளைக் கணக்கெடுக்க முடியாது. பந்தயப்பட்டி சித்திரவதையைக் கேட்டால், கேட்பார் மனம், கல்லாயிருந்தாலும் கரைந்து போகும். உண்மையாக நடந்த சம்பவம். கற்பனை கொஞ்சங்கூட கலக்கவில்லை.". இந்த மாதிரி அந்தத் தாளில் எழுதியிருந்தது. அதுதான் சுவாரஸ்யமாக இருக்கலாம் என்று நினைத்து அதை உங்களுக்குப் படிக்கப் போகிறேன். இந்தத் தாளிலே, மேலே என்ன எழுதியிருந்தது என்கிறீர்களோ?

**படிக்கிறேன் கேளுங்கள்:**

பந்தயப்பட்டி என்று ஒரு கிராமம். அந்த ஊரிலே, பரம்பரையாக ஒரு பெரிய குடும்பம். அந்த குடும்பத்திலே கிருகலட்சுமி என்று ஒரு பெண் பிறந்தாள், அவள் ரொம்ப சமர்த்து. ஆனால் நிறம் கொஞ்சம் கறுப்பு. இந்தத் தேசத்துக்குக் கறுப்பு நிறம் இயற்கைதானே?

கிருகலட்சுமிக்குப் புருஷன் பார்த்துக் கடைசியாகக் காலாடியூரில் ஒரு பையனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்தார்கள். பெண்ணாய்ப் பிறந்த - பாபத்துக்காகவும் சேர்த்துப் பையனுக்கு ரூபாய் 5,000 கொடுத்தார் கிருகலட்சுமியின் தகப்பனார். பையன் இங்கிலீஷ் படித்து, உத்தியோகம் பெற்றான். மாதம் ரூபாய் 50 சம்பளம். ஆனால் மேல்வரும்படி, கீழ்வரும்படி முதலிய இனங்களைச் சேர்த்து, அவனுக்குச் சுமார் 150 ரூபாய் வரும். ஆகவே, அவனுக்குக் குஷி உண்டாயிற்று.

ஒரு நாளைக்குத் திடீரென்று நினைத்துக் கொண்டான். தன் சம்சாரம் கிருகலட்சுமியை அவள் பிறந்த வீட்டுக்கு அனுப்பிவிட்டு, அனுப்பின கையோடு மறு தாரம் கல்யாணம் செய்துகொண்டான். காலாடியூர்ப் பேர்வழியின் யோக்கியதையைப் பாருங்கள்! கிருகலட்சுமிக்கோ பிறந்த வீட்டுக்கு வந்து, அழுது அழுது, தொண்டை புண்ணாகிவிட்டது. உரிய வேளைக்குச் சாப்பாடு கிடையாது; அநேகமாகப் படுத்த படுக்கைதான். யாரோடேயும் அதிகமாகப் பேச்சுக் கிடையாது.



காலாடியூர்ப் பேர்வழியோ, தன் புதிய மனைவியோடு உல்லாசமாகக் காலங்கழித்து வருகிறான். எத்தனைப் பேர்களோ அவனிடம் சொல்லிப் பார்த்தார்கள். சொல்லச் சொல்ல அவனுக்குத் திமிர் அதிகமாகப் போய்விட்டது. வாய்த்துடுக்கினால், அவன் ஒரு சமயம், கறுப்பு நிறமும் கழுதையும் சமானம் என்று எடை போட்டு நிறுத்தி விட்டதைப் போல, உளறித் தீர்த்துவிட்டான். இந்தத் தேசத்திலே, அவதார புருஷர்களாக விளங்கியவர்கள் எல்லோரும் அட்டைக் கருநிறம் என்பது அவனுக்குத் தெரியுமா? அவனுக்கு நிறத் திமிர். என்ன செய்யலாம்?

கிருகலட்சுமியோ, துரும்பாக ஆகிக்கொண்டு வந்தாள். பெற்றோர் படுகிற பாட்டைச் சொல்லி முடியாது. பந்தயப்பட்டியிலே ஒரு ஜோசியர், ஒரு பூசாரி - இரண்டு பேருக்கும் போட்டி. பூசாரியாருக்குப் பனமரத்துப் பூசாரி என்று பெயர். 'வெள்ளைக் குதிரைச்' சவாரியில் அவருக்குப் பிரம்மானந்தம். அவர் இருக்கிற நூறு கஜ தூரத்துக்குக்கூட கள் நாற்றம் அடிக்கும். அவர் போதை வெறியில் பம்பையை அடிப்பார். அடித்தால் பேய்கள் எல்லாம் ஒரே ஓட்டம் எடுக்குமாம்! பேயாட்டி பனமரத்துப் பூசாரி, பந்தயப்பட்டியிலும் அதன் சுற்று வட்டாரத்திலும் பெயர் போன பேர்வழி.

ஜோசியருக்குப் பாலத்து ஜோசியர் என்று பிரபல பட்டப் பெயர். ஊர்க்கோடியில் ஒரு பாழடைந்த பாலத்தின்கீழ், அவர் சுமார் ஒரு மணிநேரம் வரையில் உட்கார்ந்து கொண்டு, தம் முதுகின் அடிப்புறத்தை மத்தளம் தட்டினாலொழிய, அவருக்கு ஜீரணம் ஆகாதாம். பந்தயப்பட்டியில் எது நடந்தாலும், இவர்கள் இரண்டு பேருக்குத்தான் அதிருஷ்டம். ஜோசியரிடம் யாராவது ஆரூடம் பார்க்கப் போனால், வேடிக்கையாக இருக்கும்.

'எட்டிலே ஒன்பது போனால்?' என்று அவர் கேட்பார். போகாது என்றால் அவருக்குக் கோபம் வந்துவிடும். "உங்கள் புதுக்கணக்கு எனக்கு வேண்டாம். கர்நாடகக் கணக்கு எனக்குப் போதும். அரைப் படி பாலிலே முக்கால் படி தண்ணீர் போகாதோ?" என்று கர்ஜனை செய்வார். இப்பேர்ப்பட்ட அபூர்வமான கர்நாடகக் கணக்குப் போடுகிறவர் ஜோசியர்.

நாளுக்கு நாள் அன்ன ஆகாரம் இல்லாமல் மெலிந்து போய்க் கொண்டிருந்த கிருகலட்சுமிக்குப் பேய் பிடித்திருக்குமோ என்று அவள் தகப்பனார் சந்தேகப்பட்டார். சந்தேகப்பட்டதுதான் தாமதம்; பூசாரியார் தோளில் பம்பை, ஒரு கையில் பிரம்பு, மற்றொரு கையில் விபூதிப்பை சகிதமாகக் கிருகலட்சுமியின் பிறந்த வீட்டில் தோன்றினார்.

பூசாரியார் வக்கணையாகப் பம்பை அடித்தார். வர்ணனையாகப் பாடினார். வலுக்கொண்ட மட்டும் பிரம்பைத் தரையில் தட்டி, பேயை வெருட்டிப் பார்த்தார். எந்தப் பேயும் ஜவாப் சொல்லவில்லை; ஆஜராகவில்லை.

"இது சாதாரணக் காற்றுத் தோஷமில்லீங்க" எனப் பூசாரியார் சொல்லி வாய்மூடுமுன், கிருகலட்சுமி துக்கம் பொறுக்க முடியாமல், "பூசாரியாரே! வெறும் காற்றுத் தோஷமில்லை, எனக்குள்ளே அடித்துக்கொண்டிருக்கும் புயல் காற்றுத் தோஷம். நீர் போய்விட்டு வாரும்" என்று படபடவென்று சொல்லிவிட்டாள். கலிகாலம் என்று முணுமுணுத்துக் கொண்டே பூசாரியார் வெளியேறிவிட்டார்.

பூசாரிக்குப் பின் ஜோசியர் வந்தார். தரையிலே கிழக்கும் மேற்கும் தெற்கும் வடக்குமாகக் கோடுகளைக் கிழித்துக் கட்டம் கட்டினார். வாய்க்குள்ளே எதையோ முணுமுணுத்தார். கை விரல்களை ஒன்று ஒன்றாகவும் இரண்டாகவும் விட்டு எண்ணினார்.

"ஆமாம் கிருக தோஷம்தான்" என்றார். கடைசியில், பக்கத்தில் கிருகலட்சுமியின் தம்பி இருந்தான். அவனுக்கு இந்த மூடு மந்திரங்கள் ஒன்றும் பிடிக்கவில்லை. "எந்தக் கிருகதோஷம்! பிறந்த கிரகமா? புகுந்த கிரகமா? அல்லது ஜோசியம் பார்க்கிற கிரகசார தோஷமா?" என்று அடுக்கினான். "துள்ளுகிற மாடுதான் பொதி சுமக்கும்; ஒண்ணிலே ஒண்ணு போனால்?" என்று ஜோசியர் கேட்டார்.

படீர் என்று 'மண்' என்றான் தம்பி. "ஆமாம்! மண் என்றால் செவ்வாய். செவ்வாய் நீசமாகி விட்டான். பிறந்த வீடு பெருமை அழிந்து போனால், புகுந்த வீட்டில் ஒருவரும் லட்சியம் செய்யமாட்டார்கள்" என்று ஜோசியர் அளப்பு அளந்தார்.

"இந்தக் கதையெல்லாம் எதற்கு? கிருகலட்சுமிக்கு விமோசனம் ஏதாவது உண்டா?" என்று கிருகலட்சுமியின் தகப்பனார் கேட்டார்.

தம்பிக்குக் கோபம் வந்துவிட்டது. "என்ன கேள்வி அப்பா - கேட்கிறீர்கள்? கிருகலட்சுமியைத் தள்ளி வைத்தவன் திமிர் பிடித்தவன். லோகத்திலே திமிருக்கு மருந்து கிடையாது. பூசாரியும் மாந்திரிகனும் ஜோசியனும் என்ன செய்ய முடியும்? காலாடியூர்ப் பேர்வழியைப் போல இந்தத் தேசத்திலே லட்சக்கணக்கில் இருக்கிறார்கள். அவர்கள் - கிருகலட்சுமியைப் போன்ற உத்தமிகளைச் சித்திரவதை செய்து வருகிறார்கள். மூடநம்பிக்கைகளும் திமிரும் ஒழிந்தாலொழிய, நம்மவர்களுக்கு விமோசனம் கிடையாது" என்று தம்பி சரமாரியாகப் பொழிந்து விட்டான். தம்பியின் கட்சியை நாம் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம்.

படித்து முடிந்துவிட்டது. என் ரேடியோப் பேச்சுப் பேசித் தீர்த்துவிட்டேன். உத்தரவு கொடுங்கள். இன்னொரு சமயம் பார்த்துக் கொள்ளுவோம்!



சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக அமைப்பே எனது இலட்சியம். அத்தகையதொரு சமூக அமைப்பு ஏன் ஏற்படாது? சகோதர பாவனை ஏன் ஏற்படாது? அதற்கு எத்தகைய முட்டுக்கட்டையும் ஏற்படுமென்று எனக்குத் தோன்றவில்லை.

—டாக்டர் அம்பேத்கர்






# உதகை தாவரவியல் பூங்கா வளர்ச்சிப் பணிகள்

உதகை அரசினர் தாவரவியல் பூங்கா 1948-இல் தொடங்கியதிலிருந்து பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, பூங்கா எழிலுடன் விளங்கி வருகிறது.

இப்பூந்தோட்டம் 22 எக்டேர் பரப்பில் கடல் மட்டத்திலிருந்து 2,400 முதல் 2,500 மீட்டர் வரை உயரத்தில் பொலிவுடன் விளங்குகிறது. ஆனாலும், அண்மைக் காலமாகப் பெருகி வரும் பார்வையாளர்களைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது, வளர்ச்சிப் பணிகள் தேவையான அளவு மேற்கொள்ளப்படவில்லை.

1986-ஆம் ஆண்டு 9.049 இலட்சம் மக்கள் இப்பூங்காவிற்கு வருகை தந்துள்ளனர். ஆனால், 1990-ஆம் ஆண்டு 11.711 இலட்சமாக மக்கள் வருகை உயர்ந்துள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு, கடந்த ஆண்டு பல்வேறு வளர்ச்சிப் பணிகள் திட்டமிடப்பட்டு இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

**வளர்ச்சிப் பணிகள்**

இப்பூங்காவை நவீனப்படுத்தவும், விரிவுபடுத்தவும் ரூ.75.25 இலட்சம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. பூங்காவினைச் சுற்றி வேலி அமைக்க ரூ.8 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. பூஞ்செடிகளின் நாற்றுக்கள் வளர்க்க, கண்ணாடி மாளிகைகள் அமைக்கப்பட்டுள்ளன. இக்கண்ணாடி மாளிகைகளைப் பழுது பார்க்கும் பணிகள் ரூ.6 . இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருகின்றன. மேலும் ரூ.15 இலட்சம் செலவில் புதிய கண்ணாடி மாளிகைகள் கட்டும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

5 கி.மீ. தூரத்திற்குச் சாலை பழுதுப் பார்க்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிக்காக ரூ.0.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புதுப் பாதைகள் அமைக்கும் பணிகள் துரித்மாக நடைபெற்று வருகின்றன. இதற்காக ரூ.3.50 இலட்சம் செலவிடப்பட உள்ளது. மக்கள் பூங்காவை முழுமையாகச் சுற்றிப்பார்க்க வசதியாக உயரமான இடத்திற்குச் செல்லப் படிக்கட்டுகள் கட்டும் பணியும் மேற்கொள்ளப்பட்டு, இதற்காக ரூ.0.50 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

மழைக் காலத்தில் தண்ணீர் செல்ல வசதியாக வடிகால்வாய் சாலையின் இருபுறங்களிலும் ரூ.1.75 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

பூங்காவில் தண்ணீர்க்கிணறு வெட்டப்பட உள்ளது. தற்போது சின்கோனாவிலிருந்து 5 கி.மீ. தூரத்திற்கு பூமிக்கடியில் குழாய்கள் பதித்துத்தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. இதனை மேலும் மேம்பாடு செய்ய ரூ.1.5 இலட்சம் செலவிடப்பட உள்ளது.

**நுழைவு வாயில் - அலங்கார வளைவு:**

தற்போது நுழைவு வாயிலில் அலங்கார வளைவு, மதில் சுவர் கட்டிட ரூ.15 இலட்சத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. நுழைவு வாயில் 20 அடி உயரத்திற்கும், 20 அடி அகலத்திற்கும் கட்டப்படும். நுழைவு வாயிலில் 6 அடி உயரத்திற்கு மதிற்சுவரும், இரண்டு அடி உயரத்திற்கு இரும்புக் கம்பியும் போடப்படும். அலங்கார வளைவு மிகவும் வனப்புடையதாகவும், கலை அம்சம் பொருந்தியதாகவும் அமைக்கப்படும்.

**தோட்டக்கலை தாவரவியல் படிவம் சேமிப்பு நிலையம்:**

நீலகிரி மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு தாவரத்தின் செடிகளைச் சேகரித்து மக்களின் பார்வைக்கு வைக்க தாவரவியல் படிவம் சேகரிப்பு நிலையம் நிறுவப்பட உள்ளது. இதன் மதிப்பீடு ரூ.15 இலட்சம் ஆகும். ஆராய்ச்சி மாணவர்களுக்கும், தாவரவியல் பயிலும் மாணவர்களுக்கும் இது பயன்படத்தக்க வகையில் அமைக்கப்படும். தகவல் மற்றும் விற்பனை நிலையம் ரூ.7.5 இலட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்படும்.

பூங்காவைக் காண வரும் மக்களுக்கு வசதியாக 6 அறைகள் கொண்ட 2 இணை நவீன கழிப்பிடங்கள் ரூ.2 இலட்சம் செலவில் கட்டப்படும்.

**ரோஜா மலர்த் தோட்டம்:**

இப்பூங்காவில் பல்வேறு வகையான மலர்கள் காணப்படினும், ரோஜா மலர்களுக்குத் தனித்தோட்டம் அமைக்கப்படும். 1,500 வகையான ரோஜாச் செடிகள் இத்தோட்டத்தில் பயிர் செய்யப்படும். 10,000 ரோஜாச் செடிகள் வைக்கப்படும். ரோஜா மலர்களுக்கெனத் தனித்தோட்டம் அமைப்பது இப்பூங்காவிற்குத் தனிச்சிறப்பு ஏற்படுத்துவதாகும்.

மேலும், இப்பூங்காவைக் காண வரும் பார்வையாளர்களுக்கு இப்பூங்காவைப் பற்றி எடுத்துக்கூற ஆறு தாவரவியல் பட்டதாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

மே மாதத்தில் நடைபெறும் மலர்க் கண்காட்சிக்கு இப்பொழுதே பூங்காவை அழகுப்படுத்தும் பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. இவ்வாண்டு நடைபெறும் மலர்க் கண்காட்சியில் பல்வேறு வகையான மலர்கள் இடம் பெறுகின்றன. இவ்வாண்டு நடைபெறும் மலர்க்காட்சியின்போது பூங்காவின் வளர்ச்சிப் பணிகள் நிறைவேறி காண்போர் உள்ளங்களைக் கவரும் என்பது திண்ணம்.

மு.நா.கிருஷ்ணசாமி
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
நீலகிரி மாவட்டம்

## மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம்
## செங்கை-அண்ணா மாவட்டம்

### 1.4.90 முதல் 30.11.90 வரையிலான சாதனை
### ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1990-91-ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு (ரூ.இலட்சத்தில்) | : | 352.90 |
| 2. | 30.11.90 வரை மொத்த செலவினம் | : | 247.18 |
| 3. | 1990-91-ஆம் ஆண்டில் பயனடைய வேண்டிய நபர்களின் எண்ணிக்கை (புதியவை) | : | 11,217 |
| 4. | 30.11.90 வரை பயனடைந்த மொத்த நபர்களின் எண்ணிக்கை (புதியவை) | : | 8,489 |
| 5. | பயனடைந்த தாழ்த்தப்பட்டோர் எண்ணிக்கை (புதியவை) | : | 4,154 |
| 6. | பயனடைந்த மகளிர் எண்ணிக்கை | : | 2,141 |

### ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம்

| | | | |
|---|---|---|---|
| 1. | 1990-91-ஆம் ஆண்டின் நிதி இலக்கு (ரூ.இலட்சத்தில்) | : | 1553.990 |
| 2. | 30.11.90 வரை பெறப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) | : | 1179.769 |
| 3. | பயன்படுத்தப்பட்ட நிதி (ரூ.இலட்சத்தில்) | : | 915.996 |
| 4. | 1990-91-ஆம் ஆண்டின் மனித சக்தி நாட்கள் இலக்கு (இலட்சத்தில்) | : | 48.497 |
| 5. | மனித உழைப்பு நாட்கள் உருவாக்கப்பட்டது (இலட்சத்தில்) | : | 39.328 |
| 6. | எடுக்கப்பட்ட மொத்த வேலைகள் (எண்ணிக்கை) | : | 7,496 |
| 7. | ஆதிதிராவிடர்களுக்குக் கட்டி முடிக்கப்பட்ட தொகுப்பு வீடுகளின் எண்ணிக்கை | : | 403 |
| 8. | முடிக்கப்பட்ட பிற வேலைகள் | : | 1,732 |

**கிருஷ்ணசுவாமி ராஜீவன், இ.ஆ.ப.**
திட்ட அலுவலர்

**சமீர் வியாஸ், இ.ஆ.ப.,**
மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பெருந்தலைவர்



# விவசாயிகளுக்கு விற்பனை உதவி



விவசாயிகள் தங்களது விளை பொருட்களை மிகக் குறைந்த விலைக்கு விற்பதைத் தவிர்க்கவும், அவைகளுக்கு நல்ல விலையினைப் பெற்றுத் தரவும் வன்முறைபடுத்தப் பட்ட சந்தை, நெல், நிலக்கடலை, சூரியகாந்திப் பூ போன்ற விளை பொருட்களின் பேரில் குறைந்த காலக் கடனுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின்கீழ் சந்தைக் கிடங்கில் வைக்கப்பட்டுள்ள சரக்குகளின் மதிப்பில் 50 சதவிகிதத் தொகை (ரூ.10,000-க்கு மேற்படாமல்) கடனாக வழங்கப்படும். இந்த விளை பொருட்கள் அதிகபட்சம் ஆறுமாதம் வரை கிடங்கில் வைக்கப் படும். இவைகளைப் பாதுகாக்கத் தனியாக எந்தக் கட்டணமும் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட வில்லை.

கடன் வழங்கப்பட்ட முதல் மாதத்திற்கு, வட்டி வசூலிக்கப் படுவதில்லை. எனினும், இரண்டா வது மாதத்திலிருந்து ஆறாவது மாதம் வரை 10 சதவிகித வட்டி வசூலிக்கப்படும்.

1990-91ஆம் ஆண்டில் சுமார் 1,500 விவசாயிகள் இக்கடன் வசதிகளைப் பயன்படுத்திக் கொள் வார்கள் என எதிர்பார்க்கப்படு கிறது. 1991 ஜனவரித் திங்கள் வரை, சுமார் 820 விவசாயிகள் இத் திட்டத்தின் மூலம் பயனடைந் தார்கள்.

### ஒருங்கிணைந்த புன்செய் வேளாண்மைத் திட்டம்

நன்செய் பயிர்களின் உற்பத்தி யைப் பெருக்கவும், நன்செய் நில விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் மாநில அரசின் நிதியில் ரூ.1.5 கோடியில் 1990-91-இல் அமல்படுத்தப்படு கிறது. கோடை உழுதல், சத்துள்ள உரங்களைப் பயன்படுத்துதல், இரட்டை விளைச்சல், எரு உற்பத்தி, ஒருங்கிணைந்த பூச்சிக்கொல்லி முறைகள் ஆகியவற்றைச் செயல் படுத்திக் காண்பிக்க ஒரு பகுதியில் 100 ஏக்கர் வீதம் 300 பகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

இந்த 100 ஏக்கர் நிலம் இதன் பக்கத்திலுள்ள பகுதிகளுக்குச் செயல் முறை விளக்கக் கூடமாக விளங்கி புதிய தொழில் நுணுக்கங்களைப் பரப்புகிறது. இத்திட்டம் அனைத்து மாவட்ட விவசாயிகளும் விரும்பும் வகையில் மிகவும் பயனுள்ளதாக உள்ளது. கோடை உழவு, மற்றும் சத்தான உரம் போன்ற வற்றில் நிர்ணயிக்கப்பட்ட இலக்கான 30,000 ஏக்கர் 31.12.90 அன்று எட்டப்பட்டு விட்டது. மற்ற வகை யிலும் நல்ல முன்னேற்றம் ஏற் பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 34,653 விவசாயிகள் பயனடைந் துள்ளனர். இத்திட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட ரூ.1.5 கோடியில் ஜனவரி 1991 முடிய ரூ.1.24 கோடி செலவிடப்பட்டுள்ளது.

*'சாதி இரண்டொழிய*
*வேறில்லை என்றே*
*தமிழ்மகள் சொல்லியசொல்*
*அமிழ்தமென்போம்!*
*நீதிநெறியினின்று பிறர்க்குதவும்*
*நேர்மையர் மேலவர்*
*கீழவர் மற்றோர்!'*

—பாரதியார்

## நூல் நயம்

### விற்பன்னர் வேதநாயகர் ஓர் ஆய்வு

**ஆசிரியர்:** கவிஞர் மதுரம் நம்பி

**வெளியீடு:**

கீதாஞ்சலி நிலைய வெளியீடு
விருகாவூர்-606 203
(தெ.ஆ.மாவட்டம்)

விலை:ரூ.25 பக்கம்:268

தமிழில் முதல் நாவல் எழுதிய பெருமை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை அவர்களையே சாரும்.

பிரதாப முதலியார் சரித்திரம், சுகுணசுந்தரி முதலான அவரது நூல்கள், அக்காலக் கட்ட நிகழ்ச்சிகளைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவர்தம் நூல்கள் வாயிலாகக் கூறும் அறிவுரையும், அறவுரையும் எக்காலத்துக்கும் பொருந்துவனவாகும்.

வேதநாயகரின் வாழ்க்கைச் சுருக்கத்தோடு, அவரது நூல்களைப் பற்றியும் அலசி ஆராய்கிறார் நூலாசிரியர். வேதநாயகர் வாழ்ந்த காலத்தில் நிலவிய சமய நிலை தெளிவாக்கப்பட்டுள்ளது. அவரது சமரச நோக்கும் அவரது மொழி நடை, புலமை எல்லாம் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் கூறும் ஆசிரியரின் புலமை தெற்றென விளங்குகிறது.

ஆராய்ச்சி மாணவர் மட்டுமல்ல, அனைவரும் படித்து அறிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள நூல்.

### தமிழின் மறுமலர்ச்சி

**ஆசிரியர்:**
பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை

**வெளியீடு:**

பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை நினைவு மன்றம்,
'வையகம்' 2, 4-வது குறுக்குச் சாலை,
இராஜா அண்ணாமலை புரம்,
சென்னை-600 028.

விலை:ரூ.42 பக்கம்:443

''தமிழாய்வுலகில் ஒரு புது யுகத்தைத் தோற்றுவித்தவர் பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை. அறிவியல் வழி ஆய்வு முறையில் இவர் முன்னோடியாக விளங்கியவர். விஞ்ஞான அடிப்படையிலான அணுகுமுறையை மேற்கொண்டு பரந்து கிடக்கும் நம் தமிழ் இலக்கியங்களைத் திறனாய்வு செய்து வந்தவர்'' என்று இந்நூலின் முன்னுரையில் கூறியதற்கிணங்க, இந்நூலில் இடம் பெற்றுள்ள அத்தனைக் கட்டுரைகளுமே ஆய்வு நோக்கில் எழுதப்பட்டுள்ளன.

வையாபுரிப்பிள்ளை நூற்களஞ்சியத்தின் இரண்டாம் தொகுதியாக வெளிவரும் இந்நூலில், மொழி வரலாறு தொடர்பான கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. தமிழின் மறுமலர்ச்சி, சொற்கலை விருந்து, சொற்களின் சரிதம், நிகண்டுகள், அகராதி என ஐந்து பகுதிகளாக வகுக்கப்பட்டுத் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையும், ஆசிரியர்தம் ஆழ்ந்த புலமையை வெளிப்படுத்துகின்றது. தமிழின் சிறப்பும், அதன் அதியற்புத இயல்பும் வரிக்கு வரி வழங்கியிருக்கும் பாங்கு மகிழ்தற்குரியது. ஆராய்ச்சி ஆர்வலர் மட்டுமல்ல, தமிழ் அன்பர் யாவரும் படித்துப் பயன் பெற வேண்டிய சொற்களஞ்சியம் இது.

—பி.வி.கிரி.

### காந்திய பொருளாதாரம்

**ஆசிரியர்:** டாக்டர் திரு.ஜே.ஸி.குமரப்பா
**மொழி பெயர்ப்பாளர்:** திரு.மீ.விநாயகம்

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020.

விலை:ரூ.10 பக்கம்:123

காந்தியச் சிந்தனையைக் கற்றுத் தெளிய, உறுதுணையாக விளங்கும் ஒரு அரிய மொழிபெயர்ப்பு நூலாகும்.

### சர்வோதய சமுதாயம்

**ஆசிரியர்:** திரு.வி.செல்வராஜ்

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை:ரூ.2 பக்கம்:24

அண்ணல் காந்தியடிகள் தந்த சர்வோதயம் என்ற சொல்லை அனைவரும் நிறைந்து போற்றி, சமுதாயம் மேன்மையுற வழிவகை காண உதவிடும் இனிய கையேடு இது.

### இந்து மதம்

**ஆசிரியர்:** ஸ்ரீகிருஷ்ணதத்த பட்

**வெளியீடு:**

காந்திய இலக்கியச் சங்கம்,
காந்தி மியூசியம்,
மதுரை-625 020

விலை:ரூ.20 பக்கம்:228

இந்நூல் இந்தியின் தமிழாக்கம். இந்து மதம் பற்றி வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் என்ற மூன்று பகுதிகளிலிருந்தும் மிக அற்புதமாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

### அகில உலக அமைதித் தமிழ் அன்னையின் புன்னகை

**ஆசிரியர்:**
கவிஞர் பாட்டாளி ஆ. பழனியப்பன்

**வெளியீடு:**

கவிஞர் பாட்டாளி ஆ. பழனியப்பன்,
1162, 75-வது தெரு, 12-வது பிரிவு,
கலைஞர் கருணாநிதி நகர்,
சென்னை-600 078.

விலை: ரூ.20 பக்கம்: 144

பல்வேறு தலைப்புக்களில் பைந்தமிழ்க் காவியமாக, கவிதை மணம் குன்றா செந்தமிழ் விளக்கமாக, கவிதை மனம் கொண்டோர் பார்த்து மகிழ, சிந்திக்க, எழில்மாடமாகத் திகழும் அரிய படைப்பாகும்.

—பொன். சுப்பையா

### பாரதிதாசனின் பொங்கற் பாட்டுக்கள்

**ஆசிரியர்:** டாக்டர் எஸ்.குலசேகரன்

**வெளியீடு:**

அமிழ்தம் பதிப்பகம்
15, முத்துப்பிள்ளை தெரு,
வ.உ.சி. நகர், வேலூர்-632 001.

விலை:ரூ.7 பக்கம்:68

இந்நூலில் புரட்சிக் கவிஞர் பா்வேந்தர் பாரதிதாசனைப் பற்றி, இளைஞர்கள் புரிந்து கொள்ளக்கூடிய எளிய நடையில் நல்ல தமிழில் எழுதப்பட்டுள்ளது.

பொங்கல் திருநாளில் நாம் எப்படி இருக்க வேண்டும் என்று கவிஞர் விரும்புகிறார் என்பதையும், கவிஞரின் உள்ளக் கருத்துக்களையும் தெளிவுபட விளக்குகின்றார் ஆசிரியர். குழந்தைகள், எளிதாகப் படித்தறிந்து கொள்ளக்கூடிய வகையில் நூல் எழுதப்பட்டுள்ளது.

—தே.மணி



# வால்நட்சத்திரங்கள்



இரவு நேரம்.

வானத்தைப் பார்க்கிறோம்.

அங்கே உள்ள நட்சத்திர மண்டலங்களை அடையாளமாகக் கொண்டு, தாரகைகளைத் தனித்தனியாக அறிந்து கொள்ளலாம்.

முதன் முதலில் இடைக்காலத்தில்தான் மக்கள் வானத்தை உற்று நோக்கி நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பினை அடையாளம் கண்டு அவற்றினைப் பிரித்துள்ளார்கள். நட்சத்திரங்கள் மிகத் தொலைவில் உள்ளதால் நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்பில் ஏற்படும் மாறுதல்கள் வெகுகாலத்திற்குப் பிறகுதான் தென்படும். எனவே, பல்லாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னரும், நட்சத்திரக் கூட்டங்களின் உருவ அமைப்புக்கள் ஒன்றாகவே காணப்படுகின்றன.

இந்த நட்சத்திரக் கூட்டத்தின் உண்மைக் கதை என்ன?

இந்த ஏழு நட்சத்திரங்கள் நமக்கு அறிமுகமானவையே! இந்த நட்சத்திரக் கூட்டம் ''சப்தரிஷி மண்டலம்'' எனப்படும். இவற்றுடன் சில நட்சத்திரங்கள் சேர்ந்த கூட்டமைப்பினைப் 'பெருங்கரடி மண்டலம்' என்று அழைக்கிறோம். நட்சத்திர மண்டலத்தில் 'த்ருது' அதாவது Merek, புல்லகர் அதாவது Dhube ஆகிய முதல் இரண்டு நட்சத்திரங்கள் எப்போதும் துருவ நட்சத்திரத்தை நோக்கியே இருக்கும். பெருங்கரடி மண்டலத்தின் வால் பகுதியில் உள்ள கடைசி நட்சத்திரத்திற்கு முன்னுள்ள நட்சத்திரம் 'வசிட்டர்' அதாவது Mizar. 'அருந்ததி' அதாவது Alcor என்பது ஓர் நட்சத்திரம். ஒருவரின் கண்பார்வையைச் சோதிப்பதற்கு இது ஒரு சிறந்த முறை.

கிட்டத்தட்ட 460 கோடி ஆண்டுகளுக்கு முன்பு தூசு மற்றும் வாயு அடங்கிய மேகக் கூட்டத்திலிருந்து சூரியக் குடும்பம் தோன்றியது. சூரியக் குடும்பத்தின் 99 சதவீதத்திற்கும் மேலான பொருட்கள் நம் சூரியனில் அடங்கியுள்ளன. ஒன்பது கோள்களும் அவற்றின் துணைக்கோள்களுடன் சூரியனைச் சுற்றி வருகின்றன. மேலும், கோள்திரள்களும் அதாவது Asteroids மற்றும் வால்நட்சத்திரங்களும் அதாவது Comets சூரியனைச் சுற்றி வருகின்றன. இவை மட்டுமன்றி எரிகற்களும், எரிநட்சத்திரங்களும் அதாவது Meteoroids சூரியக் குடும்பத்தைச் சாரும்.

இரவு வானத்தில், நட்சத்திரங்கள், கோள்கள், சந்திரன் ஆகியவை காணப்படும். சில சமயங்களில் மற்றைய வான் பொருள்களும் இப்பகுதிகளில் தாணப்படும். இவ்வான் பொருட்கள் நீண்ட வாலுடனும், அழகிய தோற்றத்துடனும் நட்சத்திரங்களுக்கு இடையே தோன்றிச் சூரியனைச் சுற்றி வரும். இவற்றினைத்தான் நாம் வால் நட்சத்திரங்கள் என்கிறோம். வால் நட்சத்திரத்தை ஆங்கிலத்தில் Comet என்று அழைக்கிறோம். அவ்வப்போது தோன்றி இரவு வானத்தில் அணிகலன்களாக விளங்குவது இவ்வான் பொருட்களாகும்.

வால்நட்சத்திரங்கள் பார்ப்பதற்கு அழகாகத் தோன்றினாலும், முற்காலத்தில் மக்கள் அவற்றினை அச்சத்தோடுதான் பார்த்தனர். அக்கால வால்நட்சத்திரங்கள் தோன்றிய போதெல்லாம் அவற்றினைப் போர், வறுமை, நோய், துன்பம் முதலியன வரும் என்பதற்கான முன் அறிகுறியாக மக்கள் கருதினர். குறிப்பாக, முற்காலத்திய ஆப்பிரிக்க மக்கள் வால் நட்சத்திரம் தோன்றுவது அழிவுகள் ஏற்படுவதற்கான அறிகுறியாகும் என்று நம்பினர். எனவே, இந்நட்சத்திரம் தோன்றும் போதெல்லாம் மக்களிடையே அச்சமும் கவலையும் உண்டாயின. இந்த தீய விளைவுகளிலிருந்து மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வழிபாடுகளும், வழிபாட்டுச் சடங்குகளும் நடத்தினர்.

ரோமன் சக்கரவர்த்தி, 'நீரோ' என்பவர் வால்நட்சத்திரம் தோன்றும் போதெல்லாம், அவற்றின் தோற்றம் தன் பகைவர்களின் அழிவிற்கு முன் அறிவிப்பு என நினைத்து, அவர்களை வெட்டும்படி ஆணையிடுவார். இடைக்கால முனிவர்கள் வால்நட்சத்திரங்கள் பேயின் கந்தக வாசனையை வெளி ஏற்றுவதாகக் கருதினர். வால்நட்சத்திரங்களின் தோற்றம் வரக்கூடிய இயற்கைச் சீற்றத்தின் முன்னறிவிப்பே என்று வில்லியம் ஷேக்ஸ்பியரும் அவருடைய நாடகம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். ஜூலியஸ் சீசரில் (களம்II-இல்) கல்பூர்ணியா கூறுவதாவது:

''பிச்சை எடுப்பவர் இறக்கும்போது வால் நட்சத்திரங்கள் தோன்றுவதில்லை; ஆனால், இளவரசர்கள் மரணத்தின் போது விண்ணுலகமே கிளர் ஒளி வீசுகின்றது''.

பண்டையகாலம் முடிந்து, புதிய யுகம் தொடர்ந்தபோது மக்களிடையே ஒரு பெரும் மாற்றம் ஏற்பட்டது. நவீன காலத்திய மக்கள் வால் நட்சத்திரங்களைப் பற்றிய விவரங்களை ஆழ்ந்து ஆராயத் தொடங்கினர். டைகோ பிராஹே (Tycho Brahe) என்பவர் பலவகையான வெவ்வேறு வால் நட்சத்திரங்களை ஆராய்ந்தார். அவற்றில் ஒளி மிகுந்த ஒன்றான 1577-ஆம் ஆண்டில் தோன்றிய வால் நட்சத்திரத்தினை ஆராய்ந்த பின்னர், வால் நட்சத்திரங்கள் பூமியின் வாயு மண்டலத்தில் உருவானவையல்ல என்றும், அவை வெகு தொலைவிலிருந்து வந்த வான் பொருட்கள் என்றும் உறுதியாகக் கூறியுள்ளார். எல்லாக் காலத்திலும் பல்வேறு தீ நிகழ்வுகள் ஏற்படுவது இயல்பே எனப் பொதுவாக மக்கள் அறிவர். எனிலும் மூட நம்பிக்கையுள்ள மக்கள் வால் நட்சத்திரங்கள் தோன்றினால், இவற்றின் தோற்றத்திற்கும் அச்சமயத்தில் ஏற்பட்ட அல்லது அதற்குப் பிறகு உடனே ஏற்பட்ட தீ நிகழ்வுகளுடன் அவற்றைத் தொடர்புப் படுத்தி, வால் நட்சத்திரங்களின் தோற்றங்கள்தான் மக்களிடையே தீ நிகழ்வுகளை ஏற்படுத்துகின்றன என்று கூறினார்.

பொதுவான வான் பொருட்களாகிய நட்சத்திரங்கள், கோள்கள், சந்திரன் முதலியவற்றின் ஆராய்ச்சியினை அடுத்து இக்காலத்தில் வந்த வான்பொருளை வல்லுநர்களும், பொழுதுபோக்காக வானியல் தேர்வோரும், மிக ஆர்வத்தோடு ஆராய்ந்து வருகிறார்கள். அதுவ் வால் நட்சத்திர ங்கள் பற்றித்தான். அலங்காரத் தோற்றத்துடன், வால் நட்சத்திரம் நகருவதன் காட்சியினைக் காணும்போது, நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

வால்நட்சத்திரங்களின் எண்ணிக்கை, கடலில் உள்ள மீன்களின் எண்ணிக்கைக்குச் சமமாக உள்ளது என்று விஞ்ஞான நிபுணர் கெப்ளர் கூறியுள்ளார். அது உண்மையாக இருக்கலாம். எனினும் எங்கிருந்து இவ்வால்நட்சத்திரங்கள் வருகின்றன? வால்நட்சத்திரக் குடும்பத்திற்கும் அப்பாற்பட்ட மற்றைய நட்சத்திரக் கூட்டங்களிடையிலிருந்து வருவதாக முற்காலத்தில் நம்பப்பட்டது. தம் பாதையை விட்டுத் தவறிய வால்நட்சத்திரங்களில் சில சூரியனை நோக்கி வரும்போது, வியாழன், சனி போன்ற பெரிய கிரகங்களின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்பட்டு சூரிய குடும்பத்தின் வான் பொருளாக அடங்கிச் சூரியனைப் பொதுவாக நீள்வட்டப் பாதையில் சுற்றிவரத் தொடங்குகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பிரெஞ்சு வானஇயல் அறிஞரான லாக்ரெஞ்ச் (Lagrange) மற்றொரு கோட்பாட்டினை வெளியிட்டார்.

இக்கோட்பாட்டின்படி, வால்நட்சத்திரங்கள் பெரிய கோள்களிலிருந்து வெளியே தள்ளப்படுகின்றன. வியாழன் கோளில் பெரிய எரிமலையாகக் கருதப்பட்ட இடத்திலிருந்துதான் வால்நட்சத்திரங்கள் வெளியேற்றப் படுகின்றன என்று சில வல்லுநர்கள் நம்பினர். பின்னர்தான் இவ்விடம் ஜுபிடர் அதாவது வியாழன் கோளின் சிவப்புக் கறை அதாவது Red Spot என்னும் பெரும்புயலின் பகுதி எனத் தெரிய வந்தது. எனவே, மேற்குறிப்பிட்ட இரண்டு கோட்பாடுகளுக்கும் வானவியல் வல்லுநர்கள் ஆதரவு தருவதில்லை.

இப்போதுள்ள கோட்பாடு டச்சு (Dutch) வானியல் அறிஞரான ஜான் எச்.ஓர்ட் (Jan.H.Oort) என்பவரால் உருவாக்கப்பட்டது. அவர் இருபதுக்கும் மேற்பட்ட நீண்டகாலச் சுற்றுப்பாதை அளவுகொண்ட வால்நட்சத்திரங்களை நன்கு ஆராய்ந்து அவற்றின் சுற்றுப்பாதைகளை நிர்ணயித்துள்ளார். பெரும்பான்மையான வால்நட்சத்திரங்கள் வான் வெளிப்பகுதியில் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தொலைவில் இருப்பதாகவும் உறுதியாக முடிவு செய்துள்ளனர்.



ஒரு வான இயல் அலகு என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள சராசரி தூரமாகும். இது ஏறக்குறைய 15 கோடி கிலோமீட்டர். ஓர்ட் எனப்படும் பெருமேகம் கோடிக்கணக்கான வால் நட்சத்திரங்களைக் கொண்டுள்ளது. மேலும் இவ்வால்நட்சத்திரங்கள் அவற்றின் கலப்படமில்லாக் கலவையாக அப்பகுதியில் உள்ளன. எனவே, வால்நட்சத்திரங்களின் ஆராய்ச்சி வான இயலில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துள்ளது. நமது சூரிய குடும்பத்தின் பரிணாம வளர்ச்சியைப் பற்றி அறிந்து கொள்ள வால் நட்சத்திரங்களின் ஆராய்ச்சி மிகவும் முக்கியம் என்று கூறலாம்.

சூரியன், கோள்கள் மற்றும் அதன் துணைக்கோள்கள் உருவானபோது



விஞ்ஞானம் நம் நாட்டில் - பாலைவனத்தில் வீசிய பனிக்கட்டி போலவும், குருடனிடம் காட்டிய முத்துமாலை போலவும், செவிடனிடம் இசைக்கப்பட்ட சங்கீதம் போலவும் மதிப்பற்றிருக்கிறது; இந்நிலை மாற வேண்டும்.

— அறிஞர் அண்ணா

எஞ்சிய பொருள்கள் சேர்ந்து ஓர்ட் மேகம் உருவாயிற்று. இம்மேகமானது வால்நட்சத்திரத்தின் களஞ்சியமாக உள்ளது. ஆனால், சூரியனின் ஈர்ப்புச் சக்தியை மீறி எந்தக் காரணத்தினால் வால்நட்சத்திரங்கள் ஓர்ட் மேகத்திலிருந்து வெளியேறுகின்றன? ஆகாய கங்கையின் மையத்தினை சூரியன் சுற்றிவரும்போது சில சமயங்களில் மற்ற நட்சத்திரங்களுக்கு அருகே வர நேரிடுகிறது. ஆனால் ஈர்ப்புச் சக்தியின் விளைவு வேறுபட்டு ஓர்ட் மேகத்திலிருந்து வால் நட்சத்திரங்கள் பல்வேறு திசைகளில் சிதறுகின்றன. இச் சிதறுகள் அவற்றின் பாதைகளை மாற்றி அமைக்கின்றன. சூரியனுக்கு அருகில் உள்ள மூலக்கூறுகளின் ஈர்ப்பு விசையினால் வால்நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தின் உட்பகுதிக்கு நுழைகின்றன. நட்சத்திரங்கள் இடைவெளியில் உள்ள மூலக்கூறுகளின் கூட்டங்களுக்கிடையே சூரியன் செல்லும்போதெல்லாம் இத்தகைய நிகழ்ச்சி நடக்கிறது. ஓர்ட் மேகம் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தூரத்திலிருந்து தொடர்ந்து ஏறக்குறைய குபேரன்போல் சுற்றுப் பாதை வரை பரவியுள்ளதாகக் கருதப்படுகிறது. இது உண்மையெனில் ஓர்ட் மேகமானது அளவில்லா வால்நட்சத்திரங்களைக் கொண்டிருக்க வேண்டும்.

வால் நட்சத்திரத்தின் அமைப்பு எவ்வாறு உள்ளது?

தலைப்பகுதி, மையக்கரு, இரண்டு வால்கள் என மூன்று முக்கிய பாகங்களை நட்சத்திரம் கொண்டுள்ளது. அண்மைக்கால ஆய்வுகளிலிருந்து வால் நட்சத்திரங்கள் நீர்வாயு மேகங்களைக் கொண்டுள்ளது என அறியப்படுகிறது.

நட்சத்திரங்களின் மையக்கரு பொதுவாக சில கிலோமீட்டர் குறுக்களவு உடையது. நீண்ட தூரத்தில் சூரியக் குடும்பத்தைத் தொடர்ந்து இருக்கும் மிகக் குளிர்ச்சியான நட்சத்திரத்தின் கருவைச் சக்தி வாய்ந்த தொலைநோக்கியால் பார்த்தாலும் காண முடியாத மறைபொருளாக உள்ளது. எனினும் நட்சத்திரத்தின் மையக்கரு சூரியனை நெருங்கும் சமயம் சூரிய கதிர்களால் அவை வெப்பத்தைப் பெறுகின்றன. அதன் விளைவாக நட்சத்திரத்தின் தலைப்பகுதி மற்றும் வால்கள் உருவாகின்றன. தலைப்பகுதி 10 இலட்சம் கிலோமீட்டர் குறுக்களவு உடையது. மேலும் மைய உட்கருவும் வெளிக்கருவும் இணைந்து நட்சத்திரத்தின் தலைப்பகுதி உருவாகிறது. சூரியனுக்கு மிக அருகில் நட்சத்திரம் வரும்போது அதன் வால் பகுதியின் நீளம் அதிகரிக்கும்.

வால்நட்சத்திரம் சூரியனை நெருங்கும் போதும் அதனை விட்டு விலகிச் செல்லும் போதும் அதன் வால் பகுதியானது சூரியனுக்கு நேர் எதிராகக் காணப்படுகிறது. 837-ஆம் ஆண்டு தோன்றிய ஹாலி நட்சத்திரத்தினை ஆராய்ந்த சீன வானியல் நிபுணர்கள் இப்பண்பினை முதன்முறையாகக் கண்டறிந்தனர். ஒரு நட்சத்திரம் மிக அருகில் வருவதைப் பொறுத்து அது ஒன்று, இரண்டு வால்களுடனோ அல்லது வால்கள் இல்லாமலோ இருக்கலாம். இந்நட்சத்திரங்களின் வால்கள் தூசு மற்றும் அயனிகள் என இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வால்கள் விண்வெளியில் வியக்கத்தக்க வகையில் துடைப்பான்களைப்போல் தோன்றுகின்றன.

1843-ஆம் ஆண்டு தோன்றிய பெரிய நட்சத்திரத்தின் வால் பகுதியின் நீம் 33 கோடி கிலோ மீட்டர் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளது. வால் நட்சத்திரத்தின் தலைப்பகுதியைச் சுற்றி ஹைட்ரஜன் மேகம் அல்லது ஹாலோ சுமார் 10 இலட்சம் கிலோ மீட்டர் வரை சூழ்ந்து காணப்படுகிறது. பூமியைப் போன்று 100 மடங்கிற்கும் அதிக அளவில் இப்பரப்பு தென்படுகிறது. சூரிய ஒளி இந்த மேகத்தை ஒளிரச் செய்கிறது. இத்தன்மையானது விண்வெளிக் கப்பல்கள் உதவியால் நிறமாலையில் உள்ள புற- ஊதாக் கதிர்களை ஆராய்வதன் மூலம் கண்டு பிடிக்கப் படுகிறது. பென்னட் மற்றும் வெண்ட் வால்நட்சத்திரங்களைப் பெருமளவில் ஹைட்ரஜன் மேகங்கள் சூழ்ந்துள்ளன. பென்னட் வால்நட்சத்திரத்தைச் சுற்றிலும் சுமார் 100 இலட்சம் கிலோமீட்டர் வரை ஹைட்ரஜன் மேகம் சூழ்ந்து காணப் படுகிறது.

வால்நட்சத்திரம் எக் கலவைகளால் ஆனது?

பூமியிலிருந்து மேற்கொண்ட நிறமாலை ஆராய்ச்சி மூலம் இக்கலவைகளைப் பற்றிய விவரங்கள் நமக்குத் தெளிவாக உள்ளன. 1985/86-ஆம் ஆண்டுகளில் ஹாலி வால்நட்சத்திரம் தோன்றியபோது சில விண்வெளிக் கப்பல்கள் அனுப்பப்பட்டு வால்நட்சத்திரத்தின் பகுதிகள் மிக அருகிலிருந்து ஆராயப்பட்டன. இவற்றுள் ஜப்பானியரின் சூசேய் சாகிகாகேயும், ருஷ்யாவின் வேகா-1இ வேகா-2 மற்றும் ஐரோப்பிய விண்வெளிக் கூட்டமைப்பின் கியேட்டோவும் அடங்கும். அமெரிக்க விண்வெளிக் கப்பல் எக்ஸ்புலோரர் ஹாலி வால் நட்சத்திரத்தைத் தொலைவிலிருந்து ஆராய்ந்தது. விப்பல் என்ற அமெரிக்க வானியல் நிபுணர் 'Dirty Ice Balls' என வால்நட்சத்திரங்களை வர்ணித்துள்ளார். வால்நட்சத்திரங்கள் சிறிய கற்கள், உறைநிலை மீதேன், அம்மோனியா, கரியமில வாயு, நீர் முதலியவற்றை உள்ளடக்கி உள்ளது என அவர் குறிப்பிடுகின்றார்.

ஹாலி வால்நட்சத்திரத்தின் உட்கருவின் நெருங்கிய தோற்றத்தை சுமார் 1,703 கிலோமீட்டர் தொலைவில் இருந்து பல நிறப் புகைப்படக் கருவி படம் பிடித்துள்ளது. இதன் உட்கருவின் குறுக்களவு சுமார் 10 கிலோமீட்டர். மற்றும் அதன் நிறை சுமார் 8,000 கோடி டன் என கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உட்கருவானது மிகவும் இருண்டு காணப் படுகிறது. இதன் ஒளி பிரதிபலிப்புத் திறன் 2 முதல் 4 சதவீதம். 84 சதவீதம் உறைந்த நிலையில் உள்ள நீர், பால் மல்டிஹைட் கரியமில வாயு, சிறிதளவு ஹைட்ரஜன் மற்றும் கார்பன் மோனாக்சைடால் இது ஆக்கப்பட்டுள்ளது.

மிக ஒளி பொருந்திய நன்கு அறிமுகமான வான்பொருட்களுள் ஹாலி வால்நட்சத்திரமும் ஒன்று. கி.மு.240-ஆம் ஆண்டிலிருந்தே இதன் இயக்கங்கள் கவனிக்கப்பட்டுப் பதிவு செய்யப்பட்டுள்ளன. எட்மண்ட ஹாலி என்ற ஆங்கில வானியல் அறிஞர் வால்நட்சத்திரப் பாதைகளைப் பற்றி விரிவான ஆய்வுகளை மேற்கொண்டார். 1531, 1607 மற்றும் அவர் கவனித்த 1682-ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட வால் நட்சத்திரங்கள் அனைத்தும் ஒன்றே எனக் கண்டுபிடித்தார். 1705-ஆம் ஆண்டு இக்கருத்தினை அவர் வெளியிட்டார். மீண்டும் 1758-ஆம் ஆண்டு இந்த வால்நட்சத்திரம் தோன்றும் என்றும் அது மீண்டும் வருவதற்கு முன்னரே குறிப்பிட்டிருந்தார். அவர் மறைந்து 16 ஆண்டுகள் சென்ற பின்பு அவர் குறிப்பிட்டபடியே 1758-ஆம் ஆண்டு அந்த வால்நட்சத்திரம் மறுபடியும் தோன்றியது. எனவே, அவரது நினைவாக அந்த வால்நட்சத்திரத்திற்கு ஹாலி எனப் பெயர் சூட்டப்பட்டது. சூரியனைச் சுற்றி வர இது எடுத்துக் கொள்ளும் சராசரி கால அளவு 76 ஆண்டுகள், குறுகிய கால அளவு 74.4 ஆண்டுகள், நீண்ட கால அளவு 79.2 ஆண்டுகள் எனப் பதிவு செய்யப்பட்டுள்ளன.



• கல்வி வேறு, படிப்பு வேறு. கல்வியானது புத்தி, ஆத்மா சிறப்புப் பெறச் சீர்பட்டு நிற்பது. வெறும் எழுதப் படிக்கத் தெரிந்திருப்பது மட்டுமே அதைத் தந்துவிடாது; தண்ணீர் மட்டும் ஆகாரமாகிவிடாது! ஆனாலும் அவசியமானதுதான். ஆயினும் அதைவிடவும் உணவு முக்கியமானது. அதைப்போலவே எழுதப் படிக்கத் தெரிவது மட்டும் கல்வியைப் பெற்றதாகாது.

—மூதறிஞர் ராஜாஜி

1910-ஆம் ஆண்டு தோன்றிய ஹாலி வால்நட்சத்திரம் மிகுந்த ஒளியுடனும் நீண்ட வாலுடனும் காணப்பட்டது. அப்போது பூமியானது இந்த வால் நட்சத்திரத்தின் வால் பகுதியைக் கடந்து சென்றது. மீண்டும் 1986-ஆம் ஆண்டு இவ் வால்நட்சத்திரம் தோன்றியது. ஆனால் இம்முறை 1910-ஆம் ஆண்டைப் போன்று ஒளியுடன் காட்சியளிக்கவில்லை. ஏனெனில், சூரியனுக்கு வெகு அண்மையில் செல்லும்போது ஹாலி, வால்நட்சத்திரமும், பூமியும் சூரியனுக்கு இருபுறங்களில் இருந்தன. 2061-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரம் தோன்றும், அப்போது அது மிக ஒளியுடன் காணப் படும்.

ஹாலி வால்நட்சத்திரத்தைப் போன்று சில நூறு ஆண்டு சுற்றுப்பாதைக்காலங்கள் உள்ளவைகள் குறுகியகால வரையுடைய வால்நட்சத்திரங்கள் எனப்படும். நமக்கு அறிமுகமான என்கே என்ற வால் நட்சத்திரம் குறைந்த கால வரையுடையது. இதுவரை அது 50 முறைக்கும் அதிகமாக சூரியனைச் சுற்றி வந்துள்ளதை நிபுணர்கள் கவனித்துக் குறிப்பிட்டுள்ளனர். ஒவ்வொரு முறையும் சூரியனைச் சுற்றிவரும் போது வால்நட்சத்திரம் அதன் பொருட்களில் பெரும் பகுதியை இழந்துவிடுகிறது. வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு மிக அருகில் வரும் நேரத்தில் அதன் உட்கரு தொடர்ந்து அரிக்கப்பட்டுக் கொண்டு வரும்.

200 ஆண்டுக்கும் மேற்பட்ட சுற்றுப் பாதைக் காலங்கள் கொண்டவை நீண்ட கால வால்நட்சத்திரங்கள் எனப்படும். குறித்த காலத்தில் தோன்றும் வால் நட்சத்திரங்களின் சுற்றுப்பாதை பொதுவாக நீள்வட்டமாக அதாவது Ellipse வடிவமாக இருக்கும். சூரியனுக்கு அருகில் வானத்தில் அழகாக ஒரே ஒரு முறை மட்டும் தோன்றி மறையும் வால்நட்சத்திரங்களின் பாதையானது திறந்த பரவளையமாகவோ, அதிபரவளையமாகவோ இருக்கும். அவை மீண்டும் சூரியன் அருகில் வருவதே இல்லை.

பல்வேறு வகை வால்நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தினுள் நுழைகின்றன. ஹோவார்ட்-கூமன்-மிஷால் என்னும் வால்நட்சத்திரம் 1979-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் சூரியன் .0 மீது மோதியது. 1770-இல் லெக்ஸெல் என்ற வால்நட்சத்திரம் பூமிக்கு 12 இலட்சம் கிலோமீட்டர் அருகில் நெருங்கி வந்தது. 1846-இல் பைலா என்ற வால் நட்சத்திரம் மீண்டும் தோன்றிச் சூரியனை நெருங்கும்போது இரண்டாகப் பிளவு பட்டது.

வால்நட்சத்திரங்களைப் பற்றிய பல உண்மைகள் தற்போது நமக்குத் தெரிய வந்துள்ளன. புதிய வால்நட்சத்திரத்தைக் கண்டுபிடிப்பவர்கள் உலக அரங்கில் புகழ்பெறுகின்றனர். எனவே, வானியலில் ஆர்வமுடையவர்கள் புதியனவற்றைக் காண வானத்தை ஊடுருவி ஆராய்ந்து வருகின்றனர். புதிய வால் நட்சத்திரத்தைக் கண்டுபிடிக்கத் தொலைநோக்கிகள் மூலம் சில நூறு அல்லது ஆயிரம் மணி நேரங்கள் வானத்தை அதிக கவனத்துடன் ஆராய வேண்டியதாக இருக்கும். சில வேளைகளில் புதிய வால்நட்சத்திரத்தைக் காணாமலும் போக நேரிடலாம். வானத்தை ஆய்ந்து அறியும் இப்பயிற்சியானது இரவு வானத்தைப் பற்றிய ஆழ்ந்த அறிவை நமக்கு அளித்து நுட்பமான கவனிப்பாளராக நம்மை மாற்றுகிறது.

இந்த ஆய்வின் நோக்கம் நட்சத்திரப் பட்டியலில் இல்லாத ஒரு புதிய வால்

பொருளைக் கண்டறிவதே. இத்தகைய ஆய்வின்போது குறித்த காலத்தில் தோன்றும் வால்நட்சத்திரங்களைக் கவனத்தில் கொண்டு அவற்றை நீக்கிவிட வேண்டும். வழக்கமாக வால்நட்சத்திரங்கள் சூரியனுக்கு வெகு தொலைவில் தோன்றும்போதுதான் கண்டுபிடிக்கப்படுகின்றன. புதிய வால்நட்சத்திரத்தின் தோற்றத்தை இரவு வானத்தில் சில குறிப்பிட்ட பகுதிகளில் கால வரையுடன் எடுக்கப்பட்ட புகைப்படங்களிலிருந்து தெரிந்து கொள்ள வாய்ப்பு உண்டு.

புதிய ஒரு வால்நட்சத்திரம் தோன்றும்போது, அதைப் பலரும் கண்டு அறிவித்திருக்கலாம். ஆனால், அப்படி அறிவிப்பவர்களில் முதல் மூவரின் பெயரால்லேயே மட்டும் அது அழைக்கப்படும். உதாரணமாக, பாப்பு-பாக்-நியுகிர்க் (Bappu-Bok-Newkirke) என்ற வால்நட்சத்திரம் அதனைக் கண்டுபிடித்தவர்களின் பெயராலேயே அழைக்கப்படுகிறது. இம் மூவரில் பாப்பு என்று குறிப்பிடப் பட்டவர் நம் நாட்டைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் எம்.கே. வைனுபாப்பு (Dr. M.K. Vainu Bappu) ஆவார். மேலும் விண்வெளிக்கலம் சம்பந்தப்பட்ட பெயராலும் வால்நட்சத்திரங்கள் அழைக்கப்படுகின்றன. இதற்கு ஓர் உதாரணம் ஈராஸ்-அராக்கி-அல்காக் (IRAS-Araki-Alcock) என்ற வால் நட்சத்திரமாகும். இதில் IRAS என்றால் INFRARED ASTRONOMICAL SATELLITE என்பதாகும்.

ஒரு குறிப்பிட்ட ஆண்டில் கண்டு பிடிக்கப்படும் வால்நட்சத்திரம் உதாரணமாக 1990-ஆம் ஆண்டில் கண்டு பிடிக்கப்பட்ட வால்நட்சத்திரம் 1990 என்று குறிப்பிடப்படும், அடையாள எழுத்து, அவ்வால்நட்சத்திரத்திரம் குறிப்பிட்ட காலங்களில் தோன்றும் என்பதை உணர்த்தும். உதாரணமாக, பி. ஹாலி மற்றும் பி.என்கே (P/HALLEY'S and P/ENKE) என்பவை குறித்த காலங்களில் தோன்றும் வால்நட்சத்திரங்கள். வால் நட்சத்திரங்கள் பூமியில் உயிரினங்கள் தோன்றுவதற்கு எந்த வகையிலாவது தொடர்புடையனவா? என்ற வினாவிற்கு பூமி வளர்ச்சியின் தொடக்க நிலைகளில் கோடிக்கணக்கான வால்நட்சத்திரங்கள் பூமியுடன் மோதி, கடல்கள் உருவாவதற்குக் காரணமாக இருந்தன என்று விஞ்ஞானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இப்போதும்கூட, பூமியில் நீர் இருப்பு உயருவதற்கு வால்நட்சத்திரங்கள் தான் காரணம் என்று ஐயோவா (IOWA) பல்கலைக்கழகத்தைச் சார்ந்த விஞ்ஞானி டாக்டர் லூயிஸ் ஃபிராங்க் (Dr. Louis Frank) ஆராய்ந்து கூறியுள்ளார். பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட நீர்கொண்ட வால்நட்சத்திரங்கள் பூமியின் வளிமண்டலத்தை ஒவ்வோர் ஆண்டும் மோதுவதால் நம் வளிமண்டலத்தில் நீர்க்கலவை முதலில் ஏற்பட்டு பிறகு தட்பவெட்ப நிலைக்குத் தக்கவாறு கடல் நீருடன் சேருகின்றது.

ஒவ்வோர் ஆண்டும் 10.14 அதாவது கோடி கோடி கிராம் நீர் வால்நட்சத்திரங்களினால் பூமிக்குக் கிடைக்கிறது. இதனால் ஓர் ஆண்டுக் காலத்தில், பூமியின் மேற்பரப்பில் சராசரியாக 2.5 செ.மீ. அளவு நீர் மட்டம் உயரக்கூடும் என்றும் அவர் கூறியுள்ளார். இவ்வாறு 400 கோடி ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து வால்நட்சத்திரங்களில்தான் பூமிக்குக் கிடைத்த நீரைக் கணக்கிடுகையில் வால் நட்சத்திரங்கள்தான் பெரும்பாலும் பூமியில் கடல் தோன்றுவதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. இந்தக் கோட்பாடு வானியல் நிபுணர்களின் இப்போதைய கண்டு பிடிப்புகளுக்கு ஆதரவாக உள்ளது. பூமியில் உயிரினம் வளர்ச்சியடைய உதவியாக உள்ள மூலக்கூறுகளை வால் நட்சத்திரங்கள் விதைத்திருக்கலாம்.

வால்நட்சத்திரங்களும் பிற கோள்களைப் போலவே சூரிய ஒளியைப் பிரதிபலிக்கும் தன்மை உடையது. எனவே, சூரியனுக்கு எவ்வளவு அருகில் வால்நட்சத்திரம் உள்ளதோ அதற்கு ஏற்றவாறு அதிகமாக ஒளியைப் பிரதிபலிக்கும். மேலும் வால்நட்சத்திரங்களில் உள்ள மூலக்கூறுகள் ஒளியை உமிழும் தன்மையுடையவை. அதாவது வால் நட்சத்திரத்தில் உள்ள வாயு மூலக்கூறுகள் ஒரு குறிப்பிட்ட அலை நீளத்தில் சூரிய ஒளியைக் கிரகித்துக் கொண்டு வேறு அலை நீளத்தில் வெளிப்படுத்துகின்றன.

வால்நட்சத்திரம் உமிழ்ந்த ஒளிநிற மாலையை ஆராய்ந்தபோது, குறிப்பிட்ட வாயுக்களான மீதேன், கார்பன் மோனாக்சைடு, சயனேஜின் மூலக்கூறுகளினால் ஒளி வெளியேற்றப்படுகின்றது எனத் தெரிய வருகிறது. 1910-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரம் தோன்றிய காலத்தில் பூமியானது அதன் வால் பகுதியைக் கடந்து சென்றது. இவ்வால் பகுதியில் உள்ள விஷத்தால் கேடு நேரிடுமோ என்ற திகில் மக்களுக்கு ஏற்பட்டது. இருப்பினும் வால் பகுதியில் உள்ள விஷ வாயுவின் பருமளவு மிகவும் குறைவாக இருந்ததால் தீங்கு ஏதும் நிகழவில்லை.

ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக ஆறு புதிய வால்நட்சத்திரங்கள் கண்டு பிடிக்கப்படுகின்றன. ஒகாசகி-லெவி-ருடன்கோ, ஆஸ்டின் மற்றும் லெவி என அழைக்கப்படும் வால்நட்சத்திரங்கள் சமீப காலத்தில் தொடர்ச்சியாகத் தோன்றின. நடுத்தர அளவு தொலைநோக்கிகள் உதவியால் முன்னர் குறிப்பிட்ட மூன்று வால்நட்சத்திரங்களைக் காண முடிந்ததால், பொதுவாக வால்நட்சத்திரங்களைப் பற்றி ஆராய்வதில் புதியதோர் ஆர்வம் அதிக அளவில் தற்போது ஏற்பட்டுள்ளது. பண்டைக் காலத்தில், பின்னால் நேரிடப் போகின்ற தீய நிகழ்ச்சிகளைக் குறிக்கும் முன்னெச்சரிக்கையாக வால்நட்சத்திரங்கள் கருதப்பட்டு வந்தன. ஆனால், இந்நாட்களிலோ வான் பொருட்களான வால்நட்சத்திரங்கள் தேடி ஆராயப்படுகின்றன. 1618-ஆம் ஆண்டு தான் முதன் முதலாக வால்நட்சத்திரம் தொலைநோக்கியின் உதவியால் கவனிக்கப் பட்டது. 1910-ஆம் ஆண்டு ஹாலி வால்நட்சத்திரத்தின் புகைப்படங்கள் பலமுறை எடுக்கப்பட்டன.

1986-ஆம் ஆண்டு இவ்வால் நட்சத்திரம் தோன்றியபோது இதனைப் பற்றி விண்வெளி ஆய்வுகள் மிகப் பெருமளவில் மேற்கொள்ளப்பட்டன.

வால்நட்சத்திரங்களின் முக்கியத் தன்மைகளைப் பற்றி அறிந்து கொண்ட நாம், சூரியக் குடும்பத்தைச் சார்ந்த மற்ற சில உறுப்புகளான, கோள்திரள்கள், விண்கற்கள், எரி நட்சத்திரங்கள் முதலியவற்றின் சிறப்பு நிலைகளைப் பற்றித் தெரிந்து கொள்வோமா?

செவ்வாய், வியாழன் கோள்களின் சுற்றுப்பாதைகளுக்கு இடையே கோள்திரள்கள் காணப்படுகின்றன. இவை சூரியனைச் சுற்றி வருகின்றன. இக்கோள் திரள்கள் சில சென்டிமீட்டரிலிருந்து சில நூறு கிலோமீட்டர்கள் அளவுடையவை. 50,000-க்கும் அதிகமாக எண்ணிக்கையுடைய கோள் திரள்களில் சுமார் 3,000 கோள்திரள்களின் சுற்றுப்பாதை இயக்கங்கள் கணக்கிடப் பட்டுள்ளன. கோள்திரள்களில் மிகவும் பெரியது சிரஸ். இதன் விட்டம் சுமார் 1,000 கிலோமீட்டர்.

இக்கோள்திரள் 1801-ஆம் ஆண்டு கண்டறியப்பட்டது. சிரஸ் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சில ஆண்டுகளுக்குள்

## குடகனாறு நீர்த்தேக்கத் திட்டம்

குடகனாறு நீர்த்தேக்கத் திட்டத்தில் 10 அரை வட்டக் கதவுகள் மற்றும் அக்கதவுகளை இயக்குவதற்கான இயந்திரங்கள் தயாரித்துப் பொருத்தும் பணியைத் துங்கபத்ரா ஸ்டீல் தயாரிப்பு நிறுவனத்திடம் ரூபாய் 2,39,87,000 மொத்த மதிப்பீட்டிற்கு (இதர வரிகள் நீங்கலாக) ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம் மைய அரசு மற்றும் ஆந்திர-கர்னாடக அரசுகளின் கூட்டு நிறுவனமாகும். இப்பணியை 1991-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களுக்குள் முடிக்கப்பட வேண்டுமென இந்நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.



# எரிநட்சத்திரங்கள் எப்படிப்பட்டவை?

[illegible] அவற்றினை [illegible] அக்காலத்தில் [illegible] தோன்றிய பொழுதெல்லாம் [illegible] போர், வறுமை, நோய், [illegible] வரும் என்பதற்கான முன் [illegible] மக்கள் கருதினர்.

வால் நட்சத்திரங்கள் [illegible] வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்திற்கும் அப்பாற்பட்ட மற்ற நட்சத்திரக் கூட்டங்களிலிருந்து வருவதாக முற்காலத்தில் மக்கள் நம்பினர். தம் பாதையை விட்டுத் தவறிய வால் நட்சத்திரங்களில் சில சூரியனை நோக்கி வரும் போது வியாழன், சனி போன்ற பெரிய கோள்களின் ஈர்ப்புச் சக்தியால் இழுக்கப்பட்டு சூரியனைப் பொதுவாக நீள்வட்டப் பாதையில் சுற்றி வரத் தொடங்குகின்றன. [illegible] வானியல் [illegible] திரங்களின் [illegible] அவற்றினை [illegible] வால் நட்சத்திரங்கள் சூரியனிலிருந்து ஒரு இலட்சம் வான இயல் அலகு தொலைவில் இருப்பதாக [illegible] அலகு [illegible] 15 கோடி கிலோமீட்டர் [illegible]

[illegible]

1986-ஆம் ஆண்டு மீண்டும் தோன்றியபோது ஹாலி வால் நட்சத்திரம் அதிக [illegible] படவில்லை. ஏனெனில், அது சூரியனுக்கு வெகு அருகாமையில் செல்லும்போது ஹாலி வால் நட்சத்திரமும் பூமியும் சூரியனுக்கு இருபுறங்களிலும் இருந்தன. 1986-ஆம் ஆண்டு சில விண்வெளிக் கப்பல்கள் அனுப்பப்பட்டு ஹாலி வால் நட்சத்திரத்தின் பகுதிகள் மிக அருகிலிருந்து ஆராயப் பட்டன. செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களின் சுற்றுப் பாதைகளுக்கு இடையே கோள் திரள்கள் காணப்படுகின்றன. 50,000-க்கும் அதிகமான எண்ணிக்கையுடைய இக்கோள்திரள்களில் சுமார் 3,000 கோள்திரள்களின் சுற்றுப் பாதை இயக்கங்கள் கணக்கிடப்பட்டுள்ளன. சிரஸ் கோள்திரள் தான் முதன்முதலில் 1801-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

சமீப காலங்களில் காணப்பட்ட ஒகாசகி-லெவி-ருடன்கோ, ஆஸ்டின் மற்றும் லெவி வால் நட்சத்திரங்களைப் பற்றியும் இக்கட்டுரை விளக்குகிறது. எரிநட்சத்திரங்களைப் பற்றிய விளக்கத்துடன் இக்கட்டுரை முடிவடைகிறது.

எரிநட்சத்திரங்கள் மிகச் சிறியவை. இவை வளிமண்டலத்தில் நுழைந்தவுடன் எரிந்து விடுபவை. [illegible]

பல்லாஸ் (Pallas) ஜூனோ (Juno) மற்றும் வெஸ்டா எனும் கோள்திரள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. கோள்திரள்கள் சிறு கோள்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. செவ்வாய் மற்றும் வியாழன் கோள்களுக்கு இடைப்பட்ட சுற்றுப் பாதையில் இதைப்போன்று ஆயிரக்கணக்கான சிறு பொருட்கள் சிதறிக் கிடப்பதற்கான சான்றுகள் காலம் செல்லச் செல்லக் கிடைத்தன.

விண்வெளியிலிருந்து வரும் கற்களுள் பூமியின் வளிமண்டலத்தை அடைந்தவுடன் எரிந்து விழுகின்ற பொருட்களையே நாம் எரி நட்சத்திரங்கள் என்கிறோம். விண்ணிலிருந்து வரும் பொருட்களுள் அவற்றின் மேற்பரப்பு மட்டும் எரிந்து, எஞ்சிய பகுதி எரியாமல், பூமியில் வந்து விழுபவற்றை விண்கற்கள் என்கிறோம்.

எரிநட்சத்திரங்கள் பூமியின் மேற்பரப்பினை வந்து அடைவதில்லை. இவை வளி மண்டலத்தினுள் நுழையும்போது மட்டுமே பார்வையில் தென்படும். இவை அதிகபட்சமாக மணிக்கு 72 கிலோ மீட்டர் வேகத்தில் வளிமண்டலத்தின் மீது மோதுவதால் ஏற்படும் உராய்வின் காரணமாகப் பூமியை அடைவதற்கு முன்பாகவே, முழுமையாக எரிந்து விடுகின்றன. இவ்வாறு எரிவதால், இரவு வானத்தில் திடீரென ஒளிக்கற்றையை நாம் காண்கிறோம்.

எரிநட்சத்திரங்கள் குறிப்பிட்ட காலத்திலோ அல்லது எப்பொழுது வேண்டுமானாலுமோ தோன்றலாம். எந்தத் திசையிலிருந்தும் எந்நேரத்திலும் தோன்றுவது ஸ்போராடிக் (Sporadic) எரிநட்சத்திரங்கள் எனப்படும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் வளி மண்டலத்தினுள் நுழையும் எரி நட்சத்திரத் தொகுப்புகள் நட்சத்திரங்கள். விட்டுச் சென்ற எஞ்சிய பகுதிகளாகும்.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில் வீழ்கின்ற ஓரியானிட்ஸ் எரி நட்சத்திரக் கூட்டம், ஹாலி நட்சத்திரத்தின் எஞ்சிய பகுதியுடன் தொடர்புடையது. டெம்பிள்டட்டில் என்ற நட்சத்திரத்தின் எஞ்சிய பகுதியே, நவம்பரில் தோன்றும் புகழ்பெற்ற லியோனிட்

# கோளரங்கத்தில் புதிய நிகழ்ச்சி

சென்னை மாநகரில், பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைந்துள்ள பி.எம். பிர்லா கோளரங்கத்தில் 28.2.1991 அன்று ஆறாவது(வால் நட்சத்திரங்கள் சூரிய குடும்பத்தின் மற்ற சிறு பொருட்களான கோள்திரள்கள், எரி நட்சத்திரங்கள், விண்கற்கள் பற்றிய) நிகழ்ச்சியின் தொடக்க விழா நடைபெற்றது. தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்பக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திரு பி. பெரியசாமி வரவேற்றார். அறிவியல் தொழில நுட்பத் துறையின் சிறப்புப் பணி அலுவலர் திரு ஆர்.சங்கர நாராயணன் பங்கேற்றார்.

இந்த நிகழ்ச்சிகள் ஆங்கிலம் மற்றும் தமிழில் நாற்பது நிமிட நேரம் காண்பிக்கப்பட்டன. இப்பொழுது வால் நட்சத்திரங்கள் எனும் நிகழ்ச்சி புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளது.

இந்த பிர்லா கோளரங்கத்தில், வார நாட்களில் 4 நிகழ்ச்சிகளும் (தமிழில் இரண்டு ; ஆங்கிலத்தில் இரண்டு) விடுமுறை நாட்களில் ஆறு நிகழ்ச்சிகளும் (தமிழில் மூன்று; ஆங்கிலத்தில் மூன்று) நடைபெறுகின்றன. இங்கு வருகை தருபவர்களில் 60 சதவீதத்தினர் மாணவர்கள் ஆவார்கள். வானியல் பற்றிய நற்சான்றிதழ் வழங்கும் வகுப்புகள் நடைபெறுகின்றன. இவ்வகுப்பில் சுமார் 25 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். மூன்று மாதப் பயிற்சி ஆறு மாதப் பயிற்சி என இருவகைப் பயிற்சிகள் இங்கு நடத்தப்படுகின்றன. இதுதவிர புகைப்படக் கண்காட்சிகளும், புத்தகக் கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் வானவியல் சங்கத்தின் சார்பில் இரவு வான் கவனிப்பு முகாம் 7 மணி முதல் 8 மணி வரை நடைபெறுகிறது. இந்தப் பெரியார் அறிவியல் தொழில் நுட்ப மையம் தொலைக்காட்சியில் இதுவரை எட்டு நிகழ்ச்சிகளை வழங்கியுள்ளது.

இது தவிர, நான்கு அறிவியல் அரங்குகள் குழந்தைகள்- பெரியவர்களின் அறிவியல் அறிவைத் தூண்டும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன. குழந்தைகள் அங்குள்ள பொருள்களைத் தொட்டு இயக்கித் தங்கள் அறிவியல் அறிவைப் பெருக்கிக் கொள்ளலாம். ரஷியப் பெண் வானவெளி வீரர் வேலண்டினா இந்தக் கோளரங்கில் ஒருநாள் தங்கி அனைவரது கேள்விகளுக்கும் பதிலளித்தது இந்தக் கோளரங்கின் பொன்னாளாகக் கருதப்படுகிறது.

இவை தவிர சிறிய கோளரங்கம் தற்பொழுது சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டு மிகப் பெரிய அளவில் மக்களைக் கவர்ந்து வருகிறது. இதுபோன்ற ஐந்து சிறிய கோளரங்குகளைத் திரு பி.எம். பிர்லா, இந்தக் கோளரங்கிற்கு நன்கொடையாக வழங்குகிறார். விரைவில், திருச்சிராப்பள்ளியில் இதுபோன்ற சிறிய கோளரங்கத்தை நிறுவும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளது.

இங்கு நடைபெறும் அனைத்து நிகழ்ச்சிகளும் அரங்கு நிறைந்த காட்சிகளாகவே நடந்து வருகின்றன, அறிவியல் அறிவை- குறிப்பாக வானவியல் அறிவை வளர்க்க மூன்றாவது தலைமுறை கம்ப்யூட்டர் முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள இக்கோளரங்கம், அனைத்து மக்களையும் ஈர்த்து இன்றைய தினம் தமிழகத் தலைநகரின் மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாகவும் விளங்குகிறது. குழந்தைகளுக்கும் பிளஸ்-2 வரை படிக்கும் மாணவர்களுக்கும் ரூ.2-ம், பெரியவர்களுக்கு ரூ.5-ம் நுழைவுக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

வாரத்தில் திங்களன்று மட்டும், சென்னை- கோட்டூர்புரத்திலுள்ள இக்கோளரங்கத்திற்கு விடுமுறை நாளாகும்.

—என்.இளங்கோ



எரிநட்சத்திரக் கூட்டம் என்று நம்பப்படுகிறது. ஒவ்வொரு எரிநட்சத்திரக் கூட்டமும் வான வெளியில் ஒரு குறிப்பிட்ட இடத்திலிருந்து தொடங்கி, பூமியில் வந்து சேர்வது போலத் தோன்றுகிறது. ஓரியானிட், மற்றும் லியோனிட் எரி நட்சத்திரக் கூட்டங்கள் ஓரையான் மற்றும் லியோ நட்சத்திர மண்டலங்களில இருந்து வருவது போலத் தோன்றுகின்றன. ஒவ்வொரு நாளும் பூமியின் வளிமண்டத்தை வந்தடையும் எரிநட்சத்திரங்களின் எண்ணிக்கை சுமார் 7.5 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

பூமியின் தரைமட்டத்தை வந்தடையும் விண்கற்கள் எரிநட்சத்திரங்களைப் போலச் சிறியதாக இல்லாமல், அளவில் பெரியனவாக இருக்கும். இவற்றின் மேற்பகுதி மட்டுமே எரிந்து, எஞ்சிய பகுதி முழுமையாக எரியாமல் பூமியை வந்து சேர்கின்றன. விண்கற்கள் கிட்டத்தட்ட, கோள்திரள்களை ஒத்துக் காணப்படுகின்றன. அரிசோனா என்ற இடத்தில் விண்கல்லின் மோதலால் உருவான புகழ்பெற்ற பள்ளத்தாக்கின் விட்டம் 1265 மீட்டர் மற்றும் அதன் ஆழம் 175 மீட்டர் ஆகும். கற்கள், இரும்பு மற்றும் கல்-இரும்பு என்று மூன்றாக விண்கற்களை வகைப்படுத்தலாம். 10 டன் எடைக்கும், அதிகமாக உள்ள பெரும்பாலான விண்கற்கள் இரும்பு வகையைச் சார்ந்தவை. தென்மேற்கு ஆப்பிரிக்காவில் ஹோபா வெஸ்ட் என்ற இடத்தில் விழுந்த, விண்கல்லின் எடை 60 டன். இதுவே நமக்குத் தெரிந்தவரை அதிக எடை உடைய விண்கல்லாகும்.

அதிகாலை வானத்தில் சிரியஸ், பிராசியான், பெட்டல்ஜுஸ் ஆகிய மூன்று நட்சத்திரங்களால் ஆன குளிர் கால முக்கோணம் கீழ்த்திரையிலிருந்து மேலெழும்பி வந்துள்ளது. இம்மூன்று விண்மீன்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டிருப்பதால், இத்தகைய குளிர்கால முக்கோணம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. சிரியஸ் வெண்மை நிறத்தோடு ஒளிர்கிறது. பிராதியான் மஞ்சள் நிறத்தோடு காணப்படுகிறது. மற்றும் பெட்டல்ஜுஸ் சிகப்பு நிறத்தைப் பெற்று விளங்குகிறது. குளிர்கால ஓரையன் நட்சத்திர மண்டலம் எம்-42 என்ற நெபுலாவை உள்ளடக்கியுள்ளது. இந்த நெபுலாவிற்குள் புது நட்சத்திரங்கள் பிறக்கின்றன.

இந்த அதிகாலை நேரத்தில் சூரிய உதயத்திற்கு முன்னதாக, செவ்வானம் கீழ்த்திசையில் தோன்றுகிறது. சூரியன் அடிவானத்திற்கு 18 டிகிரிக்கு உள்ளாக இருக்கிறது. இந்தச் சமயத்தில் வான் பொருட்கள் அனைத்தும் மறையத் தொடங்குகின்றன. முதலில் மறைவது நட்சத்திரங்கள். அவற்றை அடுத்து கோள்களே.

# நல்லதங்காள் கதை

காமராசர் மாவட்டத் தலைநகரிலிருந்து 42 கி.மீ. தூரத்தில் உள்ளது, வத்திராயிருப்பு என்ற கிராமம். மேற்குத்தொடர்ச்சிமலையின் எழிலும், சுற்றிலும் தென்னை மரத்தோப்புகளும் நிறைந்த எழில் மிகு கிராமமாகக் காண்போரைக் கவரும் வண்ணம் அமைந்துள்ளது இது. அர்ச்சனாபுரத்திற்கு வடக்கேயும், கான்சாபுரத்திற்குக் கிழக்கேயும், வத்திராயிருப்புக்கு மேற்கிலும் அமைந்துள்ளதுதான் நாம் இங்கே குறிப்பிடும் நல்லதங்காள்கோயில்.

இதுபற்றிக் கர்ணபரம்பரைக் கதை ஒன்று உண்டு.

முன்னொரு காலத்தில், சந்திர குலத்தில் பிறந்த இராமலிங்க மகாராஜா என்பவர் மதுரையை ஆண்டு வந்தார். இவரது மனைவி பெயர் இந்திராணி, இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தன. மூத்தமகன் நல்லதம்பி, இளைய மகள் நல்லதங்காள், உரிய காலத்தில் காசிராஜனுக்கும் நல்லதங்காளுக்கும் திருமணம் நடைபெற்றது. இனிதே இல்லறம் துவங்கி, சிலகாலம் மகிழ்ச்சியுடன் இருந்த இவர்களுக்கு 7 குழந்தைகள் பிறக்கின்றன. செல்வச் செழிப்புடன், இருந்த இவர்கள் மழை பெய்யாத காரணத்தால், கடும் பஞ்சத்திற்கு ஆளாகிறார்கள். ஆகவே, தங்களிடம் இருந்த பொருட்கள் யாவற்றையும் விற்றுச் சாப்பிட்டு, வேறு வழியில்லாமல் உடன் பிறந்த அண்ணன் வீட்டிற்குத் தன் 7 குழந்தைகளுடன் தன்னந் தனியே செல்கிறாள் நல்லதங்காள். இவளுடைய அண்ணி மூலி அலங்காரி ஒரு கொடுமைக்காரி. சரிவர கவனிக்காததால் மனமொடிந்து சாவதற்குத் துணிந்து தன் குழந்தைகளை அழைத்துச் சென்று பாழும் கிணற்றில் வீசி, தானும் உயிர் விட்டாள் என்பது தான் நல்லதங்காளின் கதை.

இந்தக் கதையையொட்டிய பாடல் ஒன்று இந்த வட்டாரத்தில் வழங்கப்படுகிறது.


நல்லதங்காள் மனம் நொந்து காடு மலைகளைக் கடந்து மாடு மேய்க்கும் சிறுவர்களிடம் பாழுங் கிணறு எங்குள்ளது என்று கேட்கிறாள் என்று தொடங்குகிறது அந்தப் பாடல். இதோ, அது:

'மாடு மேய்க்கும் பிள்ளைகளா
மாட்டாஞ்சிறு தம்பியரே
ஆடுமேய்க்கும் பிள்ளைகளா
அறியாத பாலகரே
பாழுங் கிணறொன்று
காண்கிலையே யெந்தனுக்கு?'

—அதற்குச் சிறுவர்கள், கீழ்க் கண்டவாறு பதில் கூறுகிறார்கள்:

'அருகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ள
பாழ்கிணறு
கோவை படர்ந்திருக்கும்
கொடிதான பாழ்கிணறு
எதிரேயிருக்கு தம்மா ஏற்றமுள்ள
பாழ்கிணறு


நல்லதங்காளும் அவளுடைய ஏழு குழந்தைகளும் அக்கிணற்றில் விழுகிறார்களாம். அது குறித்து பாடல் வருமாறு:



நல்லதங்காள் கிணறு



நல்ல தங்காள் கோயில்



நல்லதங்காள் கதை கூறும் கல்வெட்டு.

'அப்போது நல்லதங்காள்
ளரிவையிளங் கொடியும்
மாளுகிறேனென்று சொல்லி
மலையேறித்' தெண்டனிட்டாள்
சத்திவலம் வந்து
தூரியனைத் தெண்டனிட்டாள்
தெண்டனிட்ட பிற்பாடு
தெரிவையிளங் கொடியும்
ஒவ்வொரு மக்களையும்
கங்கையிலே தள்ளிவிட்டாள்
பார்ப்பா ருடையுடுத்தி
பத்தினியாள் நல்லதங்காள்
தானுஞ் சலியாமல் தண்ணீரில்
போய் விழுந்தாள்!'

—இவ்வாறு செல்லுகிறது அந்தப் பாடல்.

நல்லதங்காளும் அவள் குழந்தைகளும் இறந்த கிணறு காமராசர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள அர்ச்சனாபுரத்தில்தான் உள்ளது என்று கூறப்படுகிறது. இப்பொழுது பாழடைந்து தூர்ந்து போய்க் காணப்படுகிறது. இந்தக் கிணற்றைப்பற்றி மேலப்பாளையம் திரு. கந்தன் அவர்களைக் கேட்ட போது "வேப்பிலை அய்யருக்குச் சொந்தமான நிலம் 1.5 ஏக்கர் கொண்டது; இவருடைய நிலத்தில் தான் இந்த கிணறு உள்ளது. இது ஒரு வித்தியாசமான கிணறு. இதில் கட்டப்பட்டுள்ள செங்கல், அளவில் பெரியது. இது போல வேறு எங்கும் கிடையாது'' என்று கூறினார்.

அர்ச்சனாபுரத்தின் கோயிலை நிர்வகிக்கும் திரு.சுந்தரம் என்பவரை அதுபற்றிக் கேட்டபோது, "நல்லதங்காளுக்கு ஒரு கோயிலும், குழந்தைகளுக்கு என்று ஒரு கோயிலும் அப்பகுதியில். கட்டப்பட்டுள்ளன. இது பழமையான கோயில். வாரத்தில் செவ்வாய், வெள்ளி ஆகிய இரண்டு நாட்களுக்கு அக்கோயிலில் பூஜை நடைபெறுகிறது. ஆடி மாதம் இவ்வூரில் உள்ளவர்கள் திருவிழா நடத்துகிறார்கள். மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை சவுராஷ்டிரத்தைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கான பக்தர்கள் பந்தலிட்டுப் பொங்கல் வைத்து இங்குவந்து வணங்கி செல்கிறார்கள்'' என்று தெரிவித்தார்.

இம்மாவட்டத்திலுள்ள கீழ் அர்ச்சனாபுரத்தில், நல்லதம்பி கோயில் ஒன்று உள்ளது. இங்கு விசேஷ நாட்களில் பூஜை நடைபெறுகிறது. மூலி அலங்காரியின் சிலை காண்சாபுரத்தில் வயல் வெளியில் இருக்கிறது. அவ்வூர் மக்கள் இந்தச் சிலையை ஏறெடுத்தும் பார்ப்பதில்லையாம்!

எஸ்.கே.மூர்த்தி
உதவி மக்கள் தொடர்பு
அலுவலர்(செய்தி)
காமராசர் மாவட்டம்

## பருவமழை தவறிய பகுதிகளில் குடிநாப பணிகள்

**பருவமழை தவறிய பகுதிகளில் குடிநீர்ப் பணிகளை நிறைவேற்ற ஏற்கெனவே அறிவித்ததற்கிணங்க, அரசு ரூ.10 கோடி அனுமதித்துள்ளது.**

வறட்சியால் பாதிக்கப்பட்ட தருமபுரி, சேலம், திண்டுக்கல்-காயிதேமில்லத், பெரியார், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை-சம்புவராயர், வடார்க்காடு அம்பேத்கர், இராமநாதபுரம், தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களில் குடிநீர்த் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இத்தொகையில், 1,500 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.5 கோடி செலவில் அமைக்கப்படும். லாரிகள் மூலம் குடிநீர் வழங்க ரூ.1 கோடி செலவிடப்படும். மீதமுள்ள ரூ.4 கோடி, புதிய திறந்த வெளிக் கிணறுகள் வெட்டுதல், கிணறுகளை



ஆழப்படுத்துதல், ஏற்கெனவே உள்ள ஆழ்துளைக் கிணறுகளைச் சுத்தப்படுத்துதல், தனி மின்வழித் தடம் அமைத்தல், பழுதான பம்புசெட்டுகளை மாற்றுதல் ஆகிய பணிகளுக்குச் செலவிடப்படும்.



## தொழிலாளர் மலிவு

## வீட்டுவசதித் திட்டம்

**தொ**ழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள், அவர்களுடைய பணியிடங்களுக்கருகில் பாங்கான இடங்களில் குறைந்த வாடகையில் வசிக்க இயலும் வகையில், தொழிலாளர்கள், பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் ஆகியோருக்கான தொழிலாளர் மலிவு வீட்டுவசதித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. பொதுத்துறை நிறுவனங்களான தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், சிறுதொழில் வளர்ச்சிக்கழகம் ஆகியவற்றின் மூலம், அரசு இந்த வீடுகளைக் கட்டியிருக்கிறது.

இத்திட்டத்தின்கீழ் வீடுகளைப் பெறுவதற்குத் தொழிலாளர் சட்டத்தின்கீழ் வருகிற தொழிற்சாலைகள், தொழிலாளர் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலைகள் ஆகியவற்றில் பணிபுரியும் தொழிலாளர்கள், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரிபவர்கள் ஆகியோர் தகுதி உடையவர் ஆகிறார்கள் என அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர்-மேலாண்மை இயக்குநர், இவ்வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர்களுக்கு உரிமை மாற்றம் செய்வது குறித்து எழுப்பிய சில ஐயப்பாடுகளைத் தெளிவுபடுத்தி, அண்மையில் அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. அதன்படி, விற்பனை மூலம் வீடுகளைப் பெறுவதற்குத் தகுதியுடைய, சட்டப்படியான வாரிசுதாரர்கள், சட்டத்தின்கீழ் வருகிற மற்றும் சட்டத்தின்கீழ் வராத தொழிற்சாலையில் பணிபுரிவோர், சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள் ஆகியோரைத் தெரிந்தெடுக்கும் பணியை மேற்கொள்வதற்குத் தொழிலாளர் ஆணையாளர் அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வீடுகளின் அடிமனை மற்றும் கட்டடத்தின் விலை ஆகியவற்றை நிர்ணயம் செய்வது குறித்து அரசு உத்தரவுகள் பிறப்பித்துள்ளது. தொழிலாளர் துறை ஆணையாளர், தகுதிபெறும் தொழிலாளர்களைக் கண்டறிந்து அவர்களைத் தெரிந்தெடுத்தபின்னர், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் பராமரிக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் பராமரிக்கின்ற குடியிருப்புகளைப் பொறுத்தவரையில் வீட்டுவசதி வாரியமும் பயனடைவோருக்கு அந்த மனையையும், குடியிருப்புகளையும் ஒதுக்கீடு செய்யலாம்.

தொழிலாளர் நலத்துறை ஆணையர் அல்லது அவரால் அதிகாரம் பெற்ற தொழிலாளர் நலத்துறையைச் சேர்ந்த அலுவலர் இவ்வீடுகளுக்கான விற்பனைப் பத்திரங்களை வழங்குவார்.


**பேரறிஞர் அண்ணா பட்டுக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கம் லிட்., என்.டி.ஆர்.(எச்)27,**
**நீ.5-ஏ, நடனகோபாலர் தெரு, கும்பகோணம்-612 001.**

எங்களிடம் உயர்ரக சப்புரிப் பட்டு, அசல் வெள்ளி சரிகையிலான நவீன ரகப் பட்டாடைகள் கிடைக்கும்.

**விற்பனை நிலையங்கள்**

1. சன்னதித் தெரு-திருபுவனம்
2. 2வது அக்ரஹாரம்-சேலம்
3. 'சுமங்கலி' சில்க்காம்ப்ளக்ஸ்-திருச்சி
4. கீழவெளி வீதி-மதுரை
5. எஸ்.கே.சீல்.பில்டிங்-திண்டுக்கல்
6. பூம்புகார் சில்க் ஹவுஸ்-பட்டுக்கோட்டை
7. கீழராஜ வீதி-புதுக்கோட்டை
8. 14, பெரியகடைத் தெரு, அறந்தாங்கி
9. லாரன்ஸ் ரோடு-கடலூர்
10. 240, எம்.ஜி.ரோடு-விழுப்புரம்
11. காந்தியடிகள் சாலை-கும்பகோணம்
12. சங்கம் சில்க் ஹவுஸ்-மயிலாடுதுறை

இரா.வேம்பு,
உதவி இயக்குநர் - செயலாளர்

திரு. ஏ.ராசாராமன்
தலைவர்

சொ.கு.கிருஷ்ணமூர்த்தி
துணைத்தலைவர்

**இயக்குநர்கள்**

எஸ்.மகாலிங்கம்
எம்.ஆர்.ஸ்ரீதர்
என்.பி.ராமகிருஷ்ணன்
கே.என்.இராஜாஜி
திருமதி.ஏ.கமலா
ஜி.வி.ஜெகந்நாதன்
திருமதி.எல்.ஜெயம்

சிறப்புக் கட்டுரை

# காணும் பொருளெல்லாம் கலை வண்ணம்

கலை நுணுக்கம் மிகுந்த கைவினைப் பொருட்களின் சங்கமமாகத் திகழ்வது பூம்புகார்! கைத்திறத்தைக் கடை பரப்பும் அந்தக் கவின்மிகு அமைப்பின் தோற்றம்-வளர்ச்சி-நோக்கம் ஆகியவை இந்தப் பக்கத்தில் தொடங்குகின்றன...



சென்னை அண்ணாசாலையில் உள்ள 'பூம்புகார்' விற்பனைக் கூடத்திற்குச் செல்கிறோம்.

கலை உலகமே அங்குக் காட்சியளிக்கின்றது.

காணக் கண் கோடி வேண்டும் என்பதுபோல, எதை விடுப்பது? எதை எடுப்பது?

காணும் பொருளெல்லாம் கலை வண்ணம்!

திரும்பும் திசையெல்லாம், திறமையின் பிரதிபலிப்புகள்!

பூம்புகார் - தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் கைவினைப் பொருட்களின் சங்கமம்.

ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே வருகிறோம்.

கல், மரம், மண், காகிதம், உலோகம், பஞ்சலோகம் ஆகியவற்றாலான சிற்பங்கள் - சிலைகள் - கலைப் பொருட்கள் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன.

**கலைக்கூடங்கள் ; விற்பனை நிலையங்கள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 1973-இல் தொடங்கப்பட்டது.

★ கைவினைத் தொழில்களை எல்லா வகையிலும் வளர்த்தல், ஊக்குவித்தல்.

★ கைவினைஞர்களுக்கு எல்லா வகையான உதவிகள் அளித்தல்.

★ கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களைச் சந்தையில் விற்பனை செய்தல்.

- இவை இக்கழகத்தின் குறிக்கோள்கள்.

பூம்புகாரின் கிளைக் கலைக்கூடங்கள் - விற்பனை நிலையங்கள் தமிழ்நாடு முழுவதும் உள்ளன. பிற மாநிலங்களான புதுடெல்லி, கல்கத்தா, பெங்களூர், திருப்பதி ஆகிய இடங்களில் உள்ளன.

உலோகம், சந்தன மரம், காகிதக் கூழ், பிரம்பு ஆகிய பொருட்களின் மூலம் தயாரிக்கும் 10 உற்பத்தி நிலையங்கள் தமிழகம் முழுவதும் உள்ளன.

**சாதனைக்குச் சான்று!**

பூம்புகாரின் சாதனைக்கு ஒரு சான்று - 1989-90-இல், இந்நிறுவனம் நான்கு கோடியே 66 இலட்சத்து 48 ஆயிரம் ரூபாய்க்கான கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது. இந்தவிற்பனையில்,15 இலட்சத்து 84 ஆயிரம் ரூபாய்க்கான பொருட்களை மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

அதுமட்டுமன்று, கடந்த ஆண்டு ஒரு கோடியே 12 இலட்சத்து 97 ஆயிரம் ரூபாய் அளவிற்குக் கைவினைப் பொருட்களை உற்பத்தி நிலையங்கள் மூலம் இந்நிறுவனம் உற்பத்தி செய்துள்ளது.

பொதுமக்களைக் கவர்ந்தக்க வகையில், அவ்வப்போது கண்காட்சிகளும் நடத்தப்படுகின்றன. இக்கண்காட்சிகளில் பிற மாநிலத்தவரும் பங்கு கொள்கின்றனர். ஒரே இடத்தில், பல்வேறு மாநிலங்களின் கலைப்பொருள்களைக் கண்டு களிக்கவும், விரும்பி வாங்கிச் செல்லவும் வாய்ப்பளிக்கப்படுகிறது. இதுவரை 75 கண்காட்சிகளை பூம்புகார் நடத்தியிருக்கின்றது. இதன்மூலம், ஒரு கோடியே 24 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பிற்குக் கைவினைப் பொருட்களை விற்பனை செய்துள்ளது.

இன்னொரு மகிழ்ச்சியான செய்தி, கடந்த நிதி ஆண்டில், இக்கழகம், ரூ.13.50 இலட்சத்திற்கு நிகர இலாபம் ஈட்டிச் சாதனை புரிந்துள்ளது.

இந்த நிதியாண்டில் ஜனவரி மாதம் முடிய ரூ.28.48 இலட்சம் இலாபம் எட்டியுள்ளது. இந்த ஆண்டு முடிவில் இந்நிறுவனம் ரூ.525 இலட்சங்களுக்கு விற்பனையையும், ஒன்றேகால் கோடி ரூபாய்க்குக் கைவினைப் பொருட்கள் உற்பத்தியையும் எய்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கழகம், கூடுமானவரையில் கொள்முதல் குழுக்களின் மூலம் கைவினைஞர்களிடமிருந்து கைவினைப் பொருட்களை நேரடியாகச் சரியான விலைக்கு வாங்குவதால், இடைத் தரகர்களின் ஈடுபாடும், கைவினைஞர்களிடம் குறைந்த விலைக்கு வாங்கி அதிக இலாபம் அடையும் நோக்குடன் அதிகமான

பாரெங்கும் புகழப்படும் பெருமையும் கலைநுணுக்கமும் மிகுந்தவை பைந்தமிழ் நாட்டுக் கலைப்படைப்புகள். அவை பாரம்பரியமிக்க பண்பாட்டுப் பெருமைகளோடு செய் நேர்த்தியிலும் சிறந்து விளங்குபவை அந்தக் கலைச் செல்வங்கள் குத்து விளக்கானாலும், தஞ்சாவூர்த் தட்டானாலும் சிலையோ, சிற்பமோ எதுவானாலும் எல்லாராலும் கொண்டாடப்படுகின்றன.





விலைக்கு விற்பதும் தடுக்கப்பட்டு வருகிறது.

**பூம்புகாரின் புகழ்**

பூம்புகாரின் கைத்திறம், பல இடங்களில் விளங்கி வருவதைப் பார்க்கிறோம்.

திருப்பதி கோயிலுள்ள கருட மண்டபத்திற்குத் தங்கத் தகடு வேயும் வேலை.

பாண்டிச்சேரியில் உள்ள மணக்குல விநாயகர் கோவிலுக்கு வெள்ளி ரதம்.

கர்நாடக மாநில, பெல்லாரி பொதுப்பணித் துறைக்கு வெண்கலத்தினாலான அண்ணல் காந்தியடிகள் திருவுருவச் சிலை.

திருச்சி திருவெள்ளாறையிலுள்ள புண்டரீகாட்சப் பெருமாள் திருக்கோயிலுக்கான மரத் தேர்.

பல்வேறு இடங்களில் உள்ள ஆலயங்களுக்கான கொடி மரங்கள், பித்தளை உண்டியல்கள், மரக் கதவுகள்.

இராமேஸ்வரம் கோவிலுக்கு, இரண்டாம் பிரகாரக் கட்டுமானப் பணி, அம்பாள் மண்டபக் கட்டுமானப் பணி.

ஆந்திராவிலுள்ள அன்னாவரக் கோவிலுக்குப் பித்தளையாலான வளைவுக் கம்பி வேலை.

ஸ்ரீகாளாஸ்திரி கோவிலுக்குப் பித்தளையாலான கம்பி வேலைகள்.

உத்தரப்பிரதேச மாநிலம் லக்னோவில் உள்ள ஒரு கோவிலுக்கு கல் சம்பந்தப்பட்ட வேலைகள்.

- ஆகியவை நடைபெற்று வருகின்றன.

தங்கத் தேர் மூன்று, வெள்ளித் தேர் இரண்டு பூம்புகார் உருவாக்கி வருகிறது. இவையன்றி, தங்க, வெள்ளி வேலைப்பாடுகளும் நடந்து வருகின்றன.

தமிழ்நாட்டுக் கலைஞர்களின் கைத்திறமைகள் கடல் கடந்தும் பரவி வருகின்றன.

மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, ஜெர்மனி,



சுவிட்சர்லாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு பூம்புகார்க் கலைப் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. அங்கெல்லாம் தமிழகத்தின் பெருமை பட்டொளி வீசிப் பறக்கின்றது.

பூம்புகார் விற்பனை நிலையங்களில் விற்பனைக்கு இருக்கும் கைவினைப் பொருட்களின் குறைந்த விலை ஐந்து ரூபாய்; அதிகவிலை ஒரு இலட்சம் ரூபாய்!

**புதிய புதிய திட்டங்கள்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திரு இரா. கற்பூரசுந்தரபாண்டியன், அவர்கள், இக்கழகத்தின் புதிய திட்டங்கள் குறித்து விளக்கினார் -

''கைத்திறன் வேலைப்பாடுகள் மிகுந்த பித்தளைக் கலைப் பொருள், மரத்தினாலான கலைப் பொருள், வளக்குகள் முதலிய கைவினைப் பொருட்களை, வெளிநாட்டுச் சந்தையில் விற்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. இதனை நன்கு பயன்படுத்தி, பொருளாதார வளர்ச்சியினைத் தோற்றுவிக்க இக்கழகம் முயற்சி செய்து வருகிறது.

''பழனி, கொடைக்கானல், இராமேஸ்வரம், தூத்துக்குடி போன்ற இடங்களில் 1990-91-ஆம் ஆண்டிற்குள் விற்பனை நிலையங்களை ஏற்படுத்துவதோடு அல்லாமல், அண்டை மாநிலத்தில் உள்ள செகந்தராபாத் நகரத்தில் ரூ.12 இலட்சம் செலவில் இந்திய அரசு கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையரின் உதவியுடன் ஒரு நவீன விற்பனை நிலையம் ஏற்படுத்தவும் இக்கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

''ஐந்தாண்டுக்குச் சேர்ந்தாற்போல பலவாறான கைவினைத் தொழில்கட்குரிய பயிற்சியினை அளிக்கும்பொருட்டு,

தமிழ்நாடு அரசிற்கு ரூ.75 இலட்சம் செலவில் ஒரு திட்டம் அனுப்பப்பட்டுள்ளது. இதன்மூலம் குறைந்தது 1,100 கைவினைஞர்கட்குப் பயிற்சி அளித்து ஊக்குவிக்க முடியும்.''

**இந்தியாவின் கைவினை - 1991**

1991 ஜனவரித் திங்களில் இக்கழகம், 'இந்தியாவின் கைவினை - 1991' என்னும் பெயரில் ஒரு பெரிய சிறப்புக் கண்காட்சியினை நடத்தியது. கைவினைப் பொருட்கள் தேவையுள்ள மக்களுக்கு நடுத்தரகர்களின் ஈடுபாடு இல்லாமல் நேரடியாக, சரியான விலையில் சென்றடைய வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும்.



இந்தியாவில் உள்ள பத்து மாநிலங்களைச் சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட கைவினைஞர்கள் இதில் பங்கேற்று தங்களது கைவினைப் பொருட்களை விற்று அதற்கான தொகையினை உடனடியாகப் பெற்றுச் சென்றது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இதன்மூலம், இந்திய அரசு கைவினைப் பொருள்களின் வளர்ச்சி ஆணையர் அவர்களின் பொருளாதார உதவி இல்லாமல், ஒரு சிறிய இலாபத்துடன் இக்கழகம் ரூ.7.17 இலட்சத்திற்கான கைவினைப் பொருட்களை விற்று கைவினைஞர்கட்கு உதவி செய்துள்ளது.

மேலும், இவ்வாண்டு பிப்ரவரித் திங்களில், விற்பனைச் சந்தைக்கூடம் கட்டுவதற்கும் இக்கழகம் ஏற்பாடு செய்து வருகிறது. இதற்கு இந்திய அரசின் கைவினைப் பொருட்களின் வளர்ச்சி ஆணையரிடமிருந்து நிதி உதவி கிடைக்க உள்ளது. இதனால் இந்தியாவில் உள்ள அனைத்துக் கைவினைஞர்களும் தங்களது பொருட்களை நல்ல விலையில் விற்க வாய்ப்பு ஏற்படும்.



**அட்டையில்...**

*சிற்பக் கலைஞரும், கவிஞரும் ஒருவகையில் ஒன்றுதான். கவிஞன் தன் சிந்தனையைப் பிழிந்து கவிதையை உருவாக்குகிறான். சிற்பக் கலைஞன் தன் சிந்தனையைச் சிலையாக வடிக்கிறான். அவ்வாறு உருவானதுதான் முகப்பை அலங்கரிக்கும் யாழ் நங்கை, உலோகத்தால் ஆனது. ஈரோடு சிற்பக் கலைஞர் திரு.எல்.இராதாகிருஷ்ணன் அவர்கள் உருவாக்கியது. பூம்புகார் கலைக்கூடங்களில் பல்வேறு சிற்பக் கலைஞர்களின் கைவண்ணங்களோடு, இவரது கைவண்ணத்தையும் கண்டு மகிழலாம்.*

**விளக்குகள் - ஒரு விளக்கம்**

விளக்குகளில்தான் எத்தனை வகை! குத்துவிளக்கு, காமாட்சியம்மன் விளக்கு, மகர விளக்கு, தோரண விளக்கு, தூண்டாமணி விளக்கு, இப்படி எத்தனையோ உள்ளன.

அவற்றையெல்லாம் ஒருசேரக் காணலாம் பூம்புகார் விற்பனைக் கூடத்திலே!

விளக்குகள் நாச்சியார்கோவில், வாகைக்குளம், மதுரை ஆகிய இடங்களில் உருவாக்கப்படுகின்றன. சுமார் 8 அடி உயர விளக்குகள் தயாரிக்கலாம். விசித்திரமான சித்திர வேலைப்பாடுகளுள்ள விளக்குகளும் உண்டு.

**அதே வேலை நுணுக்கத்துடன் - அற்புதக் கலைஞர்கள்**

சோழர் காலத்தில் புகழ்பெற்ற உலோக விக்கிரகங்கள் போன்று இன்றும் தஞ்சாவூர் சுற்றியுள்ள சில சிற்பக் கலைஞர்கள், அதே வேலை நுணுக்கத்துடனும் ஆர்வத்துடனும் சிற்பங்களை உருவாக்கி வருகிறார்கள். உலோகத்தாலான தஞ்சாவூர் விளக்குகள் நல்ல அழகிய வேலைப்பாடுகளுடன் செய்யப்பட்டு - ரூ.35-லிருந்து விற்பனை செய்யப்படுகிறது.

மதுரை, சேலம், கன்னியாகுமரி, திருச்சி மாவட்டங்களில் இம்மாநிலத்தின் பாரம்பரியத் தொழிலான மரக் கைவினைப் பொருட்கள் அதிக அளவில் தயாரிக்கப்படுகின்றன.

கைவினைப் பொருட்களில் புகழ்பெற்ற தஞ்சாவூர்த் தட்டு, மூங்கில் நாற்காலிகள், அலங்கார உடைகள், கோயில் அணிகலன்கள் ஆகியவை பூம்புகாரில் விற்பனை செய்யப்படும் பொருள்களில் குறிப்பிடத் தக்கவையாகும்.

தமிழ்நாட்டில் பாரம்பரியமான கைவினைப் பொருட்கள் அழியா வண்ணம் அவற்றைக் காப்பாற்றுவதுடன், சிற்பக்கலை, உலோகம், மர கைவினைப் பொருட்கள் தயாரிப்பதிலும் பூம்புகார் நிறுவனம் முதலிடம் வகிப்பது - பாராட்டுதற்குரியதாகும்.

**தமிழகத்தின் பெருமை தரணியெங்கும் பரவிட**

திறமை வாய்ந்த கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கும், சிற்பக் கலைஞர்களுக்கும் வேலை வாய்ப்பினை உருவாக்கி, அதேசமயத்தில் அவர்கள் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்திட பூம்புகார் செவ்வனே செயலாற்றி வருகின்றது.


தமிழகத்தின் பெருமையை, கலைச் சிறப்பைத்தரணியெங்கும் பறை சாற்றுவதுடன், கைவினைஞர்களுக்கு ஒரு கணிசமான தொகை ஊதியமாகக் கிடைக்கவும், அவர்களின் பொருட்களுக்கு ஓர் உறுதியான நிரந்தர விற்பனைக்கு வழிகோலவும் பூம்புகார் பெரும் பணியாற்றி, பேரும் புகழும் பெற்று வருகிறது என்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும்.

**பி.வி. கிரி**

# படமும்...

சென்னை மணலியில் கட்டப்பட்ட மேம்பாலத்தை மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண்சிங் அவர்கள் திறந்து வைத்தார். ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.இராமச்சந்திரன், அவர்களும் விழாவில் கலந்து கொண்டார் (8.3.91).





மேதகு ஆளுநர் திரு. பீஷ்ம நாராயண் சிங் அவர்கள் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பிலான இரும்பு மற்றும் எஃகு அங்காடி வளாகத்தைச் சென்னையை அடுத்த சாத்தங்காட்டில் திறந்து வைத்தார். மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு. வி.இராமச்சந்திரன் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார் (8.3.91).








மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.கார்த்திகேயன் அவர்கள் தலைமைச் செயலகத்தில் தமிழ்நாடு தரைப் படை, கடற்படை மற்றும் வான்படை வீரர்களின் கூட்டத்தில் கலந்துகொண்டார் (11.3.91).



சென்னை மாநகராட்சிப் பள்ளி சாரண சாரணியர் தேசிய மாணவர் படையினர் ஆகியோரை ஈடுபடுத்தி, சென்னை மாநகராட்சிப் பள்ளிகளையும் அவற்றின் சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்திருக்கப் பள்ளித் துப்புரவு இயக்கத்தைத் தமிழ்நாடு அரசுத் தலைமைச் செயலர் திரு. டி.வி.அந்தோணி அவர்கள் நுங்கம் பாக்கத்திலுள்ள மாநகராட்சிப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைத்தார் (9.3.91).



மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு.வி.இராமச்சந்திரன் அவர்கள் அகில இந்தியக் கீழ்த்திசை ஆராய்ச்சிப் போட்டிகளைச் சென்னை எத்திராஜ் மகளிர் கல்லூரி யில் தொடங்கி வைத்தார் (9.3.91).

# ...செய்தியும்

அரசுத் துறைகளுக்கான பொருள் வழங்கல்

# தமிழகத்தின் பங்கு அதிகரிக்கும்

அரசுத் துறைகளுக்குக் கொள் முதல் செய்வதற்கு இந்திய அரசின் அமைப்பான பொருள் வழங்கல் - விற்பனைத் தலைமை இயக்குநரகம் பொறுப்புடையது. அவ்வமைப்பு ஓராண்டில் ரூ.3,200 கோடிக்குக் கொள்முதல் செய்து வருகிறது.

தென் மாநிலங்களில், குறிப்பாக தமிழ்நாட்டில் செய்யப்படும் கொள் முதலின் அளவு தொடர்ந்து மிகவும் குறைவாக இருந்து வருகிறது. இக் குறைவான பங்கு குறித்து தொடர்ந்து கவலை கொண்ட மாநில அரசு, இந்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றது. மாநில அரசின் முறையீடுகளின் விளைவாகப் பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் மண்டல அலுவலகம் சென்னையில் தற்போது திறக்கப்பட்டுள்ளது. அவ்வலுவலகம் பதிவு செய்தல், ஒப்பந்தப்புள்ளிகள் வெளியிடுதல் ஆகிய அதிகாரங்கள் கொண்டதாகச். செயல்பட்டுவருகிறது.

இது சம்பந்தமான நடவடிக்கை களை மேலும் விரைவுப்படுத்த 26.2.1991-ஆம் ஆண்டு தொழில் துறைச் செயலாளர் அவர்களால் ஒரு கூட்டம் நடத்தப்பட்டது. அதில் இயச்குநர், பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககம், தலைவர்-நிர்வாக இயக்குநர், சிறு தொழில் வளர்ச்சிக் கழகம், ஆணையர்- இயக்குநர், தொழில்-வணிகத்துறை-சிறு தொழில் சங்கங் களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலே குறிப் பிட்ட கொள்முதலில் தமிழ்நாட்டில் குறைவான பங்கிற்கான காரணங்கள் நுணுக்கமாக விவாதிக்கப்பட்டன. விவாதத்திற்குப் பின் பின்வரும் முக்கியமான முடிவுகள் எடுக்கப் பட்டுள்ளன:

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்ககத்தின் அமைப்பு மற்றும் வழிமுறைகளைச் சரிவர தொழில் முனைவோர்கள் அறியா மலிருப்பது ஒரு முக்கியக் காரண மாகக் கருதப்பட்டது. எனவே, தொழில் அதிபர்களிடையே இது பற்றிய ஒரு விழிப்புணர்வை ஏற் படுத்தும் வகையில் அனைத்து மாவட்டத் தலைமையிடங்களில் கருத் தரங்குகள் தொடர்ந்து நடத்துவது என்று முடிவுசெய்யப்பட்டது. இக் கருத்தரங்குகளை நடத்துவதில் தமிழ் நாடு சிறு தொழில் சங்கங்களின் இணையம் முக்கிய இடம் வகிக்க இசைவு தெரிவித்துள்ளது. இதற்குத் தேவையான பாடத் திட்டங்களும், கருத்தரங்கு நடத்த வழி முறைகளும் வகுக்கப்படும். சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இக்கருத்தரங்கு களை நடத்த இணைந்து செயல் படும். இனிவரும் மூன்று மாதங் களில் எல்லா மாவட்டங்களும் இக்கருத்தரங்குகளில் பங்கேற்க வாய்ப்பளிக்கப்படும்.

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் ஒப்பந்தப் புள்ளிகளில் சிறு தொழில் பிரிவு களுக்காகச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் பங்கு பெற்றால் கொள்முதல் செய்யப்படும் தொழிற் பிரிவுகளை ஆய்வு நடத்துவது தவிர்க்கப்படுகின் றது.

> கல்வியும், சுயமரியாதை எண்ணமும், பகுத்தறிவுத தன்மையுமே தாழ்ந்து கிடக்கும் மக்களை உயர்த்தும்.
>
> — தந்தை பெரியார்

★ வெளியிடப்படும் பல்வேறு ஒப் பந்தப் புள்ளிகளில் குறிப்பிடப் படும் வரைவு படங்களும் அளவுக் குறிப்புகளும் கிடைக்கப் பெறாமை தொழிலதிபர்களுக்குள்ள மற்றொரு பிரச்னையாகும். பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்குநரின் மண்டல அலுவலர் மேலே குறிப் பிட்ட வரைபடங்கள் கிடைக்க ஏற்பாடு செய்வதாகக் குறிப்பிட்டுள் ளார். மேலும் சிறு தொழில் வளர்ச் சிக் கழகம் இத்தகைய வரைபடங் களையும், அளவுக் குறிப்புகளையும் பெற்று தேவைப்படுவோருக்குக் கிடைக்க வழிவகை செய்ய இசைவு தந்துள்ளது.

★ பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககம்- பாதுகாப்புத் துறை ஆகியவை வெளியிடும் ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களைப் பெற்று தெரிவிப்பதில் டெல்லியில் உள்ள தனது அலுவலகத்தை முடுக்கிவிட்டு செயல்படுத்துவதற்குச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் ஒப்புக் கொண் டுள்ளது.

★ பொருள் வழங்கல்-விற்பனை தலைமை இயக்ககம் தற்போது கொள்முதல் செய்யும் பொருள்கள் குறித்து விரிவாக ஆய்வு நடத்துவது. பொருள்களை விற்பனை செய்யும் திறனுள்ள தொழில் அலகுகளையும் கண்டறிவது என்று முடிவு செய்யப் பட்டது. அத்தகைய தொழில் அலகு களை, பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககத்தில் பதிவு செய்து கொள்ள ஊக்குவிப்பது என்றும் முடிவு செய்யப்பட்டது.

★ ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழைப் பெறுவதற்குத் தொழில் அதிபர் களை ஊக்குவிப்பதற்கும், அச் சான்றிதழ் பெறுவதற்கான செலவில் ஒரு பகுதியை வழங்கவும் தொழில் ஆணையர்- தொழில் வணிக இயக்குநர் ஒப்புக் கொண்டுள்ளார்.

★ பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்குநரின் மண்டல அலுவலகம் ஒப்பந்தப் புள்ளிகளின் விவரங்களைச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் தமிழ்நாடு சிறு தொழில் சங்கங்கள், பதிவு செய் துள்ள தொழிலதிபர்களுக்குத் தொடர்ந்து வழங்கி வரும்.

★ தொழில் பிரிவுகளுக்கும், பொருள் வழங்கல் விற்பனைத் தலைமை இயக்ககத்திற்கும் இடையே அனைத்து நிலைகளிலும் ஏற்படும் பிரச்னை களை விரைவில் தீர்த்து வைக்கும் முகவராகச் சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் செயல்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டது.

இத்தகைய நடவடிக்கைகளால் பொருள் வழங்கல்-விற்பனைத் தலைமை இயக்ககத்தின் கொள் முதலில் தமிழ்நாட்டின் பங்கு நாளடைவில் மேலும் அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது.

ஆசிரியரும் வெளியிடுபவரும் தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை. அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண் : 868926, 868927

எளிமையானவை! நேர்த்தியானவை!
மேன்மை மிகுந்தவை!
தோற்றம் அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்
தமிழ்நாடு கைத்தறி

★ பருத்தி, பாலியஸ்டர், பட்டுச் சேலைகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சர்ட்டிங்ஸ், பட்டுத் துணிகள்.
★ பருத்தி, பாலியஸ்டர் சூட்டிங்ஸ்.
★ லுங்கிகள், துவாலைகள், வேட்டிகள்.
★ படுக்கை விரிப்புகள், அலங்காரத் துணி வகைகள்.

அருகாமையில் உள்ள கோ-ஆப்டெக்ஸ் விற்பனை நிலையத்தை அணுகவும்.

பதிவு எண். M. 8676
Licence No. TN/MS(C)/PP-23

தமிழரசு

